REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN
தினகரன்
2023 ஏப்ரல் 26 புதன்கிழமை

வரு. 91 இல. 97 | Wednesday 26, April, 2023 | 16பக்கங்கள் | 50/-

## சுற்றுலா விடுதிகளின் பாதுகாப்பை உறுதிசெய்யவும்

**கொழும்பு விடுதிகளுக்கு சாகல அறிவுறுத்தல்**



கொழும்பு சுற்றுலா விடுதிகள் மற்றும் அவற்றுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு தேசிய பாதுகாப்பு 06

**IMF ஒப்பந்தத்துக்கு ஏற்பவே சில வரி விதிப்புகள்**

## பொருளாதார முன்னேற்றத்துக்கு அரச ஊழியரின் ஒத்துழைப்பு மிக அவசியம்

**குறுகிய காலத்துக்கு துயரங்களை சகித்துக்கொள்ள அரசு கோரிக்கை**




சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்துக்கேற்ப செயற்படாமல் வரிச் சலுகைகள் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முடியாது. எனவே அரச உத்தியோகத்தர்கள் குறுகிய காலத்துக்கு துயரங்களை சகித்துக்கொண்டேனும் பொருளாதார முன்னேற்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார். 06

## சூடானில் சிக்கியுள்ள இலங்கையர் குறித்து அரசு தீவிர அக்கறையுடன்

**அடுத்த சில நாட்களில் பாதுகாப்பாக வெளியேற்ற நடவடிக்கை**



சூடானில் சிக்கியுள்ள இலங்கையரை அடுத்த சில நாட்களில் பாதுகாப்பாக வெளியேற்ற முடியுமென வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அலி சப்ரி தனது டுவிட்டர் பதிவிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

சூடானில் இடம்பெறும் வன்முறைகள் குறித்து நாங்கள் கரிசனை கொண்டுள்ளோம். மோதல்களை 06

**சுற்றுலாத்துறைக்கு தாக்கம், அழகான நகருக்கும் கேடு**

## நுவரெலியாவில் 04 மாடிகளுக்கு மேல் கட்டடம் கட்ட கட்டுப்பாடு

**ஜனாதிபதியின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்**

நுவரெலியா மாவட்டத்தில் எதிர்வரும் மே முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் 04 மாடிகளுக்கு மேல் புதிய கட்டடங்களை நிர்மாணிப்பதை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தலைமையில் கூடிய அமைச்சரவையில் இவ்வாறு இணக்கம் காணப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபை



சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக ஒழுங்குமுறைகளை இதற்கென அமுல்படுத்துவதற்கு 06

**நாட்டில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ**

# கல்வி முறையை சீர்குலைக்க எவருக்கும் இடமளியேன்

**மாத்தறை ராஹுல கல்லூரி நூற்றாண்டு விழாவில் ஜனாதிபதி தெரிவிப்பு**

நாட்டின் கல்வி முறையை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சீர்குலைக்க எவருக்கும் இடமளிக்க முடியாது. தேவைப்பட்டால் அதற்கு எதிராக சட்டங்கள் கொண்டு வரப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் கல்வி தொடர்பான புதிய அமைச்சரவைக் குழுவொன்று நியமிக்கப்பட்டதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அதில் தானும் கல்வி அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள் சிலரும் உள்ளடங்குவதாகவும் தெரிவித்தார்.

**21ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ற கல்வி முறையை உருவாக்கி, சர்வதேசத்தில் இலங்கையின் பெயர் உயர்ந்த நிலையில் வைக்கப்படும்**

மாத்தறை ராஹுல கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் (25) கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நூற்றாண்டு விழாவுடன் இணைந்ததாக 'வித்யாபிமானி' 06






சீன அரசினால் நன்கொடையாக வழங்கப்பட்ட கொழும்பு தேசிய வைத்தியசாலையின் 08 மாடிகளைக் கொண்ட புதிய வெளிநோயாளர் பிரிவுக் கட்டடம், இலங்கை அரசிடம் உத்தியோகபூர்வமாக நேற்று கையளிக்கப்பட்டது. சீனத் தூதுவர் Qi Zhenhong, சுகாதார அமைச்சர் கலாநிதி கெஹலிய ரம்புக்வெல்லவிடம் இதற்கான ஆவணங்களை கையளித்தார். சீனத் தூதுவருக்கும் அமைச்சருக்குமிடையே ஒப்பந்தங்களும் பரிமாறப்பட்டன. (படங்கள்: சுதத் நிசாந்த)



**எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தம்**

**வழக்குத்தாக்கலை தடுக்க 250 மில். டொலர் லஞ்சம் வழங்கப்பட்டுள்ளது** 03

## பல்கலைக்கழக பேராசிரியர்களின் கோரிக்கைகளுக்கு சாதகமான பதில்

**A/L விடைத்தாள் திருத்தும் பணி இன்று முதல் ஆரம்பமாகலாம்**

லோரன்ஸ் செல்வநாயகம்



பல்கலைக்கழக பேராசிரியர்களின் கோரிக்கைகளுக்கு சாதகமான பதில் வழங்கப்பட்டுள்ளதால் பெரும்பாலும் இன்று முதல் உயர்தர பரீட்சை விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படலாமென கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த சபையில் நம்பிக்கை வெளியிட்டார்.

பத்து வகையான பாடப்பிரிவு விடைத்தாள்களை திருத்துவதற்கு 06

## அதிகரிக்கப்பட்ட எரிபொருள் ஒதுக்கீடு மறு அறிவித்தல் வரை தொடரும்

**மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன தெரிவிப்பு**

பண்டிகைக் காலத்தில் அதிகரிக்கப்பட்ட எரிபொருள் ஒதுக்கீடு மறு அறிவித்தல் வரையில் மாற்றம் இல்லாமல் தொடர்ந்தும் நடைமுறையிலிருக்குமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கடந்த வாரம் வரை எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டதுடன், பின்னர் மேலும் ஒரு வாரத்துக்கு அது நீடிக்கப்பட்டது.

அந்த எரிபொருள் ஒதுக்கீட்டு அதிகரிப்பை மறு அறிவித்தல் 06

## உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தில் எந்த உள் நோக்கமும் இல்லை

**மக்களினதும், நாட்டினதும் பாதுகாப்பை உறுதி செய்வதே நோக்கம்**

பொது மக்களின் உயிரைப் பாதுகாத்து தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் பயங்கரவாதமற்ற நாட்டை உருவாக்குவதே உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை நாட்டுக்கு அறிமுகப் படுத்துவதற்கான நோக்கமென அமைச்சரவை பேச்சாளர்



அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை நாட்டுக்கு அறிமுகப்படுத்துவதற்கான வேறு எந்த மறைமுக நோக்கமும் இல்லையென்பதால் பொருத்தமான எந்தவொரு திருத்த 06

**பயிற்சி பெற்ற தாதியருக்கு உலகில் வேலைவாய்ப்பு**

## ஆட்கடத்தல்காரர்களிடம் எவரும் சிக்கிவிட வேண்டாம்

**அமைச்சர் மனுஷ நாணயக்கார எச்சரிக்கை**




லோரன்ஸ் செல்வநாயகம்

உலகளவில் சுமார் 36,000 மில்லியன் தாதியருக்கான கேள்வி காணப்படுகிறது. இலங்கையிலிருந்து அதற்கென பயிற்சி பெற்ற பெருமளவு தாதியரை அனுப்புவதற்கான நடவடிக்கைகளை வெளிநாட்டு 06

**யாழ். நெடுந்தீவு ஐவர் படுகொலை**

## சந்தேக நபருக்கு மே. 09 வரை விளக்கமறியல் நீடிப்பு



யாழ். விசேட, யாழ். குறூப் நிருபர்கள்

நெடுந்தீவில் ஐந்து முதியவர்களை வெட்டிப் படுகொலை செய்ததுடன் 100 வயதான மூதாட்டிக்கு கடும் காயங்களை ஏற்படுத்தி, தங்க நகைகளை கொள்ளையடித்த குற்றச்சாட்டில் கைதான நபரை எதிர்வரும் 09ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதவான் 06

## மோதரவில் சட்டவிரோத மருந்து உற்பத்தி நிலையம்

**பொலிஸாரால் முற்றுகையிட்டு விசாரணை**



கொழும்பு 15, முகத்துவாரத்திலுள்ள சட்டவிரோத மருந்து உற்பத்தி நிலையமொன்று சுற்றிவளைக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. 06

**நாட்டில் பல வருடங்களின் பின்னர்**

## மலேரியாவால் ஒருவர் உயிரிழந்த சம்பவம் பதிவு

**தன்சானியா சென்று திரும்பியவர் எனவும் பதிவு**



பல ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கையில் மலேரியாவினால் பாதிக்கப்பட்ட ஒருவர் மரணமான சம்பவம் பதிவாகியுள்ளது.

மாணிக்கக்கல் தொடர்பான வர்த்தக நோக்கத்துக்காக தன்சானியாவுக்குச் சென்று திரும்பிய 06

**சூட்சுமமான முறையில் மரப்பெட்டிகளில்**

## ரூ.08 கோடி பெறுமதியான 12 Kg 'குஷ்' போதைப்பொருள் சிக்கியது

**சுங்க அதிகாரிகளால் ஒருவர் கைது**



கனடாவிலிருந்து இலங்கையர் ஒருவருக்கு அனுப்பப்பட்ட பெட்டியொன்றுக்குள் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 84 மில்லியன் ரூபா பெறுமதியான 12 கிலோ குஷ் ரக போதைப்பொருளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

பேலியகொடையிலுள்ள வெளிநாட்டுப் பொருட்கள் களஞ்சிய நிலையமொன்றில் இவை கைப்பற்றப்பட்டதாக சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர்.

பேலியகொடையிலுள்ள நிறுவனம் ஒன்றினூடாக யாழ்ப்பாணத்தில் வசிக்கும் நபருக்கு கனடாவில் வசிக்கும் நபர் அனுப்பிய பொருட்களடங்கிய 02 மரப்பெட்டிகளை 06



**உயிர்த்த ஞாயிறு விசாரணை அறிக்கை ஆயர் பேரவைக்கு**


**அமைச்சர் டிரான் அலஸ் வழங்கி வைத்தார்** 03

**விபத்தில் சிக்கி உயிரிழந்த இளைஞன்**

## 05 பேருக்கு உடல் உறுப்புகளை தானம் செய்து வாழ்வளிப்பு

வீதி விபத்தில் உயிரிழந்த இளைஞனின் 05 உடல் உறுப்புக்கள் தானம் செய்யப்பட்ட நெகிழ்ச்சிச் சம்பவம் மட்டக்களப்பு, சித்தாண்டியில் இடம்பெற்றுள்ளது.

வயல்வேலை முடித்து கிரான் பகுதியிலிருந்து 06





**புலிகள் புதைத்து வைத்த தங்கத்தை தேடிய 07 பேர்**

**முல்லைத்தீவில் பொலிஸார் அதிரடி** 03

## இந்தோனேசிய சுமத்ரா தீவில் பாரிய நில நடுக்கம் பதிவு

**இலங்கைக்கு எவ்வித ஆபத்தும் இல்லையென அறிவிப்பு**

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவுக்கு மேற்குப் பகுதியில் ஏற்பட்ட நில நடுக்கத்தினால் இலங்கைக்கு எந்த சுனாமி ஆபத்தும் இல்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ள வளிமண்டலவியல் 06



# நகர்வலம்



## கொழும்பில் உலக புவி தினக் கொண்டாட்ட நிகழ்வு





உலக புவி தின அமைப்பினால் இம்முறை உலக புவி தினத்தை முன்னிட்டு 'எமது பூமியில் முதலீடு செய்வோம்' எனும் தொனிப்பொருளில் உலக புவி தின விழா 24ஆம் திகதி திங்கட்கிழமை சுற்றாடல் அமைச்சில் நடைபெற்றது. இந் நிகழ்வில் சுற்றாடல் அமைச்சர் பொறியியலாளர் நசீர் அஹமட் மற்றும் செயலாளர் விசேட மருத்துவர் அனில் ஜாசிங்க தலைமையில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் 75 பாடசாலை மாணவர்கள் மற்றும் அமைச்சு அதிகாரிகள் உட்பட 178 பேர் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில் புவி தினத்தின் முக்கியத்துவம் மற்றும் இயற்கை வளங்களை எதிர்கால சந்ததிக்கு பாதுகாப்பது தொடர்பில் நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் செயற்படும் ஒன்றிணைந்த நீர் மூல மற்றும் நீர் வள முகாமைத்துவ திட்டத்தின் சுற்றாடல் நிபுணர் டீ.எம். அனுருத்த தென்னகோனினால் முதல் விரிவுரை நடத்தப்பட்டதோடு காலநிலை மாற்றம் மற்றும் புவி வெப்பமாதல் தொடர்பிலான இரண்டாவது விரிவுரையை ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தி திட்டத்தின் தலைமை தொழில்நுட்ப நிபுணர், கலாநிதி ஜகத்தேவ விதானகமகேயினால் நடத்தப்பட்டது.

இதில் பங்கேற்ற பாடசாலை மாணவர்களுக்காக சுற்றுச்சூழல் சார்ந்த தகவல்கள் உள்ளடங்கிய புத்தக தொகுதிகள் வழங்கப்பட்டன.

## தானியங்களின் விளைச்சல் அநுராதபுரத்தில் அதிகரிப்பு

**அநுராதபுரம் மாவட்ட குறூப், அநுராதபுரம் தினகரன் நிருபர்கள்**

### விவசாயிகள் இரட்டிப்பு மகிழ்ச்சி



அநுராதபுரம் மாவட்டத்தில் எள், கடுகு மற்றும் உழுந்து பயிர்ச்செய்கைகள் வெற்றிபெற்றுள்ளதாக மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

கோடைக்காலத்தில் முற்றிலும் மழை நீரை மட்டும் எதிர்பார்த்து மேற்கொள்ளப்படும் இப்பயிர்ச் செய்கையில் இம்முறை அநுராதபுரம் மாவட்ட விவசாயிகள் ஆர்வம் காட்டியதுடன் அதற்கான ஆலோசனைகளும் உதவிகளும் விவசாய திணைக்கள அதிகாரிகளினால் வழங்கி வைக்கப்பட்டதாக மாவட்ட விவசாயத் திணைக்கள பணிப்பாளர் காரியாலய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதன்படி ஹொரொவ்பொத்தான, கஹட்டகஸ்திகிலிய, மதவாச்சி, கெப்பித்திகொள்ளாவ, றம்பேவ, பலாகல, திறப்பனை, மிஹிந்தலை, அநுராதபுரம் மேற்கு, அநுராதபுரம் கிழக்கு, கெக்கிராவ, நொச்சியாகம, தம்புத்தேகம, றத்மல்கஹவெவ ஆகிய பிரதேசங்களிலேயே அதிகளவாக எள், கடுகு மற்றும் உழுந்து ஆகிய பயிர்ச்செய்கைகள் இடம் பெற்றுள்ளன.

சுமார் 25 ஆயிரம் ஹெக்ரயர் நிலப்பரப்பில் உரிய காலப்பகுதியில் பயிர்செய்யப்பட்டு விவசாயிகள் எதிர்பார்த்தவாறு மழைநீரும் கிடைத்ததால் நல்ல முறையில் பயிர்கள் செழித்து வளர்ந்துள்ளன.

எந்த ஒரு உரப்பாவனையும் இரசாயன களைக் கொல்லிகள், பூச்சி கொல்லிகளும் பயன்படுத்தாமல் மேட்டு நிலச்செய்கையாக நடைபெறும் இப்பயிர்ச்செய்கை வெற்றி அடைந்துள்ளதால் விவசாயிகள் பலர் மகிழ்ச்சி அடைந்துள்ளதுடன் நீண்ட இடை வெளிக்குப் பின் அவர்களது இலாபமும் இரட்டிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது.



எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இஷாக் ரஹுமான், ரோஹன பண்டார ஆகியோர்களுடன் கெப்பித்திகொல்லாவ கல்வி வலயத்திற்குட்பட்ட வீரச்சோலை முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு அண்மையில் விஜயம் செய்தார். பிரபஞ்சம் செயற்திட்டத்தி கீழ் கணினி அறைக்கு தேவையான ஐந்து கணினிகள், அச்சுப்பொறி மற்றும் ஸ்மார்ட் பலகை உள்ளிட்ட பொருட்களை வித்தியாலய அதிபர் எம்.ஐ.நதீர் ஹம்சாவிடம் வழங்கிய போது பிடித்த படம்.

(படம்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

## காணித் தகராறு; 74 வயது முதியவர் மண்வெட்டித் தாக்குதலில் பலி

**அநுராதபுரம் மேற்கு தினகரன், கல்நேவ தினகரன் விசேட நிருபர்கள்**

காணி தகராறு காரணமாக 60 வயதுடைய நபரொருவர் தனது மூத்த சகோதரியின் கணவரை (வயது 74) மண்வெட்டியால் தாக்கி கொலை செய்துள்ளதாக கல்நேவ பொலிஸார் தெரிவித்தனர்.

146 ஹெலபதுகம கல்நேவ பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவரே மேற்படி தாக்குதலில் உயிரிழந்துள்ளார். குறித்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய ஹெலபதுகம பகுதியைச் சேர்ந்த 60 வயது சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதான நபர் கடந்த 16 ம் திகதி ஹெலபதுகம பகுதியில் உள்ள நெல் வயல் ஒன்றில் வேலை செய்துகொண்டிருந்த போது குறித்த இடத்திற்கு சென்று அவரது மூத்த சகோதரியின் கணவருக்கும் அவருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது. அதன் போது சந்தேக நபரான சகோதரர் சகோதரியையும் அவரது கணவரையும் தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தில் பலத்த காயத்திற்குள்ளான இருவரையும் கல்நேவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சகோதரியின் கணவர் உயிரிழந்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## ஊடகவியலாளர் ரசூல்தீன் கொரிய விஜயம்

**ருஸைக் பாரூக்**



கொரிய தலைநகரில் நேற்று 25 ஆம் திகதி ஆரம்பமான உலக ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கொழும்பு டைம்ஸின் பிரதம ஆசிரியர் மொஹமட் ரசூல்தீன் கொரிய தலைநகர் சியோலுக்கு சென்றுள்ளார். ரசூல்தீன் இலங்கையில் அரபு செய்திகளுக்கான பிரதான நிருபராகவும் பணிபுரிந்து வருகிறார்.

ஊடக மாநாட்டில் கலந்து கொள்வதற்காக 48 நாடுகளில் இருந்து சுமார் 54 பிரதிநிதிகள் சியோலில் உள்ள 'President' ஹோட்டலுக்கு ஏற்கனவே வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் அறிவோர் ஒன்றுகூடல்

கொழும்பு தமிழ்ச் சங்க இலக்கியக்குழுச் செயலாளர் தெ. மதுசூதனன் தலைமையில் இன்று (26) புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவிருக்கும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் “தெற்கின் உழைக்கும் மக்கள் போராட்டமும் தமிழ் மக்களும்” எனும் தலைப்பில் ஊடகவியலாளரும் சமூக செயற்பாட்டாளருமான நடராஜா ஜனகன் உரை நிகழ்த்துவார்.

## களுத்துறை பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பிரியாவிடை வைபவம்

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**

களுத்துறை பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சியை முடித்துக் கொண்ட உதவி பொலிஸ் பரிசோதகர்களின் பிரியாவிடை நிகழ்வு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தலைமையில் பொலிஸ் மா அதிபர் சீ.டீ. விக்ரமரத்னவின் பங்களிப்புடன் கல்லூரியின் அலுவிஹாரை விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்றது.

இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு உதவி பொலிஸ் பரிசோதகர்களாக சேர்த்துக்கொள்ளப்பட்ட 189 பேர் இந்த பயிற்சி அணியில் இடம் பெற்றிருந்தனர்.

இவர்களில் 167 ஆண் உதவி பொலிஸ் பரிசோதகர்களும் 22 பெண் உதவி பொலிஸ் பரிசோதகர்களுமாவர். இந்த அணியில் முப்பது பட்டதாரிகளும் நாற்பத்திமூன்று டிப்ளோமாதாரிகளும் உள்ளடங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் பட்டப்படிப்பு தொடர்வோர்களும் இந்த அணியில் உள்ளடங்கியுள்ளனர். சிறந்த ஆண் மற்றும் பெண் உப பொலிஸ் பரிசோதகர்களாக முறையே சரித் ரஜீவ, திலினி சிறிவர்தன ஆகியோர் தெரிவாகினர். விஷேட திறமையாளர்களாக தெரிவானவர்களுக்கு அமைச்சரினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## SLPP செயற்பாட்டாளர்களின் விசேட ஒன்றுகூடல் நிகழ்வு

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**





பாணந்துறை நகர சபை மற்றும் பிரதேச சபைக்கு பொதுஜன முன்னணியில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்களுக்கான விசேட ஒன்றுகூடல் அண்மையில் பாணந்துறையில் நடைபெற்றது.

களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ரோஹித அபேகுணவர்தனவின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கட்சியின் மறுசீரமைப்பு தொடர்பாக கட்சி ஆதரவாளர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டதுடன், கட்சி செயற்பாட்டாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டன.

இக்கூட்டத்தில் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சஞ்சீவ எதிரிமான்ன, பாணந்துறை பிரதேச சபை முன்னாள் தலைவர் உள்ளிட்ட வேட்பாளர்களும் கலந்து கொண்டனர்.



பேருவளை, சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலில் (23) நடைபெற்ற அஷ்ஷெய்கு உதுமான் லெப்பை அப்பா வலியுள்ளாஹ் அவர்களின் பெயரிலான வருடாந்த நினைவு தின மஜ்லிஸில் மௌலவி பஸ்லான் அஷ்ரபி உரை நிகழ்த்துவதையும் கலீபதுஷ்ஷாதுலி செய்னுலாப்தீன் பஹ்ஜி, கலீபதுஷ்ஷாதுலி ரபீக் பஹ்ஜி மற்றும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.



புதுச்செட்டித் தெரு சத்திய சாயி பாபா மத்திய நிலையத்தில் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் "ஆராதனா மகோற்சவம் 2023" திங்கட்கிழமை காலை ஆலய பிரதம அறங்காவலர் எஸ்.என். உதயநாயகன் தலைமையில் நடைபெற்றது. சிவஸ்ரீ ஸ்ரீ காந்தகுருக்கள் கிரியைகளை நடத்தி வைத்து பாபாவின் ஐம்பொன்னினாலான சிலைக்கு அபிஷேகம் செய்வதையும் வசந்த மண்டபத்தில் அலங்கார தீபத்தை காண்பிப்பதையும் கலந்து கொண்ட சாயி பக்தர்கள் பஜனை இசைப்பதையும் காணலாம்.

## வறிய குடும்பங்களுக்கு பண வவுச்சர்



**ருஸைக் பாரூக்**

ரமழான் மற்றும் ஈதுல் பித்ர் பண்டிகையை சிறப்பாக கொண்டாடுவதற்கு உதவியாக ஸ்ரீலங்கா இஸ்லாமிய நிலையம் 8,000 ரூபா பெறுமதியான பண வவுச்சர்களை மாளிகாவத்தை பிரதேசத்தில் உள்ள 160 வறிய குடும்பங்களுக்கு வழங்கியது. இந்நிகழ்வு கடந்த 19ம் திகதி கொழும்பு இஸ்லாமிய நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. இஸ்லாமிய நிலையம் ஒவ்வொரு வருடமும் ரமழான் மாதத்தில் கிட்டத்தட்ட 1000 உலர் உணவுப் பொதிகளை விநியோகம் செய்கிறது. இந்த ஆண்டு அப்பகுதி மக்களுக்கு தேவையான பொருட்களை வாங்குவதற்காக பண வவுச்சர்களை வழங்கினர்.

இஸ்லாமிய நிலையத்தின் தலைவர் மற்றும் சவூதி அரேபியாவின் முன்னாள் தூதுவருமான ஹுசைன் மொஹமட் வறிய குடும்பங்களுக்கு பண வவுச்சர்களை வழங்கினார். இந் நிகழ்வில் இஸ்லாமிய நிலையத்தின் செயலாளர் ஷாகுல் ஹமீட் முஹம்மத், நிர்வாக சபை உறுப்பினர் அக்பர் கரீம், பணிப்பாளர் மௌலவி எம்.பி.எம். ஜரூக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ரமழான் கால வினா விடை போட்டி



நாச்சியாதீவு அந் நூர் இளைஞர் கழகம் இம்முறை பாடசாலை மாணவர்களுக்காக ஏற்பாடு செய்த "முஸாபகது ரமழான்" ரமழான் கால விசேட கேள்வி பதில் போட்டி நிகழ்ச்சியின் இறுதி வெற்றியாளர்களை தெரிவு செய்யும் விசேட நிகழ்வொன்று ரமழான் 27 ஆம் இரவு நாச்சியாதீவு புதிய நகர் அந் நூர் பள்ளிவாசலில் நடைபெற்றது.

அந் நூர் இளைஞர் கழக தலைவர் தலைமையில் விசேட நடுவர் குழு முன்னிலையில் வெற்றி பெற்றோர் தெரிவு செய்யப்பட்டனர். இந் நிகழ்வில் முதலாம் இடம் பெற்ற மாணவன் ஒருவருக்கான பரிசுப் பொதியினை நாச்சியாதீவு ஜும்மா பள்ளிவாசல் நிர்வாக அங்கத்தவர் எச்.எம். இஸ்மாயில் வழங்கி வைப்பதையும், படத்தில் காணலாம்.

(படம்: திறப்பனை தினகரன் நிருபர்)

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஏப்ரல் 26 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்


| தொழுகை நேரம் | |
|---|---|
| சுபஹ் | 04.41 |
| லுஹர் | 12.10 |
| அஸர் | 03.23 |
| மஃரிப் | 06.19 |
| இஷா | 07.30 |

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் சித்திரை 13
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி





மாத்தறை, ராஹுல கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் (25) கலந்து கொள்வதற்காகச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உருவப்படத்தை அதே இடத்தில் வரைந்த யோனல் ரொட்ரிகோ என்ற கல்லூரி மாணவன், தனது கையொப்பத்தையிட்டு ஜனாதிபதியிடம் வழங்கினார். மாணவன் தனது கையொப்பத்தை இடுவதை ஜனாதிபதி உள்ளிட்ட பிரமுகர்கள் அவதானித்தபோது பிடிக்கப்பட்ட படம்.

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தம்:

# வழக்குத்தாக்கலை தடுக்க 250 மில். டொலர் லஞ்சம் வழங்கப்பட்டுள்ளது

### உண்மையைக் கண்டறியும் பொறுப்பு பொலிஸாரிடம் ஒப்படைப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தம் தொடர்பான வழக்கு தாக்கல் நடவடிக்கைளை தடுப்பதற்காக சாமர குணசேகர என்பவருக்கு 250 மில்லியன் டொலர் வழங்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாக நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார். எனினும் அதற்கான சாட்சியங்கள் கிடைக்காத காரணத்தால் பொலிஸார் உண்மையைக் கண்டறிவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியம் என்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்

தீ அனர்த்தத்திற்கு உள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் கடல் வளங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்ட குழு சமர்ப்பித்த அறிக்கையின் ஒருசில உணர்வுபூர்வமான விடயங்களை 06

### ரயில் பெட்டிகள் தொடர்பான குற்றச்சாட்டு

# உண்மைத் தன்மை சபைக்கு தெளிவு படுத்தப்படும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ரயில் பெட்டிகள் தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளின் உண்மைத் தன்மையை பாராளுமன்றத்தில் முன் வைப்பதற்கு வசதியாக அறிக்கையொன்றை பெற்றுத் தருமாறு தாம் ரயில்வே பொது முகாமையாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக போக்குவரத்து மற்றும் ஊடகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அந்த அறிக்கை தமக்கு கிடைத்ததும் அது தொடர்பில் பாராளுமன்றத்திற்கு தெளிவுபடுத்தப்படும் என்றும் அமைச்சர் நேற்று சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் கண்டி மாவட்ட எம்பி குணதிலக ராஜபக்ச எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ரயில்வே துறையில் பெருமளவு பழைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் முன்னர் நடைமுறையில் இருந்த முறைமைக்கு மாற்றீடாக சர்வதேச ரீதியில் டெண்டர் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முன்னர் நடைமுறையில் இருந்த முறைமையின் கீழ் தேசிய ரீதியில் பல்வேறு தரப்பினர் இரும்பை குறைந்த விலைக்கு வழங்குவதற்கான நடைமுறையே காணப்பட்டது. 06

### எமக்கு எப்போதும் உதவும் நாடு இந்தியா

# இலங்கைக்கு இந்திய சுற்றுலா பயணிகள் அச்சமின்றி வரலாம்

### சென்னை நிகழ்வில் அமைச்சர் ஹரின் தெரிவிப்பு

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



இந்தியா, மாலைதீவு, பாகிஸ்தான், வங்களா தேசம் ஆகிய நாடுகளிலிருந்தே அதிகளவில் சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தருகின்றனர். இலங்கைக்கு எப்போதும் உதவும் நாடாக இந்தியா இருந்து வருகிறது. இன்று இலங்கையில் பொருளாதாரம் முன்னேற்றம் அடைந்து வருகிறதென்றும், எமது நாட்டுக்கு சுற்றுலா பயணிகள் அச்சமின்றி வரலாமென்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இலங்கைக்கு சுற்றுலா பயணிகளை ஈர்ப்பதற்காக 'இலங்கைக்கு வாருங்கள்' என்ற திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை தென்னிந்தியாவில் ஊக்கப்படுத்தும் வகையில் சென்னையில் நேற்று முன்தினம் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தலைமையில் வர்த்தகர்கள் சந்திப்பு நடைபெற்றது.

இலங்கையிலிருந்து வந்து பங்கேற்ற 50க்கும் மேற்பட்ட முகவர்கள், அங்குள்ள சுற்றுலா திட்டங்கள், சிறப்புகள் குறித்து விளக்கமளித்தனர்.

பின்னர் ஹரின் பெர்னாண்டோ செய்தியாளர்களிடம் உரையாற்றும்போது கூறியதாவது: நாட்டின் சுற்றுலாத்துறையின் பங்கு மிகவும் முக்கியமானது. இலங்கை மீதான எதிர்மறை விமர்சனங்களை அகற்றி, அழகான சுற்றுலாத் தளங்களை பயணிகள் கவலையின்றி, அச்சமின்றி வந்து கண்டுகளிக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்தநிலையில் 06

# இலங்கையில் இதுவரை 9 நில நடுக்கங்கள் பதிவு

### காரணத்தை கண்டறிய பணியகம் விசாரணை

இந்தாண்டு ஜனவரி 01 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை நாட்டில் மொத்தம் 09 நில நடுக்கங்கள் பதிவாகியுள்ளதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

ஹம்பாந்தோட்டையிலிருந்து 25.8 கிலோமீற்றர் தொலைவில் பதிவாகிய நேற்று முன்தின நிலநடுக்கம், இந்த ஆண்டு ஜனவரி 01ஆம் திகதிக்கு பின்னர் இலங்கையில் பதிவாகிய மிகப் பெரிய நிலநடுக்கமெனவும் பூகற்பவியலாளர் நில்மினி தல்தேன மேலும் தெரிவித்துள்ளார்.

இது ரிச்டர் அளவுகோலில் 4.4 ஆக பதிவாகியிருந்தது இலங்கையில் ஏற்பட்ட இந்த அதிர்வுகளுக்கான காரணத்தை கண்டறிய பணியகம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். எனினும், 06

# உயிர்த்த ஞாயிறு விசாரணை அறிக்கை ஆயர் பேரவைக்கு

### அமைச்சர் டிரான் அலஸ் வழங்கி வைத்தார்



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முழுமையான அறிக்கை கத்தோலிக்க ஆயர் பேரவையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் ஒப்புதலுடன் அமைச்சர் டிரான் அலஸ் அறிக்கையின் பிரதியொன்றை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் தலைவர் அருட்தந்தை ஹெரோல்ட் அந்தோனி பெரேராவிடம் கையளித்தார்.

# வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணி ஆரம்பம்

### தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

2023ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. கிராம அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று தகவல்களை சேகரிப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சி ஹேவா தெரிவித்துள்ளார். புதிய பெயர்கள் சேர்ப்பது மற்றும் பெயர் நீக்கம் குறித்து விசாரணை நடத்தி பிரதான ஆவணம் தயாரிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



# புலிகள் புதைத்து வைத்த தங்கத்தை தேடிய 07 பேர்

### முல்லைத்தீவில் பொலிஸார் அதிரடி

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, ஆனந்தபுரம் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் தங்கத்தை தேடிச் சென்ற 07 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இவ்வாறு கைது செய்யப்பட்ட குழுவினரிடம், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட பெறுமதியான பொருட்களை பூமிக்கு அடியில் தேடுவதற்கு பயன்படுத்தப்படும் ஸ்கேனர் இயந்திரமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு இராணுவ புலனாய்வு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. பின்னர் புதுக்குடியிருப்பு பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழு ஆனந்தபுரம் பகுதியிலுள்ள காட்டுப்பகுதியில் சோதனை நடத்தி இக் குழுவினரை கைது செய்தனர்.

சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்ட போது, நிலத்தை தோண்டுவதற்கு 06

### தமது மாவட்டத்தின் பிரச்சினைகளை சபையில் வெளியிட முற்பட்ட

# சாணக்கியன் எம்பியை புலி என்று சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது

### சபையின் கவனத்திற்கு கொண்டு வந்த சுமந்திரன் எம்பி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மாவட்ட ரீதியான பிரச்சினைகளை சபையில் எடுத்துரைக்கும் போது புலிகள் என குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும் வழிமுறைகளை ஆளும் தரப்பு அமைச்சர் கற்றுக்கொள்ள வேண்டும் என சபையில் குறிப்பிட்ட அவர், பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனை புலி என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார கூறுவதை நீங்கள் அனுமதிக்கின்றீர்களா என்றும் அவர் சபை முதல்வர் சுசில் பிரேம ஜயந்தவிடம் கேள்வி எழுப்பினார்.



பாராளுமன்றத்தில் நேற்று கிழக்கு மாகாணத்தில் படுவான் கரை மட்டும் எழுவான் கரை பிரதேசத்தில் நிலவும் படகு சேவை தொடர்பில் சாணக்கியன் எம்பி கேள்வி ஒன்றை எழுப்பினார்.

அதன்போது ஏற்பட்ட சர்ச்சையிலேயே மனுஷ நாணயக்கார எம்பி சாணக்கியன் எம்பியை புலி என குறிப்பிட்டார்.

அதன் போது சாணக்கியன் எம்பி தொடர்ந்தும் தமிழன், கிழக்கு மாகாணத்தவன் என்பதனால்தான் சபையில் கேள்விகளுக்கு பதில் வழங்க அனுமதி மறுக்கப்படுவதாகவும் இதுதான் அரசின் இனவாதம் எனவும் தெரிவித்தார்.

இதன் போது அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்கும் சாணக்கியனுக்குமிடையில் தர்க்கம் ஏற்பட்டது. சாணக்கியனைப் 06

### கொழும்பு, விவேகானந்தா கல்லூரியில்

# "விவேகன்ஸ்' வலைப்பந்தாட்ட கழகம் நாளை 27 இல் உதயம்

கொழும்பு, விவேகானந்தாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், பாடசாலை மாணவிகளது வலைப்பந்தாட்ட விளையாட்டை மேம்படுத்தும் நோக்கில் 'விவேகன்ஸ்' வலைப்பந்தாட்ட கழகத்தை ஆரம்பிக்கவுள்ளது.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு நாளை 27ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 04 மணிக்கு கல்லூரி அதிபர் செல்வி.தேவசியானி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளதுடன், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் அடங்கலாக பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மன்னார், விடத்தல்தீவு, புனித ஜோசப் வாஸ் மகா வித்தியாலயம் மற்றும் விவேகானந்தாக் கல்லூரி மாணவிகளுக்கிடையில் நட்புறவு போட்டிகள் அன்றையதினம் நடைபெறவுள்ளன.

இதில் 16, 18 மற்றும் 20 வயதுக்குட்பட்ட மாணவிகளுடன், விவேகன்ஸ் வலைப்பந்தாட்டக் கழக உறுப்பினர்களும் இப்போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளனர்.

### மாகாண சபை தேர்தல் திருத்த சட்டமூலம்

# தனிநபர் பிரேரணையாக நேற்று சுமந்திரனால் சபையில் சமர்ப்பிப்பு

### மனோ கணேசன் வரவேற்று வழிமொழிவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் நேற்று தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பி எம்.ஏ சுமந்திரனால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

பழைய தேர்தல் முறையில் மாகாண சபை தேர்தலை உடனடியாக நடத்தக் கூடியவாறான திருத்தச் சட்டமூலமே சுமந்திரனால் தனிநபர் பிரேரணையாக நேற்று சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று கூடிய பாராளுமன்ற அமர்வின் போதே இந்த தனிநபர் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண 06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 209.09 | 222.13 |
| கனடியன் டொலர் | 231.85 | 246.31 |
| யூரோ | 342.31 | 361.28 |
| ஜப்பான் யென் | 2.3227 | 2.4510 |
| சிங்கப்பூர் டொலர் | 233.47 | 247.20 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 387.42 | 408.43 |
| சுவிஸ் பிராங்க் | 346.06 | 368.39 |
| அமெரிக்க டொலர் | 312.91 | 327.72 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 850.95 | கட்டார் ரியால் | 87.94 |
| குவைத் டினார் | 1,046.89 | சவூதி ரியால் | 85.53 |
| ஓமான் ரியால் | 833.28 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 87.36 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சோபகிருது வருடம் சித்திரை மாதம் 13ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷவ்வால் பிறை 05

### குறள் தரும் சிந்தனை



கெடல்வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின்
ஆற்று பவர்கண் இழுக்கு

ஒருவன், தன்னைத்தானே கெடுத்துக் கொள்ள விரும்பினால் பகையை நினைத்த மாத்திரத்தில் அழிக்கக் கூடிய ஆற்றலுடையவர்களை யார் பேச்சையும் கேட்காமலே இழித்துப் பேசலாம்.

# வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கான நிவாரணத் திட்டம்

கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் நாடு முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களும் பாதிப்புகளும் எல்லா மட்டங்களிலும் செல்வாக்கு செலுத்தியுள்ளன. ஏழை, பணக்காரன், உயர்ந்தவன் தாழ்ந்தவன், படித்தவன், பாமரன் என அனைத்துத் தரப்பினரும் இத்தாக்கங்களை உணர்ந்துள்ளனர்.

இந்நிலையில் இப்பொருளாதார நெருக்கடியின் தாக்கமும் பாதிப்புகளும் அதிகம் தாக்கம் செலுத்தக்கூடிய மக்களின் நலன்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் இம்மக்களின் நலன்களில் முன்னுரிமை அளித்து நிவாரணத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதோடு சலுகைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. அதாவது இப்பொருளாதார நெருக்கடி வறுமைக்கோட்டின் கீழுள்ள மக்கள் அன்றாட வாழ்வை முன்னெடுப்பதற்கு சுமையாக அமைவதைத் தவிர்ப்பதை நோக்காகக் கொண்டுள்ளது. அந்த அடிப்படையில் ஏற்கனவே பல நிவாரணத் திட்டங்களும் சலுகைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இருந்த போதிலும் இப்பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தின் ஆழ அகலத்தை தெளிவாகவே அறிந்துள்ள அரசாங்கம், மற்றொரு நிவாரணத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. நிதி ரீதியில் முன்னெடுக்கப்படவிருக்கும் இத்திட்டம் அடுத்துவரும் மூன்று வருடங்களை இலக்காகக் கொண்டுள்ளது.

'நாட்டில் வறுமைக் கோட்டின் கீழ் மிகுந்த ஏழ்மை நிலையில் வாழும் 20 இலட்சம் குடும்பங்களை இலக்காகக் கொண்டு எதிர்வரும் ஜுலை மாதம் முதல் இத்திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது' என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரன்ஜித் சியம்பலாப்பிட்டிய குறிப்பிட்டிருக்கிறார்.

இதன்படி, இந்த 20 இலட்சம் குடும்பங்களுக்கும் நான்கு பிரிவுகளின் கீழ் இந்நிவாரணம் அளிக்கப்பட உள்ளது. அற்கேற்ப, முதலாம் பிரிவின் கீழ் வறுமையின் மிகவும் மோசமான நிலைக்கு உள்ளாகியுள்ள 04 இலட்சம் குடும்பங்களுக்கு மாதா மாதம் 15 ஆயிரம் ரூபா நிதி நிவாரணம் அளிக்கப்பட உள்ளது.

அதேநேரம் இரண்டாம் பிரவின் கீழ் வறுமைக் கோட்டின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ள 08 இலட்சம் குடும்பங்களுக்கு மாதாந்தம் 8,500.00 ரூபாவும், மூன்றாம் பிரிவின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ள 04 இலட்சம் குடும்பங்களுக்கு எதிர்வரும் வருடம் மார்ச் மாதம் வரை 5,000 ரூபாவும், நாலாம் பிரிவின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ள 04 இலட்சம் குடும்பங்களுக்கு இவ்வருடம் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை 2,500.00 ரூபாவும் நிவாரணமாக வழங்கப்பட உள்ளது.

'இந்த நிவாரணத்தை முன்னெடுக்கும் காலம் மற்றும் இத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படக் கூடிய குடும்பங்களின் எண்ணிக்கை என்பவற்றை அதிகரிக்கக்கூடிய அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உள்ளது' என்று குறிப்பிட்டுள்ள இராஜாங்க அமைச்சர் ரன்ஜித் சியம்பலாப்பிட்டிய, 'இக்காலப்பகுதிக்குள் இவர்களைப் பொருளாதார ரீதியில் பலப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வறுமையின் பிடிக்குள் சிக்குண்டுள்ள ஏழை மக்களை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவது மிகவும் அவசியமான விடயம். அவர்கள் தொடர்ந்தும் ஏழைகளாகவும் வறுமையின் பிடியில் சிக்குண்டவர்களாகவும் இருக்க முடியாது. பொருளாதார ரீதியில் அவர்கள் கைதூக்கி விடப்பட வேண்டியவர்கள். அது தொடர்பிலான பொறுப்பை உணர்ந்து இவ்வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. இத்திட்டங்களின் ஊடாக மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படுவதை அரசாங்கம் மீண்டுமொரு தடவை உறுதிப்படுத்தி உள்ளது.

அதனால் பொருளாதார ரீதியில் கை தூக்கிவிடும் நோக்கில் முன்னெடுக்கப்படும் திட்டங்களின் ஊடாக உச்ச பிரதிபலன்களை அடைந்து கொள்வதில் பயனாளிகள் கவனம் செலுத்த வேண்டும். அதைவிடுத்து அரசின் நிவாரணங்களில் தொடர்ந்தும் தங்கி இருப்பதில் கவனம் செலுத்தலாகாது. அரச நிவாரணங்களை எதிர்பார்த்து அதில் தங்கியிருக்கும் போது வறுமையின் பிடியிலிருந்து விடுபட முடியாத நிலைமையே ஏற்படும். அதனால் அரசாங்கம் வழங்கும் நிவாரணங்களை வறுமையின் பிடியில் இருந்து மீட்சி பெறுவதற்கான ஏணியாகப் பயனாளிகள் கருத வேண்டும். அதுவே இன்றியமையாதது. இல்லாவிடில் தொடர்ந்தும் நிவாரணத்தை எதிர்பார்த்து அதில் தங்கி இருக்க வேண்டிய நிலைக்கே உள்ளாக நேரிடும்.

ஆகவே வறுமையின் பிடிக்குள் சிக்குண்டுள்ள மக்களுக்கு நாட்டின் பொருளாதார நெருக்கடி சுமையாக அமைவதைத் தவிர்க்கும் வகையில் முன்னெடுக்கப்படும் நிவாரணத் திட்டங்களின் ஊடாக உரிய நன்மைகளை அடைந்து கொள்வதில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும். அது நாட்டின் முன்னேற்றத்திற்கும் ஏழை மக்களின் பொருளாதார சுபீட்சத்திற்கும் வித்திடக் கூடியதாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# உடப்பு கிராமத்துக்குரிய தனித்துவ பாரம்பரிய சடங்கு முளைக்கொட்டு

புத்தளம் மாவட்டத்தில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் தமிழ்க் கிராமம் உடப்பு ஆகும். உடப்பு மக்கள் கலைகலாசாரத்தை கண்ணியமாக மதித்து வருவதை கலைவடிவங்கள் மூலம் காணக் கூடியதாக உள்ளது. உடப்பு கிராமத்தில் 'சித்திரைச் செவ்வாய் முளைக்கொட்டு பரம்பரை பரம்பரையாக நடைபெற்று வருகின்றது. இந்நிகழ்ச்சியின் ஆரம்ப நிகழ்வுகள் கடந்த 2023.04.16 அன்று முளைபதித்தல் மூலம் ஆரம்பமாகின.

தொடர்ந்து பத்துநாட்கள் நடைபெறும் இந்நிகழ்வின் இறுதி நிகழ்ச்சி இன்று புதன்கிழமை காலை நடைபெறுகிறது. உடப்பில் மாரியம்மன் வழிபாட்டின் மற்றொரு வடிவமாக சித்திரை மாதத்தில் வீடுகளின் வளவுகளில் நடத்தப்படும் சித்திரைச் செவ்வாய் விழாவைக் குறிப்பிடலாம். அக்கினி நட்சத்திரம் என மக்கள் குமுறுகின்ற காலம் இது. அக்கினி நட்சத்திரம் என்பது சித்திரை மாதம் அவிட்ட நட்சத்திரத்தில் இருந்து விசாகநட்சத்திரம் வரை 21நாட்களைக் குறிக்கும். இக்காலப்பகுதி மிகவும் வெப்பமானது.

இந்தக் காலத்திலேயே தமிழ்நாட்டில் மாரியம்மன் கோயில்களில் விழாக்கள் இடம்பெறுவதுண்டு. மழை வரவிருப்பதையே இவ்வழிபாடு உணர்த்தும். அங்கு கோயில் திருவிழா தொடங்கி விட்டதை அறிவிக்க கொடி ஏற்றப்படும். அன்று முளைப்பாரி கொட்டுதல் என்ற ஒரு நிகழ்ச்சி உண்டு. கிராமத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தாரும் குறிப்பிட்ட ஓரிடத்தில் ஒருகுடத்தில் நெல் தானியங்கள், பயறு வகைகள் ஆகியவற்றை விதைப்பார்கள். எட்டாம் நாள் அந்தக் குடங்களை கோயிலுக்குக் கொண்டு வருவார்கள்.அ ந்த மூன்றுநாட்களும் பெண்கள் பலர் சேர்ந்து மாரியம்மன் புகழைக் கும்மியடித்துப் பாடுவார்கள். பிறகு பானைகளுடன் வலம்வருவர். திருவிழாவின் இறுதியில் அருகேயுள்ள குளம் அல்லது ஆற்றில் பானைகளை மூழ்கடித்து விடுவர்.

தமிழ்நாட்டு வழிபாட்டுச் சடங்குகளின் சிற்சில மாறுதல்களுடன் சித்திரைச் செவ்வாய் விழா உடப்பு பிரதேசத்தில் பின்பற்றப்பட்டு வருகின்றது. இச்சடங்கு வேளையில் பாடப்படும் பாடல்களும் வழிபாடு தொடர்புடையனவாக அமைகின்றன. இச்சடங்கின் போது கும்மி ஆட்டத்துடன் பாடலும் இடம்பெறுகின்றது.இச் சடங்கு நிகழ்ச்சியின் போது நவதானியங்கள் முளைக்க வைத்தல் ஒரு முக்கிய நிகழ்ச்சியாக உள்ளது. முளைக்க வைக்கத் தேவையான நவதானியங்களை வீடுவீடாகச் சென்று பெற்றுக் கொள்வர். அவ்வாறு நவதானியங்களைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களில் அதற்குரிய பாடலைப் பாடுவர்.

மாரியம்மனுக்காகக் கொண்டாடப்படும் இச் சடங்கில் நவதானியங்களின் வளர்ச்சி மிகவும் முக்கியமானதொன்றாகக் கருதப்படும். குறிப்பிட்ட பத்துதினங்களில் நவதானியங்கள் நன்கு வளர்ச்சியடைந்திருப்பின் அம்மன் அருள் பாலித்துள்ளார் என்று அர்த்தமாகும். நவதானியங்களுக்காக கடலை, பயறு, கானா, எள்ளு, கொள்ளு, இறுங்கு, நெல், குரக்கன், தினை போன்றவற்றை தெரிவு செய்வர். நவதானியங்களை பாலிகைச்சட்டியில் உரமிட்டு சாணம் நிரப்பிப் பதித்து தூப தீபம் காட்டி காலையும் மாலையும் நீர் ஊற்றுவார்கள். இவற்றுக்கு



பத்து நாள் நிகழ்வுகள் இன்று நிறைவு

பத்து வயதுக்குட்பட்ட கன்னிப்பெண்கள் நீர் ஊற்றி பக்குவமாக வளர்ப்பார்கள்.

இறுதிநாளுக்கு முந்திய செவ்வாய்க்கிழமை இரவு மாரியம்மனுக்கு வேப்பிலைக் கும்பம் வைத்து அதற்குரிய பலகாரம், கனிகள் வைத்து அன்று இரவுதொடங்கி விடியும் வரை ஆண்களும் பெண்களும் பிள்ளைகளும் கும்மிகொட்டி கொண்டாடுவார்கள்.

இதனை 'செவ்வாய்க் கொட்டுதல்' என்று அழைப்பார்கள். இறுதிநாள் புதன்கிழமை காலை கொழுக்கட்டை, கனி, பொங்கல் ஆகிய நெய்வேத்தியங்களைப் படையல் செய்து பூசை வைத்து வழிபடுவார்கள். அத்துடன் தேர் வடிவத்தில் அழகான பெட்டி செய்து பலவர்ண நிறஒலைகளால் அலங்கரித்து அதற்குள் செவ்வாய் என்னும் பலகாரம் வைத்து, சோறு மற்றும் பொரியல் வைத்து படையல் வைப்பார்கள். செவ்வாய்க்கிழமை இரவு வைத்த இந்தப் படையல்களை புதன்கிழமை காலையில் எடுத்து வீடுகளுக்கு கொண்டுபோய் உண்பார்கள்.செவ்வாய்க்கிழமை, புதன்கிழமைகளில் சித்திரைச் செவ்வாய் கொட்டும்போது "ஓராம் நாள் முளை எழுந்து ஓங்கிவளருமாம் மாரிமுளை, ஈராம் நாள் முளைஎழுந்து இரட்டனம் கொட்டுமாம் மாரிமுளை" என்றுதொடங்கும் பாடலானது குறிப்பிட்ட பத்து நாட்களுக்குள்ளும் முளைக்க வைத்த நவதானியங்களின் வளர்ச்சிபற்றி கூறுவதாக அமைகின்றது.





சித்திரை மாதம் வெப்பம் நிறைந்த காலப்பகுதியாகும். இக்காலத்தில் அம்மைநோய் கூடுதலாக வருவதுண்டு. இந்நோயை இல்லாது செய்வதற்கு மாரியம்மனுக்கு செய்யும் ஒரு நேர்த்தியாகவும் இதை உடப்பு கிராமமக்கள் கருதுகின்றனர். சித்திரைச் செவ்வாய் சடங்கு நிகழ்ச்சி இலங்கையில் ஏனைய பிரதேசங்களில் இருப்பதாக அறிய முடியவில்லை. ஆனால் இதனுடன் தொடர்புடையதாக இந்தியாவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெறும் முளைப்பாரி சடங்குநிகழ்ச்சி காணப்படுவதாக அறியமுடிகின்றது.

கலைச்சுடர்
க.மகாதேவன்...
உடப்பு

# எதிர்கால சவால்களை வெற்றிகொள்வதற்காக மாணவர்களுக்கு STEAM கல்வித் திட்டம்


இலங்கையிலுள்ள பாடசாலைகளில் STEAM எனும் கல்வித்திட்டத்தை கல்வி அமைச்சு கடந்த 31.03.2023அன்று கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் ஆரம்பித்து வைத்தது.



இக்கல்வித் திட்டத்தின்படி STEAM எனும் போது S_ Science விஞ்ஞானம், T_ Technology தொழில்நுட்பம், E – Engineering பொறியியல், A – Art & Architecture கலை மற்றும் கட்டடக்கலை,
M_ Mathematics கணிதம்ஆகியவற்றின் முதலெழுத்துகள் குறிப்பிடப்படுகின்றன.

இத்தகைய கல்வித்திட்டத்தில் விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கலை மற்றும் கட்டடக்கலை, கணிதம் போன்ற துறைகளை மேலோங்கச் செய்து, மாணவர்கள் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்காக தம்மை அர்ப்பணிக்கவுள்ளனர். நவீன தொழில்நுட்பத்தோடு இணைந்து செயற்படக் கூடிய தரத்தில் இக்கல்வித் திட்டம் விருத்தி செய்யப்பட இருக்கின்றது. உலகம் கல்விக்கு முதலிடம் வழங்கியிருந்தது. புதிய அறிவு மற்றும் புதிய கோட்பாடுகள் இன்றி உலகிற்கு முன்னேற்றம் இல்லாமல் இருப்பததை கருத்திற் கொண்டே விஞ்ஞான தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய கண்டுபிடிப்புக்கள் உரவாகின. விஞ்ஞானம் இன்றி எதிர்காலம் இல்லை. இதனால்தான் 1957 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் விஞ்ஞான தொழில்நுட்ப மறுமலர்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.

முதன் முதலில் ரஷ்யா ஸ்புட்னிக் 01 விண்கலத்தை விண்ணுக்கு 1957 இல் அனுப்பியதைத் தொடர்ந்து அமெரிக்கா 1558 இல் NASA விண்வெளி நிலையத்தை உருவாக்கியது. அதற்கு தேவையான விஞ்ஞானிகளை உருவாக்கும் பணியை முன்னிலையாகக் கொண்டு அமெரிக்கா முழுவதிலும் விஞ்ஞான தொழில்நுட்ப மறுமலர்ச்சி உருவாகியிருந்தது. இதனையே விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறை உருவாவதற்கு அமெரிக்கா ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது. இது STEAM கல்வியின் ஆரம்பமாகும் ஆசிரியர் பாரம்பரிய சிந்தனை படைத்தவர் என்றால் அங்கு STEAM சூழல் உருவாக முடியாது. இவ்விசேட பாடசாலையில் STEAM நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள் மாற்றம் அடையலாம்.




## இலங்கையிலும் அறிமுகம்

சில நாடுகளில் கல்வி முறைமை STEAM கல்வி முறைக்கு அப்பால் சென்று STEAM, STREAM என்பதாக பரவிச் சென்றுள்ளமையை காணமுடிந்தது. எமது நாட்டில் STEAM 1OA என்பதாக STEAM கல்வி முறைக்கு சமமான முறையொன்று அமுல்படுத்தப்பட ஏற்கனவே திட்டமிடப் பட்டிருந்தது. இதன் விளைவாகவே STREAM நடைமுறைப்படுத்தப்பட்டது.

பின்லாந்து நாட்டில் பல ஆண்டுகளாக நடைமுறையிலுள்ள STEAM கல்வி முறைமை இன்று எமது நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அமெரிக்கா, சிங்கப்பூர், இந்தியா போன்ற நாடுகளில் ஆரம்பம் முதலே மாணவர்களுக்கு ஆராய்ச்சியான நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்துள்ளனர். இருப்பினும் எமது நாட்டில் 15 வருடங்களுக்குப் பிற்பாடே இத்தகைய கல்வித் திட்டம் அறிமுகமாயிருக்கின்றது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை விஞ்ஞானக் கழகங்களின் கல்வியாளர்கள், விஞ்ஞான கணித பேராசிரியர்கள் வடிவமைத்து தந்துள்ளார்கள். எனவே காலம் பிந்தி இக்கல்வி முறை கிடைத்தாலும் காலம் தாழ்த்தாது எமது மாணவச் செல்வங்கள் அதன் பலன்களைப் பெற்று எதிர்கால தொழில் முயற்சியாளராக வருவதுடன் ஒவ்வொரு பிள்ளையும் கலைஞன், விஞ்ஞானி, பொறியியலாளன், தொழில்நுப்பவியலாளன் நுண்ணறிவு படைத்தவனாக திகழ்வான். எனவே எதிர்கால சவால்களை எதிர்கொள்ள STEAM கல்வி முறை சிறந்ததாகும்.



இலக்கிய வித்தகர்
கநாராயணப்பிள்ளை நாகேந்திரன்...
(ஓய்வுநிலை அதிபர்) களுவாஞ்சிகுடி

# இளவயதினரின் உயிர்பறிக்கும் மோட்டார் சைக்கிள்கள்!

நாட்டில் வீதிவிபத்துகள் அதிகரித்துள்ளன. இலங்கையில் நாளாந்தம் வீதிவிபத்துகளால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை சராசரியாக 8 தொடக்கம் 10 வரை என்று அறிக்கைகள் கூறுகின்றன. அத்துடன் நாட்டில் பல்வேறு விபத்துகளின் மூலம் வருடமொன்றுக்கு 10 ஆயிரம் பேர் வரை உயிரிழப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மணித்தியாலமொன்றுக்கு 480 பேர் என்ற விகிதத்தில் நாளொன்றுக்கு 11 ஆயிரம் பேர் பலவிதமான விபத்துகளில் சிக்கி சிகிச்சை பெறுவதாகவும் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வருடாந்தம் பல்வேறு விபத்துகளில் அகப்பட்டு வைத்தியசாலைகளில் மரணமடைவோரின் எண்ணிக்கை சுமார் பத்தாயிரம் ஆகும். அவற்றில் மூவாயிரம் மரணங்கள் வீதி விபத்துக்கள் சம்பந்தப்பட்டவையாகவும், ஆயிரம் மரணங்கள் நீரில் மூழ்கும் மரணங்களாகவும் உள்ளன. மிருகங்களின் கடிக்கு ஆளாகி விபத்துக்குள்ளாகுவோர் தொகை அதிகம் உள்ளதாகவும். பிழையான வீதிப்போக்குவரத்து ஒழுங்குவிதிகள் காரணமாக விபத்திற்குள்ளாவோர் தொகை இரண்டாவது இடத்திலுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



அலட்சியத்தினால் பரிதாப உயிரிழப்புகள்; அனைத்து விபத்துகள் குறித்தும் மக்கள் விழிப்புணர்வு கொள்வது அவசியம்

இவை தவிர, 2023 ஏப்ரல் மாதம் முதல் வாரத்தின் ஐந்து நாட்களில் 265 வாகன விபத்துக்கள் பதிவாகியுள்ளதாகவும், இவற்றில் 25 பேர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதுமாத்திரமின்றி இவ்வருடம் ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 534 வீதிவிபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி வீதிவிபத்துக்களில் 1345 பேர் படுகாயம் அடைந்துள்ளதாகவும், 2446 பேர் சிறுகாயங்களுக்குள்ளாகி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இவ்விபரங்கள் வீதிவிபத்துக்களின் பாரதூரமான விளைவுகளை தெளிவாக வெளிக்காட்டுகின்றன.

தான்தோன்றித்தனமாக, கவனமின்றி மோட்டார் சைக்கிள்களை தாறுமாறாகவும், வேகமாகவும் செலுத்துதல், பெருமளவில் வாடிக்கையாளர்களைப் பெற்று, அதிகளவில் வருமானமீட்ட வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் வீதிஒழுங்குகளை மதிக்காது முச்சக்கரவண்டிகளைச் செலுத்துதல், அதிக வேகம், போட்டா போட்டியுடன் ஏனையவர்களை மதிக்காது, முந்திச் செல்ல வேண்டும் என்ற நோக்கில் தொழிற்படும் சாரதிகள், வீதிப்போக்குவரத்து ஒழுங்குவிதிகளை மதிக்காது பயணிக்கும் சாரதிகள் போன்ற பல்வேறு காரணங்களினால் தற்காலத்தில் வீதிவிபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

வீதிப்போக்குவரத்தில் போதிய கவனம் செலுத்தாமல் பயணித்தல், போதை மற்றும் தூக்கக்கலக்கத்துடன் வாகனங்களைச் செலுத்துதல், பயணிகளுடன் வேடிக்கையாகப் பேசிக்கொண்டு பாதையில் அவதானமின்றி பயணித்தல், விட்டுக்கொடுக்காது ஏனையவர்களுடன் போட்டி போட்டுக் கொண்டு வாகனங்களைச் செலுத்துதல், அவசரம் என்பனவும் இத்தகைய வீதிவிபத்துக்களின் அதிகரிப்புக்கு முக்கிய காரணங்களாக அமைந்து விடுகின்றன.

இவைதவிர பொதுவிடுமுறை மற்றும் பண்டிகைக் காலங்களில் இடம்பெறும் விபத்துக்களின் எண்ணிக்கை கணிசமானளவு அதிகரித்துக் காணப்படுகின்றது. பொதுவிடுமுறை, பண்டிகைக் காலங்களில் பலர் தனிப்பட்ட பயணங்களை மேற்கொள்கின்றனர். ஆகையால் சாதாரண நாட்களை விடவும் இக்காலங்களில் இடம்பெறும் விபத்துகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துக் காணப்படுவதாக பொலிஸ் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இவற்றுக்கு மேலதிகமாக, வீதிகளில் அதிகரித்த கட்டாக்காலி ஆடு, மாடுகளின் நடமாட்டத்தினாலும் வாகனவிபத்துக்கள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன. இதன்போது, மக்களுக்கும், வாகனங்கள், உடைமைகளுக்கும் அதிகரித்த சேதங்கள் ஏற்பட்டு வருகின்றன.

சாரதிகள் மாத்திரமின்றி வாகனத்தைச் செலுத்தும் ஒவ்வொருவரும் தனது சொந்த நலன், தன்னுடன் பயணிப்பவர்களின் நலன்கள், பாதையில் பயணிப்பவர்களின் பாதுகாப்பு என்பனவற்றை கருத்திற் கொண்டு வீதிப்போக்குவரத்து ஒழுங்குவிதிகளை மதித்து வாகனங்களைச் செலுத்த முன்வர வேண்டும். அதன்மூலம் வேண்டத்தகாத விபத்துக்களைத் தவிர்த்து பாதுகாப்புப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது திண்ணம்.

அண்மைக் காலத்தில் இடம்பெறும் அதிகமான விபத்துக்களில் பதின்ம வயதினர் அதிகம் சிக்கிக் கொள்கின்றனர். சாரதி அனுமதிப் பத்திரமின்றியும், வீதிப்போக்குவரத்து ஒழுங்குவிதிகளை மதிக்காது வாகனங்களைச் செலுத்தியும் விபத்துக்களில் சிக்கிவிடுகின்றனர்.

வீட்டிலிருந்து புறப்பட்ட பலர் உயிரிழந்த உடல்களாக வீடு வந்த சம்பவங்கள், உடல் உறுப்புக்கள், அவயங்களை இழந்த சம்பவங்கள் அதிகமுள்ளன. அவசரத் தேவைக்காக பயணித்தவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றும் வருகின்றனர். இவ்வாறான பதின்ம வயதினர் தொடர்பில் பெற்றோர் அதிக கவனம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

வீதிப்போக்குவரத்து ஒழுங்குவிதிகளை முறையாக மதித்து வாகனங்களைச் செலுத்துவதன் மூலம் நிச்சயம் விபத்துக்களிலிருந்து பாதுகாப்புப் பெற முடியும். இவ்விடயத்தில் ஒவ்வொருவரும் தனிப்பட்ட ரீதியிலும், கூட்டாகவும் கவனம் செலுத்த வேண்டும்.

நமது நாட்டில் தேசிய விபத்து தடுப்பு வார நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இதன்போது வீதி விபத்துக்கள், வேலைத் தலங்களில் இடம்பெறும் விபத்துக்கள், வீடுகளில் இடம்பெறும் விபத்துக்கள், முன்பள்ளிப் பாடசாலைகளில் இடம்பெறும் விபத்துக்கள், பாடசாலை விபத்துக்கள் என்பனவற்றைத் தடுப்பதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவற்றிலும் நாங்கள் அதிக கவனம் செலுத்தி பாதுகாப்புப் பெற வேண்டும்.

முகம்மட் றிஸான்...
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# தினகரன் Business

## ஏற்றுமதிச் சந்தையைப் பன்முகப்படுத்தல் மற்றும் Dipped தயாரிப்புகளுக்கு முன்னுரிமை

சர்வதேச ரீதியில் ஒருங்கிணைந்த இறப்பர் கையுறை உற்பத்தியாளரான Dipped Products PLC (DPL) ஆனது தனது புதிய ஏற்றுமதிச் சந்தை வாய்ப்புகள் மற்றும் உயர் மதிப்புமிக்க முக்கிய தயாரிப்பு பிரிவுகளில் இலாபகரமான வளர்ந்து வரும் வாய்ப்புக்களை இலக்காகக் கொண்டுள்ளது. புதிய முகாமைத்துவப் பணிப்பாளரால் வழிநடத்தப்படும் "InnovationLed" வளர்ச்சித்திட்ட நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக உள்ளது என புஷ்பிக ஜனதீர தெரிவித்தார்.

இலங்கையின் மிகப்பெரிய பன்முகப் படுத்தப்பட்ட கூட்டு நிறுவனமான Hayleys குழுமத்தின் உறுப்பினரான DPL ஆனது, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் வட அமெரிக்கா முழுவதும் உள்ள முக்கிய சில்லறை விற்பனையாளர்கள் உட்பட, உலகெங்கிலும் இருக்கக் கூடிய 70க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள தனது வாடிக்கையாளர்களுக்கு பல்வேறுபட்ட சிறப்பு வாய்ந்த தொழில்துறை, மருத்துவம் மற்றும் வீட்டுக் கையுறைகள் என்பனவற்றினை தற்போது வழங்கி வருகின்றது.

ரப்பர் துறையுடன் தொடர்புடைய தொழில்களில் பணிபுரிந்து 24 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்துடன், ஜனதீர 2017 ஆம் ஆண்டில் DPL இன் செயல்பாடுகளுக்கான பணிப்பாளராக தனது கடமையை ஆரம்பித்தார்.






இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனமும் (PA) ஐக்கிய தென்னிந்திய பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளன விளையாட்டு கழகமும் (UPASI SC) இணைந்து 2023 மார்ச் 23ம் திகதி முதல் 28ம் திகதிவரை ஈராண்டுக்கோர் முறை நடாத்தப்படும் விளையாட்டு விழாவை வெற்றிகரமாக நடாத்தி முடித்தனர். மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக ஈராண்டுக்கோர் முறை நடாத்தப்படும் இவ்விளையாட்டு விழாவில் கிரிக்கெட், கோல்ப், (GOLF) டென்னிஸ், பூப்பந்து (Badminton) மற்றும் பில்லியர்ட்ஸ்/ஸ்னூக்கர் ஆகிய ஐந்து விளையாட்டுகள் உள்ளடங்கியிருந்தன.

## யூனியன் அஷ்யூரன்ஸ் விளையாட்டு தினம்



இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகளை வழங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், தனது கலாசாரப் பெறுமதிகளை கொண்டாடும் வகையில், தனது விளையாட்டு தினத்தை அண்மையில் கொழும்பு விமானப்படை மைதானத்தில் நடத்தியது. நிறுவனத்தின் நான்கு விளையாட்டு இல்லங்களும் இந்த நிகழ்வில் போட்டியிட்டிருந்தன. இதன் போது, Challengers அணி சம்பியன்களாக தெரிவாகியிருந்ததுடன், இரண்டாமிடத்தை Giants அணி பெற்றுக் கொண்டது.

இந்த விளையாட்டுப் போட்டியில் Titans மற்றும் Royals இல்லங்களும் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தன.

## சர்வதேச மீள்சுழற்சி தினத்துடன் இணைந்ததாக நீர்கொழும்பு மீள்சுழற்சி சமூகம் நிறுவப்பட்டது



*Negombo Recycling Club (NRC)* என்ற பெயரில் ஒரு விரிவான பொருள் மீட்பு வசதி (*Material Recovery Facility MRF*) சர்வதேச மீள்சுழற்சி தினத்துடன் சுற்றுச்சூழல் அமைச்சின் செயலாளர் டொக்டர் அனில் ஜாசிங்கவின் பங்கேற்புடன் உத்தியோகப்பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

MRF ஆனது, CocaCola இன் பரோபகாரப் பிரிவான The CocaCola Foundation (TCCF) மற்றும் இலங்கையின் மிகப்பெரிய பிளாஸ்டிக் மீள்சுழற்சி நிறுவனமான Eco Spindles ஆகியவற்றால் நிதியளிக்கப்பட்டது. இது Janathakshan (GTE) Ltd என்ற இலாப நோக்கற்ற அமைப்பால் செயல்படுத்தப்பட்டது. NRC இன் நோக்கம் நீர்கொழும்பில் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுகளை சேகரிக்கும் செயல்முறையை வலுப்படுத்துவதன் மூலம் PET பிளாஸ்டிக் உள்ளிட்ட கழிவுகளை சேகரித்து மீள்சுழற்சி செய்வதன் மூலம் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதி செய்வதாகும்.

### SLIM KANTAR மக்கள் விருதுகள் 2023;

## இரண்டு மாபெரும் வெற்றிகள் Darazக்கு

SLIM KANTAR மக்கள் விருதுகள் 2023 இல், இலங்கை மக்கள் Daraz ஐ 'ஆண்டின் சிறந்த சேவை வர்த்தக தளம்' என வாக்களித்தனர். இந்த வருட விருதுகளில் தொடர்ந்து இரண்டாவது முறையாகவும் Daraz 'இளைஞர் தெரிவு ஆண்டின் சிறந்த சேவை வர்த்தக நாமம்' என்ற பட்டத்தை வென்றுள்ளது.

ஆண்டின் சிறந்த சேவை வர்த்தகநாமம்' விருது அனைத்து சேவைத் துறைகளிலும் சிறந்த சேவை வழங்குநரை அங்கீகரிக்கும் ஒரு விருதாகும். தெற்காசியாவின் முன்னணி இலத்திரனியல் தளமான Daraz வழங்கும் பல்வேறு வகையான உள்ளடக்கிய மற்றும் அணுகக்கூடிய சேவைகளுக்கு இது ஒரு சான்றாகும்.




தொழில்நுட்பத்தின் மாற்றும் ஆற்றலைப் பயன்படுத்தி, Daraz ஆனது அதன் பல்துறை தளத்தின் மூலம் ஒரு விதிவிலக்கான இலத்திரனியல் வர்த்தக சுற்றுச்சூழல் அமைப்பை வழங்குகிறது. இது ஆயிரக்கணக்கான விற்பனையாளர்களை நாடளாவிய ரீதியில் மில்லியன் கணக்கான வாடிக்கையாளர்களுடன் இணைக்கிறது.

## அதிவேக நெடுஞ்சாலையில் 16 மீள்சுழற்சி செய்யக்கூடிய பிளாஸ்டிக் சேகரிப்பு மையங்கள்

### CocaCola மற்றும் Elephant House கூட்டு முயற்சி



பேண்தகைமையை நோக்கிய பயணத்தில் மற்றொரு மைல்கல்லைக் குறிக்கும் வகையில், மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் மீள்சுழற்சி செய்யக்கூடிய பிளாஸ்டிக் சேகரிப்பை மேம்படுத்துவதற்காக *CocaCola Beverages Sri Lanka (CCBSL)* மற்றும் *Ceylon Cold Stores Elephant House (EH)* ஆகியவை கைகோர்த்துள்ளன.

உலக மீள்சுழற்சி தினம் மற்றும் பூஜ்ஜிய கழிவுகள் சர்வதேச தினம் (*International Day of Zero Waste*) ஆகியவற்றுக்கு சமாந்திரமாக இந்த முயற்சி ஆரம்பிக்கப்பட்டதுடன்,

CCBSL மற்றும் EH ஆகியவை நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு மற்றும் மீள்சுழற்சி மூலம் பசுமையான எதிர்காலத்தை உறுதி செய்வதில் முன்னணியில் உள்ளன. CCBSL மற்றும் EH ஜோன் கீல்ஸ் குழுமத்தின் சமூக தொழில் முனைவோர் திட்டமான Plasticcycle மற்றும் Eco Spindles ஆகியவை வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் (RDA) இணைந்து மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் 16 மீள்சுழற்சி செய்யக்கூடிய பிளாஸ்டிக் சேகரிப்பு மையங்களை நிறுவியுள்ளன.

## PayMaster மொபைல் Appக்கு தங்க விருது!

அண்மையில் நடைபெற்ற *LankaPay Technnovation 2023* விருது வழங்கும் நிகழ்வில், *PayMaster* மொபைல் *APP* இரண்டு விருதுகளை வென்றது. இவற்றில், இந்த ஆண்டின் சிறந்த நுகர்வோர் கட்டண மொபைல் அப்ளிகேஷன் ஃபின்டெக் துறையில் தங்க விருதை வெல்வது ஒரு தனித்துவமான தருணம்! மேலும்,

*PayMaster App* இந்த ஆண்டின் பிடித்த டிஜிட்டல் பேமெண்ட் *App* மெரிட் விருதை வென்றது.

4 வருட குறுகிய காலப்பகுதியில், *PayMaster* இலங்கையர்களின் தினசரி கட்டணத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பரந்த அளவிலான சேவைகளை வழங்கும் மொபைல் நிதி தொழில்நுட்ப *App*ஆக இலங்கை நுகர்வோரின் நம்பிக்கையை வென்றுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் முழு மேற்பார்வையின் கீழ் இயங்கும் இலங்கையின் தேசிய மொபைல் கட்டணச் செயலாக்க வலையமைப்பான *JustPay* மூலம் அதன் சேவைகளை இயக்கும், *PayMaster App* உங்கள் ஆன்லைன் கட்டணத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வசதியான, பாதுகாப்பான இடைமுகத்தை வழங்குகிறது.



இதன் மூலம் உங்களின் அனைத்து உள்ளூர் நாணய மாற்று தேவைகள், ரீலோட்கள், 18 வகையான பில் கொடுப்பனவுகள், *Doctor Channeling, Medi Search*, வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு பணம் அனுப்புதல், இலங்கையில் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு பணம் செலுத்துதல், வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு உதவ பணம் வழங்குதல், பயன்பாடு பல சேவைகளை வழங்குகிறது.

## டில்லியில் நடைபெற்ற முதலாவது உலக பௌத்த உச்சி மாநாடு

### 30 நாடுகளின் 171 தூதுக்குழுக்கள் பங்கேற்பு

புதுடில்லியில் கடந்த 20 – 21 ஆம் திகதிகளில் இடம்பெற்ற முதலாவது உலக பௌத்த உச்சிமாநாடு உலகின் இன்றைய பிரச்சினைகளுக்கு பௌத்த சிந்தனைகளின் ஊடாக எவ்வாறு காத்திரமான தீர்வுகளை ஏற்படுத்தலாம் என்பதை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்திருந்தது. சர்வதேச பௌத்த சம்மேளனமும் இந்திய கலாசார அமைச்சும் இணைந்து இந்த உச்சிமாநாட்டை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த உச்சி மாநாட்டில் 30 நாடுகளைச் சேர்ந்த 171 தூதுக் குழுக்கள் கலந்து கொண்டன. இந் நாடுகளின் நன்கறியப்பட்ட பௌத்த சிந்தனையாளர்களும் அறிஞர்களும் இம்மாநாட்டில் கலந்து கொண்டிருந்தனர். இரண்டாவது நாள் மாநாட்டில் திபெத்திய ஆன்மிகத் தலைவர் தலாய்லாமா கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார்.

இம் மாநாடு ஐந்து விஷயங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பௌத்த தர்மமும் சமாதானமும், சுற்றுக்சூழல் நெருக்கடி, சுகாதாரமும் அதன் நீடித்த தன்மையும், நாலந்த பௌத்த பாரம்பரியமும் மற்றும் யாத்திரையும், வாழும் பாரம்பரியமும் பௌத்த சின்னங்களும் ஆகிய ஐந்து தலைப்புகளை இவை கொண்டிருந்தன. ஷங்காய் கோர்பரேஷன் உறுப்பு நாடுகளின் நிபுணர்கள் கலந்துகொண்ட சர்வதேச அமர்வில், கலாசாரங்களுக்கு இடையிலான தொடர்புகளை மீள நிலை நிறுத்துதல், மத்திய ஆசியாவின் பௌத்த கலைகள் மற்றும் கலை வடிவங்களுக்கு மத்தியிலான பொதுத்தன்மைகள், உறுப்பு நாடுகளின் அருங்காட்சியகங்கள் உள்ள பௌத்த சின்னங்களை திரட்டுதல் ஆகிய விஷயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டன. இந்த விஷயங்களை ஒட்டியதாகவே உலக பௌத்த உச்சிமாநாடும் நடைபெற்றிருப்பதாக அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## ஊவா மாகாண கல்வித்துறைக்கு பட்டதாரி ஆசிரியர் நியமனங்கள்



**பதுளை தினகரன் விசேட நிருபர்**

ஊவா மாகாண சபை கல்வி அமைச்சுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட கல்வித்துறை பட்டதாரிகள் 21 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று (25) ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் ஊவா மாகாண பிரதான செயலாளர் காரியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது கொழும்பு, பேராதெனிய, கிழக்கு மற்றும் திறந்த பல்கலைக்கழகங்களின் கல்வித்துறை பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

இவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் பதுளை, பண்டாரவளை, வெலிமடை, பஸ்ஸர, வியலுவ, மஹியங்கனை, பிபிலை, மொனராகலை, வெல்லவாய மற்றும் தனமல்வில கல்வி வளையங்கள் காணப்படும் வசதி குறைந்த பாடசாலைகளுக்கு இணைத்துக்கொள்ளப் பட்டுள்ளனர். இந்த நிகழ்வில் ஊவா மாகாண பிரதம செயலாளர் பி.பி.விஜேரத்ன, ஆளுநரின் செயலாளர் ஆர்.எச்.சீ. பிரியந்தி, ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம்.எம். நந்தசேன, மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் எச்.எம். ஜீவந்த ஹேரத் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## மடுல்சீமை கூட்டத்துக்கு சஜித் வராமைக்கு மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும்



பசறை மடுல்சீமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் கூட்டத்துக்கு வருகை தாராத எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எமது மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் என வடிவேல் சுரேஷ் எம்.பி தெரிவித்துள்ளார்.

பசறை பிரதேச சபை மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பசறை மடுல்சீமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் கூட்டத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் வருகை தராமையானது மக்கள் மத்தியில் இன்றளவும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்து பதவிகளில் இருந்தும் நான் விலகி இருந்தேன். இவ்விடயம் தொடர்பில் எதிர்க் கட்சித் தலைவர் என் மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன்.

வரும் நாட்கள் அரசியல் களத்தில் பல புதிய மாற்றங்கள் ஏற்படுத்தும் நாட்களாகும். எதிர்வரும் காலங்களில் பாராளுமன்றத்தில் நடைபெறும் வாத விவாதங்களை அவதானித்து சர்வதேச நாணய நிதியத்துக்கு வாக்களிப்பது தொடர்பில் நான் ஆராய்வேன். எது எவ்வாறாக இருப்பினும் என் மக்களுக்கு எதிரான எந்த ஒரு சட்டத்துக்கும் நான் ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை. பட்டம், பதவி, கட்சிகள், வண்ணங்கள் தேவையில்லை என் மக்களின் தீர்மானமே என் அடுத்த கட்ட அரசியல் நகர்வின் தீர்க்கமான முடிவாக அமையும் என்றார்.



தேசிய திரைப்பட கூட்டுத்தாபனம் ஏற்பாடு செய்துள்ள 2023 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி திரைப்பட விருது விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ளது. இதற்கான முழுமையான அனுசரணையை கொடகந்த ஹேர்பல் (தனியார்) நிறுவனம் வழங்கவுள்ளது. திரைப்பட கூட்டுத்தாபனமும் ஹேர்பல் நிறுவனமும் நேற்று ஒப்பந்தம் செய்துகொண்டன. ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன, அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட முன்னிலையில், திரைப்பட கூட்டுத்தாபனத்தின் தலைவர் தீபால் சந்திரரத்ன, கொடகந்த நிறுவனத்தின் தலைவர் டாக்டர் லேல்வல ஜீ கொடகந்த ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். ஒப்பந்தம் நேற்று அமைச்சரிடம் கையளிக்கப்பட்டபோது... *(படம்: சுதத் நிஷாந்த)*

## கல்வி முறையை சீர்குலைக்க...

கல்விக் கண்காட்சியும் கலை விழாவும் மூன்று நாட்கள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாத்தறை ராஹூல கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நினைவு முத்திரை ஒன்றும் வெளியிடப்பட்டது.

பாடசாலை அதிபர் மேஜர் சுதத் சமரவிக்கிரமவினால் ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசில் வழங்கப்பட்டதுடன், நூற்றாண்டுக்கான "ராஹூல் நூற்றாண்டு பிரதாப" ஞாபகார்த்த சஞ்சிகையும் வெளியிடப்பட்டது.

மாணவர் யோனல் ரொட்ரிகோவினால் அதே இடத்தில் வரையப்பட்ட ஜனாதிபதியின் உருவப்படமும் இதன்போது ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி,

நாட்டின் எதிர்காலம் கல்வியினால் தீர்மானிக்கப்படுவதாகவும், 21ஆம் நூற்றாண்டுக்கு உகந்த கல்வியை நாட்டின் பிள்ளைகளுக்கு வழங்குவதற்கு அனைவரும் தங்களை அர்ப்பணிக்க வேண்டமெனவும் தெரிவித்தார். 2048 ஆம் ஆண்டளவில் அபிவிருத்தியடைந்த இலங்கையை கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தில் கல்வி தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், 2035 ஆம் ஆண்டளவில் நாட்டில் புதிய கல்வி முறையை உருவாக்குவதே அரசாங்கத்தின் அபிலாஷை எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

எதிர்காலத்தில் கல்வியை நவீனமயப்படுத்துவதற்கு அரசாங்கம் பெருமளவு பணத்தைச் செலவிடத் தயாராக இருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் மிக முக்கியமான தேசிய வளம் இளைஞர்கள் என்றும், எதிர்கால சந்ததியினருக்கு முறையான கல்வியை வழங்குவதன் மூலம் இலங்கையை இந்து சமுத்திரத்தில் பிரதான கேந்திர மையமாக மாற்ற முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

காலநிலை மாற்றத்தை ஒரு பாடமாக மாற்றவும், புதிய வரலாற்று நிறுவனத்தை நிறுவவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. பாடசாலை பாடத்திட்டம் மற்றும் பல்கலைக்கழக கல்வியில் புதிய பாடங்கள் அறிமுகப்படுத்தப்படும். அத்தோடு அனைத்து மாணவர்களும் அறிவியல் மற்றும் கலை பாடங்களை படிக்க வேண்டும்.

## சந்தேக நபருக்கு மே. 09 வரை...

நீதிமன்ற நீதவான் ஜே. கஜநிதிபாலன் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை நெடுந்தீவு இறங்குதுறைக்கருகிலுள்ள வீடொன்றில் ஐந்து முதியவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டதுடன் , 100 வயதான மூதாட்டி படுகாயங்களுடன் மீட்கப்பட்டு , யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்திய பொலிஸார், சம்பவம் இடம்பெற்ற தினத்துக்கு இரண்டு தினங்களுக்கு முன்பிருந்து தங்கியிருந்த நபரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்த நபர் வெளிநாடொன்றில் வசித்து வந்ததுடன் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அந்நாட்டிலிருந்து , இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டவரெனவும் , அவரிடமிருந்து கொலையானவர்களின் உடைமைகள் மற்றும் நகைகள் உள்ளிட்டவை மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார்தெரிவித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய பொலிஸார், சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க ஏதுவாக 48 மணி நேரம் பொலிஸ் காவலில் வைத்து விசாரணைகளை நடத்த அனுமதிக்க வேண்டுமென கோரினர். பொலிசாரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் 48 மணி நேரத்தின் பின்னர் சந்தேகநபரை ஆஜர்படுத்துமாறு பணித்தது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்தேக நபரை சம்பவம் இடம்பெற்ற வீட்டுக்கு அழைத்துச் சென்ற பொலிஸார், சம்பவ இடத்தில் வைத்து விசாரணைகளை நடத்தியதுடன், கொலைக்கு பயன்படுத்தப்பட்ட கத்தி, மற்றும், கொலை செய்யும் போது அணிந்திருந்த ஆடை என்பவற்றை வீட்டின் கிணற்றிலிருந்து பொலிஸார் மீட்டனர்.

## 05 பேருக்கு உடல் உறுப்புகளை...

சித்தாண்டியிலுள்ள தனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தபோது பிரதான வீதியில் கிரானுக்கும் சித்தாண்டிக்கும் இடைப்பட்ட பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்ட விபத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான இந்திரசேன ரேனுஜன் (வயது 29) படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை (21) இடம்பெற்ற இந்த விபத்தின்போது படுகாயடைந்த அவர், மூளைச் சாவடைந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்ததையடுத்து வைத்தியர்களின் ஆலோசனையுடன் அவரது உடலுறுப்புக்களைத் தானம் செய்ய குடும்பத்தினர் முன்வந்துள்ளனர்.

மூளைச் சாவடைந்த ரேனுஜனின் சிறு நீரகங்கள், கல்லீரல், நுரையீரல், இதயம் ஆகிய அவயவங்கள் தேவையுடையோருக்கு பொருத்தும் வகையில் தானம் செய்யப்பட்டதாக ரேனுஜனின் சகோதரி இந்திரசேன கிரிஷாந்தினி தெரிவித்தார். தமது சகோதரனை இழந்தது ஆறாத் துயரமாக இருந்த போதிலும் தமது சகோதரனின் உடல் உறுப்புக்கள் 05 பேருக்கு வாழ்வளிக்கும் என்பதில் தமது சகோதரன் சாகாவரம் பெற்றுள்ளதாக நினைத்து தமது குடும்பத்தினர் பெருமையடைவதாக கிரிஷாந்தினி தெரிவித்தார்.

அத்துடன் இதுபோன்று உடலுறுப்புக்களைத் தானம் செய்ய தாமும் தமது குடும்பத்தவர்களும் சித்தமாக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## பொருளாதார முன்னேற்றத்துக்கு அரச...

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று செவ்வாய்கிழமை (25) நடைபெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சர்வதேச நாணய நிதியம் என்பது சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனமாகும். எனவே அதன் நிபந்தனைகள் மற்றும் யோசனைகள் உள்ளிட்டவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு முறையான வழிமுறைகளுள்ளன. அவற்றுக்கு புறம்பாக எம்மால் செயற்பட முடியாது.

நாணய நிதியத்தின் ஆரம்ப நிபந்தனைகளில் நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்கள் பல உள்ளன. அவற்றில் பிரதானமானது சர்வதேச கடன்களுக்கான வட்டியை செலுத்தக் கூடிய திட்டமிடலை சமர்ப்பிப்பதாகும்.

இதன் மூலம் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் ஏற்படும் பட்சத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு வரி சலுகை வழங்குவது தொடர்பில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முடியும்.

எனினும் ஒப்பந்தத்தின் படி செயற்பட்டால் மாத்திரமே பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முடியும். இதற்கு முன்னர் 16 சந்தர்ப்பங்களில் நாம் சர்வதேச நாணய நிதியத்தை ஏமாற்றியுள்ளோம் என்றார்.

## பல்கலைக்கழக பேராசிரியர்களின்...

பிரதான பரிசோதகர்கள் தமது கடமையை ஏற்கனவே ஆரம்பித்திருப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் தம்மிடம் குறிப்பிட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில், விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் தாமதமாவது தொடர்பில் எதிர்க்கட்சி எம். பி வீரசுமன வீரசேக்கர எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் நடவடிக்கையில் ஈடுபடும் பல்கலைக்கழக பேராசிரியர்களின் 04 கோரிக்கைகளில் 3 கோரிக்கைகளுக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்க முடிந்தது.

எனினும் வரி தொடர்பான கோரிக்கை திறைசேரிக்கு அனுப்பப்பட்டது. அந்த நிலையிலும் பல்கலைக்கழக பேராசிரியர்களின் சங்கத்துடன் நாம் தொடர்ந்தும் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு பிரச்சினைக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுத்துள்ளோம். எனது வரையறைக்குள் முடிந்தளவு தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றார்.

## வழக்குத்தாக்கலை... (03 ஆம் பக்கத் தொடர்)

பகிரங்கப்படுத்த முடியாது என்பதை சபையில் சுட்டிக் காட்டிய அமைச்சர், அந்த வகையில் நட்டஈடு தொடர்பான வழக்கு தோல்வியடைந்தால் சுற்றாடல் தொடர்பான பாராளுமன்ற மேற்பார்வை குழுவே அதற்கான முழு பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ 27/2ன் கீழ் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், 2021 ஆம் ஆண்டு கொழும்பு துறைமுகத்தை அண்மித்த கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளாகிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் கடல் வளங்களுக்கும்,கடல் வாழ் உயிரினங்களுக்கும் ஏற்பட்ட பாதிப்புக்கு நட்டஈடு பெற்றுக்கொள்வது தொடர்பில் கடல் வளங்கள் அபிவிருத்தி அதிகாரசபை 40 துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமித்தது. அக்குழுவானது நட்டஈடு தொடர்பில் இடைக்கால அறிக்கையொன்றை சமர்ப்பித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## உத்தேச புதிய பயங்கரவாத...

முன்மொழிவுகளையும் ஏற்க அரசாங்கம் தயாராகவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று செவ்வாய்கிழமை (25) நடைபெற்ற போதே இதனை அவர் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில், உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் தொடர்பில் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ மகா சங்கத்தினருக்கு விளக்கமளித்துள்ளார். அதற்கமைய மகா சங்கத்தினர் உட்பட ஏனைய எந்தவொரு தரப்பினரும் திருத்தங்களை முன்வைத்தால் அவற்றை ஏற்றுக் கொள்ளத் தயாரென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எமது இந்த நோக்கத்தில் மாற்றங்கள் இல்லை என்பதால் பொறுத்தமான திருத்தங்களை ஏற்றுக் கொள்ள தயாராகவே உள்ளோம். அதற்கமைய திருத்தங்களுடன் உத்தேச புதிய பயங்கரவாத திருத்தச் சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நீதி அமைச்சர் நடவடிக்கை எடுப்பார். எனினும் இது குறித்து அவரால் அமைச்சரவையில் புதிய காரணிகள் எவையும் தெரிவிக்கப்படவில்லையென்றார்.

## அதிகரிக்கப்பட்ட எரிபொருள் ஒதுக்கீடு...

வரை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

முச்சக்கர வண்டிகளுக்கு 05 லீற்றர் 8 லீற்றராகவும், மோட்டார் சைக்கிளுக்கு 04 லீற்றர் 07 லீற்றராகவும், பஸ்களுக்கு 40 லீற்றர் 60 லீற்றராகவும், கார்களுக்கு 20 லீற்றர் 30 லீற்றராகவும், மண் அகழ்வு வாகனங்களுக்கு 15 லீற்றர் 25 லீற்றராகவும் எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அவ்வாறே லொறிகளுக்கு 50 லீற்றர் 75 லீற்றர் வரையும் சிறப்பு நோக்க வாகனங்களுக்கு 20 லீற்றர் 30 லீற்றர் வரையிலும், வான்களுக்கு 20 லீற்றர் 30 லீற்றர் வரையும் எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உண்மைத் தன்மை... (03 ஆம் பக்கத் தொடர்)

அதனைக் கவனத்திற்கொண்டே சர்வதேச டென்டரை கோருமாறு நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன். அதே போன்று முன்னர் கொள்வனவு செய்யப்பட்டுள்ள ரயில் பெட்டிகள் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுகள் பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்துக்கு வெளியிலும் முன்வைக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு முன்வைக்கப்படும் கருத்துக்களில் நூற்றுக்கு நூறுவீத உண்மை கிடையாது.

அதனால் அதன் உண்மைத் தன்மை தொடர்பில் பாராளுமன்றத்திற்கு வெளிப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது தொடர்பில் அறிக்கையொன்றை பெற்றுத் தருமாறு நான் ரயில்வே பொது முகாமையாளருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன். அத்துடன் அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் 800 பேரை நியமிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. துரதிஷ்டவசமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகைமைகளுக்கு இணங்க சாரதிகளை இணைத்துக் கொள்வதில் பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளன. சிறந்த அனுபவமுள்ள சாரதிகள் உள்ளபோதும் அவர்களது கல்வித் தகமைகள் பிரச்சினையாகி உள்ளன. அதனால் அவர்களது சேவைகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. அமைச்சரவை பத்திரம் ஒன்றின் மூலம் அந்த தகைமைகளை மாற்றி விரைவில் சாரதிகளை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆட்கடத்தல்காரர்களிடம்...

வேலைவாய்ப்புப் பணியகம் மேற்கொண்டு வருவதாக தொழில், மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை, வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் தம்மை பதிவு செய்து வேலைவாய்ப்புக்கு செல்வோர் தொடர்பில் முழு பொறுப்பையும் பணியகம் ஏற்கமென்றும் ஆட்கடத்தல் காரர்களிடம் சிக்கிவிடக் கூடாதென்றும் அமைச்சர் மனுஷ நாணயக்கார கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில், ராஜிகா விக்கிரமசிங்க எழுப்பிய கேள்வி யொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

சட்டவிரோதமான முறையில் செயற்படும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனங்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

Capital trust
Capital TRUST Research (Pvt) Ltd
A Capital TRUST Group Company
42, Sir Mohammed Macan Markar Mawatha, Colombo 3.
Hotline: 0705 666 777
WhatsApp: 0777 233 633

## Stock market records a modest decline on low volumes...

**Daily Market Watch**
25th April 2023

### Market Commentary

Market activity remained relatively low, with the All Share Price Index declining by 0.67% to close at 9,125.32. Sampath Bank, Ceylon Tobacco and Expolanka Holdings declined by 2.0%, 3.4% and 2.0% respectively, while Aitken Spence, HNB and LOFC gained 2.3%, 1.1% and 1.8%. With most investors still on the sidelines, turnover recorded LKR 1,144 mn with trading in Windforce accounting for 13% of turnover. Other notable trades included Dialog and RIL Property which accounted for 8% and 3% of the day's turnover. While the stock market has remained relatively sluggish over the past few weeks, market activity is likely to gather momentum once clarity on the debt restructuring emerges.


### Market Performance

| | 25.04.2023 | 24.04.2024 | %Chg. |
|---|---|---|---|
| All Share Price Index | 9,125.3 | 9,187.3 | -0.67 |
| S&P SL 20 Index | 2,656.9 | 2,683.8 | -1.00 |
| Turnover (LKR mn) | 1,145.0 | 678.7 | 68.7 |
| Foreign Purchases (LKR mn) | 293.0 | 146.5 | 100.0 |
| Foreign Sales (LKR mn) | 51.4 | 67.3 | -23.7 |
| Market Cap (LKR bn) | 3,883.7 | 3,913.6 | -0.8 |
| Market Cap (US$ bn) | 12.1 | 12.2 | -0.8 |
| Traded Companies | 240 | 243 | -1.2 |
| Market PER (x) | 5.0 | 5.0 | -0.6 |
| Price to Book (x) | 0.9 | 0.9 | -1.1 |
| Dividend Yield (%) | 4.1 | 4.0 | 0.7 |


### Top Gainers and Loosers





### Relative Strength Index (RSI)




### Contributors to ASPI





### Turnover Breakdown




### Key Rates

| | 25.04.2023 |
|---|---|
| Prime Lending Rate (Avg. Weighted) | 21.45% |
| Fixed Deposit Rate (Avg. Weighted) | 19.80% |
| Treasury Bill Rate (364 Days) | 22.96% |
| Consumer Price Inflation - CCPI (YoY % change) | 50.30% |

### Market Benchmarks




### Largest Trades




### Corporate News

CASH DIVIDENDS

PGP Glass Ceylon PLC (GLAS) - LKR 1.66. XD date – 20.07.2023.

Sri Lanka Telecom PLC (SLTL) - LKR 0.25. XD date – 12.05.2023.

Ceylinco Insurance PLC (CINS) - LKR 45.00. XD date – 29.05.2023.

Company PLC (CTC) - LKR 20.30. XD date – 29.05.2023.

United Motors Lanka PLC (UML) - LKR 1.00. XD date – 02.05.2023.

Overseas Realty (Ceylon) PLC (OSEA) - LKR 1.25. XD date – 27.04.2023.

Nestle Lanka PLC (NEST) - LKR 75 .00. XD date – 06.06.2023.

SCRIP DIVIDENDS

National Development Bank PLC (NDB) - 1 share for 17.9160004596 Shares.

*Disclaimer - The information contained in this material has not been independently verified. No representation or warranty express or implied is made as to, and no reliance should be placed on, the fairness, accuracy, completeness or correctness of the information or opinions contained herein and nothing in this presentation is, or shall be relied upon as, a promise or representation by the Company.*

## மோதரவில் சட்டவிரோத...

இம் மருந்து உற்பத்தி நிலையத்தின் உரிமையாளரின் வீட்டிலிருந்து மருந்து வகைகள் மற்றும் மருந்து உற்பத்திக்கு பயன்படுத்தப் பட்டதாகச் சந்தேகிக்கப்படும் மூலப்பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டதாக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் உணவு மற்றும் மருந்துகள் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நபர் வலி நிவாரணி மாத்திரைகளை தயாரித்துள்ளதாகவும், இந்திய மருந்து வகைகளுக்கு நிகரான மருந்துகளை அவர் தயாரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மலேரியாவால் ஒருவர்...

பேருவளை, சீனன்கோட்டை பகுதியைச் சேர்ந்த 35 வயது நபர் ஒருவரே இவ்வாறு மரணமாகியுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் திங்கட்கிழமை (24) தெரிவித்தன. வர், ஏப்ரல் 10 ஆம் திகதியன்று இலங்கைக்குத் திரும்பினார். பின்னர் நான்கு நாட்கள் காய்ச்சலுடன் தனது வீட்டிலிருந்தார். ஏப்ரல் 14 ஆம் திகதி தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் ஏப்ரல் 15 ஆம் திகதி அன்று மரணமானதாக தெரியவந்துள்ளது. இதேவேளை, இலங்கையிலுள்ள சர்வதேச விமான நிலையங்களில் மலேரியா பாதிப்புக்குள்ளான நாடுகளிலிருந்து திரும்பி வருபவர்களை பரிசோதிப்பதற்கான சரியான பரிசோதனைத் திட்டம் இல்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரூ.08 கோடி பெறுமதியான...

சுங்க அதிகாரிகள் சோதனையிட்ட போது, மறைத்து வைத்திருந்த 12 கிலோ குஷ் ரக போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த மரப்பெட்டிகளுக்குள், குஷ் ரக போதைப் பொருளடங்கிய 24 பொதிகளில் வைக்கப்பட்டிருந்ததாகவும் சுங்கத்துறை தெரிவித்துள்ளது. போதைப் பொருளை சுங்கத்திலிருந்து விடுவிக்க உதவிய ஒருவரும் கைது செய்யப்பட்டதாகவும், இவற்றின் பெறுமதி சுமார் 84 மில்லியன் ரூபா எனவும் சுங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

## இந்தோனேசிய சுமத்ரா தீவில்...

திணைக்களம், இலங்கையின் கரையோரப் பகுதிகள் பாதுகாப்பானவையாக அறிவிக்கப்படுவதாக தெரிவித்துள்ளது. இந்தோனேசியாவின் சுமத்ரா தீவுக்கு மேற்கு பகுதியில் ஏற்பட்ட 7.3 மெக்னிடியுட் அளவிலான நில நடுக்கத்தினால் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டு சுமார் இரண்டு மணி நேரத்தின் பின்னர் எச்சரிக்கை மீளப் பெறப்பட்டது.சுனாமி எச்சரிக்கைக்கமைய பாதிக்கப்பட்ட பகுதியில் வ சிப்பவர்களை உடனடியாக வெளியேறுமாறு உள்ளூர் அதிகாரிகள் அறிவுறுத்தி யிருந்தனர். இந்த நில அதிர்வு ரிச்டர் அளவுகோலில் 6.9 மெக்னிடியுட்டாக இருந்ததென ஐரோப்பியமத்திய தரைக்கடல் நில அதிர்வு மையம் முன்னதாக தெரிவித்திருந்தது. 84 கிலோமீட்டர் ஆழத்தில் பதிவான இந்த நில நடுக்கத்தைத் தொடர்ந்து பல பின்னதிர்வுகள் உணரப்பட்டுள்ளன. மேற்கு சுமத்ராவின் தலைநகரான படாங்கில், நிலநடுக்கம் வலுவாக உணரப்பட்டுள்ளது.

## சுற்றுலா விடுதிகளின்...

தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க விடுதிகளின் பாதுகாப்பு பிரதானிகளுக்கு அறிவித்துள்ளார். அத்துடன், எதிர்காலத்தில் சுற்றுலா விடுதிகளில் ஏற்படக் கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை மேற்கொள்ளுமாறும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பு சுற்றுலா விடுதிகளின் பாதுகாப்பு பிரதானிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன், தற்போது சுற்றுலா விடுதிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் எதிர்நோக்கும் பாதுகாப்புச் சிக்கல்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## சூடானில் சிக்கியுள்ள இலங்கையர்...

முடிவுக்குக் கொண்டுவருமாறு மோதலில் ஈடுபட்டுள்ளவர்களை கேட்டுக் கொள்கின்றோமென அவர் தெரிவித்துள்ளார். சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு முன்னுரிமை வழங்குவதே சாத்தியமான நிரந்தரமான தீர்வென தெரிவித்துள்ள அமைச்சர் அலிசப்ரி, சூடான் மக்களுக்கு அமைதி சமாதானம் ஸ்திரத்தன்மை முன்னேற்றம் போன்றவை கிட்டவேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். சூடானிலுள்ள இலங்கையரின் நிலைமையை நாங்கள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம். அவர்களை பாதுகாப்பாக வெளியேற்றுவது குறித்து கவனம் செலுத்துகின்றோம் என குறிப்பிட்டுள்ள வெளிவிவகார அமைச்சர், இந்த விடயத்தில் இந்தியா வழங்கிய உதவிகளை பாராட்டுவதாகவும் தெரிவித்துள்ளார். அடுத்த ஒரு சில நாட்களில் சூடானில் சிக்குண்டுள்ள இலங்கையரை பாதுகாப்பாக வெளியேற்ற முடியுமென நம்பிக்கை கொண்டுள்ளோமெனவும் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

## நுவரெலியாவில் 04 மாடிகளுக்கு...

ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. நுவரெலியா பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முறைசாரா அபிவிருத்தி காரணமாக நுவரெலியா நகரின் அழகு படிப்படியாக குறைந்து வருவதாகவும் இது சுற்றுலாத்துறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் ஜனாதிபதி அண்மையில் தெரிவித்தார்.

அதற்கமைய, இப்பகுதியில் சுற்றுலா வளர்ச்சிக்கு தேவையான சூழலை உருவாக்கும் வகையில், விரிவான சுற்றுலா மேம்பாட்டு திட்டத்தை தயாரிப்பதற்கும், புதிய கட்டடங்களை நிர்மாணிப்பதை ஒழுங்குபடுத்துவதற்கும் மத்திய மாகாண ஆளுநரின் தலைமையில் செயலணியொன்றை அமைக்கவும் அமைச்சரவையில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

## தனிநபர் பிரேரணையாக... (03 ஆம் பக்கத் தொடர்)

சபைத் தேர்தல்கள் சட்டத்தை திருத்தும் வகையில் இந்த சட்டமூலம் அமைந்துள்ளது. இந்த மாகாண சபை தேர்தல் திருத்தச் சட்டமூலம் தனிநபர் சட்டமூலமாக முன்வைக்கப்பட்டு அது வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டது. அதற்கமைய குறித்த சட்டமூலத்தின் முதல் வாசிப்பு நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. மாகாண சபை தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை சுமந்திரன் எம். பி சமர்ப்பித்ததுடன் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் அந்த சட்ட மூல திருத்தத்தை ஆதரித்து சபையில் வழிமொழிந்தார்.

## இலங்கைக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

இந்திய பயணிகளை சுற்றுலாவுக்கு ஊக்குவிக்கும் விதமாக 20 மெரிக்க டொலருக்கு விசா வழங்கப்படுகிறது. மே மாதத்திலிருந்து பயணிகளுக்கான சொகுசு கப்பல், புதுச்சேரியிலிருந்து தலைமன்னாருக்கு மாதத்துக்கு 04 முறை இயக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதென்று அவர் கூறினார். இந்நிகழ்வில் இலங்கை அணி முன்னாள் கிரிக்கெட் அணி வீரர் சனத் ஜயசூரியா, இலங்கை சுற்றுலாத்துறையின் ஊக்குவிப்பு பணியக தலைவர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## புலிகள் புதைத்து... (03 ஆம் பக்கத் தொடர்)

பயன்படுத்தப்படும் பல கருவிகள் மற்றும் காரொன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவர் கிளிநொச்சி கொக்கிளாய் பிரதேசத்தை சேர்ந்தவர்களெனவும், ஏனைய சந்தேக நபர்கள் அனைவரும் ஜாஎல, நீர்கொழும்பு, வெல்லம்பிட்டி மற்றும் களனி பிரதேசங்களை சேர்ந்தவர்களெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாணக்கியன் எம்பியை... (03 ஆம் பக்கத் தொடர்)

பார்த்து நீங்கள்தான் இனவாதி.நாம் வடக்கு,கிழக்கு என்று பிரித்துப்பார்ப்பதில்லை. நீங்கள்தான் நான் கிழக்கு மாகாணத்தவன் என இனவாதம் பேசுகின்றீர்கள்.புலி வெளியே பாய்ந்து விட்டது. புலியின் உண்மை முகம் வெளிப்படுகின்றது.பிரச்சனைகளை தீர்ப்பதற்கு உங்களைப்போன்றவர்கள்தான் தடையாக இருக்கின்றார்கள் வாயை மூடிக்கொண்டிருங்கள் என அமைச்சர் அதன் போது குறிப்பிட்டார். அதன்போது குறுக்கிட்ட சுமந்திரன் எம்.பி ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை எழுப்பியதுடன் சாணக்கியன் எம்.பி.யை அமைச்சர் மனுஷ நாணயக்கார புலி என்கின்றார். மாவட்ட ரீதியான பிரச்சினைகளை சபையில் எடுத்துரைக்கும் போது புலிகள் என குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

பாராளுமன்றத்தில் உரையாற்றும் வழிமுறைகளை ஆளும் தரப்பு அமைச்சர் கற்றுக்கொள்ள வேண்டும். சாணக்கியனை புலி என்று அவர் கூறுவதனை சபை முதல்வரே நீங்கள் அனுமதிக்கின்றீர்களா? எனக் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அமைச்சர் கூறிய விடயத்தில் புலி என்ற சொல் தெரிவிக்கப்பட்டிருந்தால் அது ஹன்சாட்டிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அதனையடுத்து அவ்வாறான வார்த்தைப்பிரயோகத்தை ஹன்சாட்டிலிருந்து நீக்குமாறு பிரதி சபாநாயகர் சபையில் தெரிவித்தார்.

அதன்பின்னர் சாணக்கியன் எம்.பி தனது கருத்தினைக்கூற ஒரு நிமிடம் வழங்கப்பட்டது. அதன்போது தமது கருத்தை முன்வைத்த சாணக்கியன் எம்.பி. நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஸ, வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி ஆகியோரை விமரிசிக்கவே அமைச்சர் அலிசப்ரிக்கும் சாணக்கியனுக்குமிடையில் சபையில் கடுமையான தர்க்கம் ஏற்பட்டது.

## இலங்கையில் இதுவரை... (03 ஆம் பக்கத் தொடர்)

அதற்கான காரணங்களை அவர்களால் இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லையெனவும் அவர் கூறினார்.

கடற்றொழில் அமைச்சு

## வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

**மாதாந்த வாடகை அடிப்படையில் 04 கார்களை (இன்ஜின் திறன் 1600 CC) கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கோரல்**

***(CFHC/SD/RENT/HO/2023/25)***

இல-15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15 இல் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தினால் மாதாந்த வாடகை அடிப்படையில் இன்ஜின் திறன் 1600 CC 04 கார்களை (டீசல்,பெற்றோல்,Hybrid) கொள்வனவு செய்வதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2023.05.09 ஆம் திகதி பி.ப.02.00 மணி வரை கோரப்படும். இது தொடர்பான அனைத்து விபரங்களையும் கூட்டுத்தாபனம் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் **(www.cfhc.gov.lk)** இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்கோரலுக்கான விண்ணப்பத்தினை பெற்றுக்கொள்வதற்கு **மீள்பெறமுடியாத** தொகையாக **ரூ.1,000.00** மற்றும் **மீள்பெறக்கூடிய உத்தரவாதப்பிணை** தொகையாக **ரூ.25,000.00** செலுத்த வேண்டும். மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள தொலைபேசி இலக்கம் 011-2525063 கொள்முதல் முகாமையாளர் மூலமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்,
வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,
இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,
கொழும்பு 15.

# பெறுகை அறிவித்தல்

**இலங்கை தேசிய வைத்தியசாலை - கொழும்பு 10**

இலங்கை தேசிய வைத்தியசாலையில் பிரதான ஆய்வுகூடத்தின் நோயியல் அறிக்கைகளை வழங்குவதற்குத் தேவையான 2 வகை கடிதத் தலைப்பில் சுமார் 1500000 அளவில் அச்சிட்டு வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. மேற்படி வழங்கல்களுக்காக தகைமை வாய்ந்த பதிவு செய்துள்ள நிறுவனங்கள் மற்றும் நபர்கள் இதற்கான விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கலாம் என்பதுடன் மீளளிக்கப்படாத 3500.00 ரூபா வைப்பை 2023-05-16ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்தியதன் பின் இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல் பிரிவிலிருந்து இயைபுடைய விலைக்கோரல் நிபந்தனைகள் சகிதமான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் மாதிரிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், பின்னர் சமர்ப்பிக்கப்படும் மாதிரிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

2023-05-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இலங்கை தேசிய வைத்தியசாலை பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**வைத்திய நிபுணர் டப்ளியூ. கே. விக்ரமசிங்க,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**

# மத்திய சுற்றாடல் அதிகாரசபை

**பதுளை மாவட்டத்தில் பண்டாரவளை பிரதேச செயலக பிரிவின் கொந்தஹெலகம, கொந்தஹெலபதன மற்றும் தலுகெலேபதன (க்ரொப்ட்ஹில் தோட்டம்) பிரதேசத்தில் உத்தேசிக்கப்பட்ட நிலம் அமைக்கும் திட்ட கருத்திட்டத்திற்கான ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை (ஆ.சு.ப) அறிக்கையின்**

## இறுதி தீர்மானம் தொடர்பான பொது அறிவித்தல்

**தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23 ஆஆ(4) இன் கீழான அறிவித்தல்**

குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், விசேட விதிகளுக்கமைவாக, மேற்கூறப்பட்ட திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான, திருத்தியமைக்கப்பட்ட 1993 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்ட (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான விதிமுறை) ஒழுங்குவிதி 9(i) இற்கு அமைவாக, கண்டி வில்லியம் கொப்பல்லாவ மாவத்தை இல 12, 4ம் மாடி, எனும் விலாசத்திலமைந்த, Prime Lands (Pvt) Ltd இன் உதவி பொது முகாமையாளருக்கு அங்கீகாரத்தினை வழங்க மத்திய சுற்றாடல் அதிகார சபையானது தீர்மானித்துள்ளது என்பதனை பொதுமக்கள் யாவருக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய சுற்றாடல் அதிகார சபை**
**"பரிசரபியச"**
**இல.104,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல**

வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு

## இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

**2023, ஏப்ரல் 26 ஆந் திகதி கொண்டாடப்படும் உலக புலமைச் சொத்துக்கள் தினத்திற்காக பொதுமக்களுக்கு விடுக்கப்படும் அறிவித்தல்**

# 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் வெளியீட்டு உரிமைகள் சட்டம் தொடர்பான ஏற்பாடுகள்

புலமைச் சொத்துக்கள் தொடர்பான சட்டத்தினை அமுல்படுத்துவதற்காகவும், பேடன்ட் அனுமதிப்பத்திரங்கள், வியாபாரச் சின்னங்கள், கைத்தொழில் திட்டங்கள் போன்றவற்றைப் பதிவு செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகிப்பதற்காகவும், வெளியீட்டு உரிமைகள் உரிமை மற்றும் அதனுடன் சம்பந்தமான உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் நிர்வகிப்பதற்காக கூட்டுச் சங்கங்களை நிறுவுதல் மற்றும் வெளியீட்டு உரிமைகள் உரிமை மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட உரிமைகள் உட்பட புலமைச் சொத்துக்கள் தொடர்பாக தேசிய விழிப்புணர்வினை மேம்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல் ஆகியன புலமைச் சொத்து பணிப்பாளர் மா அதிபதிக்கு மேற்குறித்த சட்டத்தின் ஊடாக ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களாகும்.

வெளியீட்டு உரிமைகளின் கீழ் "ஆக்கியோன்" என்பதன் மூலம் ஒரு படைப்பினை ஆக்கிய நபர் கருதப்படுவதுடன்,"செயற்காட்சியாளர்கள்" என்பதில் பாடகர்கள், வாத்தியக் கலைஞர்கள், அளிக்கை செய்வோர் மற்றும் நடிகர்களும் உள்ளடங்குகின்றனர். மேற்குறித்த சட்டத்தின் வெளியீட்டு உரிமைகள் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட படைப்புக்களாக **புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள், கணனி நிரல்கள், சங்கீத அல்லது நாடகப் படைப்புக்கள், கேட்போலிக் காட்சிப் படைப்புக்கள், சித்திரங்கள், சிற்பங்கள், புகைப்படக் கலைப் படைப்புக்கள், கட்டிடக் கலைப் படைப்புக்கள், வரைபடங்கள்** ஆகியன உள்ளடங்குகின்றன. அத்துடன் ஆரம்ப உரிமையாளரின் அனுமதியுடன் ஆக்கப்படுகின்ற "சார்பியப் படைப்புக்களான" மொழிபெயர்ப்புக்கள், தழுவல்கள், தொகுப்புக்கள் மற்றும் ஆரம்பப் படைப்புக்களாகக் கருத முடியுமான தரவுச் சேர்க்கைகள் போன்றனவும் "ஆரம்பபடைப்புக்களாக" பாதுகாப்புப் பெறும்.

வெளியீட்டு உரிமைகள் உரிமையாளர்களுக்குத் தமதுபடைப்புக்களை விற்பனை செய்தல், மீளுருவாக்கம் செய்தல் மற்றும் மொழிபெயர்த்தல் ஆகியவற்றுக்கு அதிகாரத்தை ஒப்படைத்தல் மற்றும் அதற்காக நிதிரீதியான பெறுமதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு "பொருளாதார உரிமைகளின்" கீழான சட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. படைப்பொன்றை ஆக்கியோன் தொடர்ந்தும் அந்த உரிமைகளின் உரிமையாளராக இல்லாத சந்தர்ப்பங்களிலும் கூட அவரது பொருளாதார உரிமைகளிலிருந்து சுயாதீனமாகி அவரது பெயர் பிரச்சித்தமாகத் தெரியும் வகையில் எடுத்துக் காட்டுதல், செயற்படுத்துவதற்காக "தார்மீக உரிமைகளின்" கீழான சட்டத்தில் ஏற்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. மேலும், அந்த பொருளாதார மற்றும் தார்மீக உரிமைகள் ஆக்கியோனின் ஆயுட் காலத்தினுள் மற்றும் மரணம் நிகழ்ந்த தினத்திலிருந்து 70 வருடங்களுக்குள் பாதுகாப்புப் பெறும்.

எவ்வாறாயினும், படைப்புக்கள் தொடர்பான விமர்சனங்கள், கருத்துத் தெரிவித்தல், செய்தி அறிக்கையிடல், கற்பித்தல் (வணிகரீதியாக அல்லாத முறையில்), ஆராய்ச்சிகள் போன்றவற்றுக்குப் படைப்புக்களை உபயோகிப்பது "நியாயமான பாவனையாக" வெளியீட்டு உரிமைகள் சட்டத்திற்கு விதிவிலக்கான சந்தர்ப்பமாக சட்டத்தின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், பார்வைக் குறைபாடுடைய மற்றும் பார்வைக் குறைபாடு காரணமாக வாசிப்பில் பலவீனமுடைய அல்லது உடல்ரீதியான அங்கவீனம் காரணமாக புத்தகமொன்றைப் பிடிப்பதற்கு அல்லது கையாளுவதற்கு முடியாத ஆட்களுக்கு ஆரம்பப் படைப்பொன்றை இரசிப்பதற்கான உரிமையினையும் நியாயமான பாவனையாகக் கருதி செயற்படுவதற்கு வெளியீட்டு உரிமைகள் சட்டத்திற்கு விதிவிலக்கான சந்தர்ப்பங்களாக சட்டத்தில் திருத்தப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சட்டத்தின் கீழ் "தொடர்புடைய உரிமைகளாக" அளிக்கை செய்வோரின் முன்னளிப்புக்கள், வாய்மொழிப் பதிவுகள் அல்லது வட்டுக்களில் பதிதல் தயாரிப்பாளர்களினதும் ஒளி/ ஒலிபரப்பு அமைப்புக்களினதும் உரிமைகள் போன்றன உள்ளடங்கும். அவர்களின் உரிமைகள் அந்த முன்னளிப்புக்கள் அல்லது வட்டுக்களில் பதிதல் ஒளி/ ஒலிபரப்பு நிகழ்ந்த தினத்திலிருந்து ஐம்பது ஆண்டுகள் வரை பாதுகாப்புப் பெறும்.

புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் 22 ஆவது பிரிவின் கீழ் வெளியீட்டு உரிமைகள் மற்றும் தொடர்புடைய உரிமைகள் மீறப்படும்போது கௌரவ நீதிமன்றமொன்றின் முன்னிலையில் ஒரு பரிகாரத்தினைக் கோருதல் மற்றும் அவ்வாறான மீறலொன்றுக்கான தயார்நிலையின்போது கௌரவ நீதிமன்றத்திடம் தடை உத்தரவு (injunction), இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு உட்படல் போன்ற பரிகாரங்களைக் கோருவதற்கு குறித்த உரிமைகளின் உரிமையாளருக்கு உரிமை உண்டு. மேலும், அவ்வாறான பாதுகாக்கப்பட்ட படைப்புக்களின் உரிமைகளை மீறுகின்ற ஆட்கள் குற்றமொன்றைச் செய்வதுடன் சட்டத்தின் XXXVIIIஆம் அத்தியாயத்தில் விதிக்கப்பட்டுள்ளவாறு நீதவான் நீதிமன்றமொன்றில் வழக்கு விசாரணையொன்றின் பின்பு தண்டனையொன்றுக்கும் உட்படலாம்.

22 (3) (ஆ)பிரிவின் கீழ் வெளியீட்டு உரிமைகள் அல்லது தொடர்புடைய உரிமைகளை மீறுவதன் காரணமாக அதிருப்தியடைகின்ற ஒருவரினால் புலமைச் சொத்து பணிப்பாளர் மா அதிபதிக்கு உரிய படிவம் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கோரிக்கை அல்லது சத்தியக் கடதாசியொன்று ஊடாக "பிணக்குத் தீர்ப்பதற்காக" எந்தவிதமான கட்டணமும் இன்றி முறைப்பாடொன்றைச் செய்யலாம். அந்தக் கோரிக்கைக்கு ஏற்ப நடாத்தப்படும் விசாரணையின் பின்பு சத்தியக் கடதாசிகள் மற்றும் எழுத்துமூலமான விடய வெளிப்படுத்தல்களைக் கருத்திற்கொண்டு அந்தப் பிணக்கினைத் தீர்க்கும் தீர்ப்பினை பணிப்பாளர் மா அதிபதி வழங்க முடியும். அந்தத் தீர்ப்பு ஏற்புடைய தரப்பினரின் விடயத்தில் கட்டுப்படுத்துவதாக அமையும். பணிப்பாளர் மா அதிபதி வழங்குகின்ற அந்த தீர்ப்பினால் அதிருப்தியடைந்த ஒருவருக்கு கௌரவ நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்றை முன்வைக்கலாம். புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக "புராணக்கதைகள்" வெளியீடொன்றைப் பாதுகாப்பது தொடர்பான ஏற்பாடுகளும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், முறையான அனுமதியின்றி புராணக்கதைகள் வெளியீடொன்றை மீளுருவாக்குதல், அளிக்கை செய்தல், பரப்புதல் ஊடாக தொடர்பாடல் செய்தல் போன்ற வணிகப் பணிகளுக்காக தழுவல், மொழிபெயர்த்தல் ஆகியவற்றைச் செய்யக் கூடாது என ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் 25 ஆம் பிரிவுக்கு ஏற்ப வெளியீட்டு உரிமைகள் மற்றும் தொடர்புடைய உரிமைகள் சம்பந்தமாக ஏற்புடைய படைப்பாளிகளின் உரிமைகளைக் கூட்டாகப் பாதுகாக்கும் நோக்குடன் கூட்டிணைப்புச் செய்யப்பட்ட அல்லது செய்யப்படாத ஆட்கள் சபையொன்றைத் தாபிக்க முடியும் என்பதுடன், புலமைச் சொத்து பணிப்பாளர் மா அதிபதியினால் வழங்கப்படுகின்ற சட்டபூர்வமான பதிவின் கீழ் கூட்டுச் சங்கங்களை ஆரம்பிக்கவும், அந்தச் சங்கங்கள் ஊடாக அனுமதிப்பத்திரங்களை வெளியிடவும், வழங்கவும் முடியும். அந்த சங்கங்களின் அங்கத்தவர்களான படைப்பாளிகளின் உரிமைகளைச் செயற்படுத்துவதற்காக அந்த சங்கங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், ஆக்கவுரிமையினை அறவிடுதல் மற்றும் உரிய வீதத்திற்கு ஏற்ப பகிர்ந்தளித்தல் போன்றவற்றை சட்டபூர்வமான முறையில் மேற்கொள்ள வேண்டும். குறித்த சங்கங்களின் சகல தவணை அறிக்கைகள் கணக்குக் கோப்புக்கள் மற்றும் தகவல்களை உரிய முறையில் பேணிச் செல்ல வேண்டும் என்பதுடன், பணிப்பாளர் மா அதிபதி அந்த சங்கங்கள் உரிய முறையில் இயங்குகின்றனவா என்பதைக் கண்காணிக்க வேண்டும். அந்த சங்கங்கள் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் தகுதிவாய்ந்த கணக்காய்வாளர் ஒருவர் மூலம் கணக்காய்வு செய்த பின்பு கணக்கறிக்கைகளைத் தயாரித்து செயலாற்றுகை அறிக்கையொன்றுடன் பணிப்பாளர் மா அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

சட்டத்தின் 25 ஆவது பிரிவின் கீழ் இசைப் படைப்புக்களுக்காக பின்வரும் கூட்டுச் சங்கங்கள் இரண்டும் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தில் முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. குறித்த இரண்டு சங்கங்களுக்கும் தமது சங்கங்களின் அங்கத்தவர்களான படைப்பாளிகள்,பாடலாசிரியர்கள், இசைக்கலைஞர்கள் அல்லது உரிமை உரிமையாளர்களின் வெளியீட்டு உரிமைகள் மற்றும் தொடர்புடைய உரிமைகளுக்காக அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் அல்லது ஒப்படைப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

- பாடல் இயற்றுவோர் சங்கம் (OSCA) - வெளியீட்டு உரிமைகள் மற்றும் தொடர்புடைய உரிமைகளுக்காக
- இலங்கை இசை ஆக்குநர், இசையமைப்பாளர் மற்றும் வெளியீட்டாளர்களின் சங்கம் (ACPO) - வெளியீட்டு உரிமைகளுக்காக

அவ்வாறாயினும், அவ்வாறான உரிமைகளைக் கொண்ட ஒருவருக்கு அவரின் தனிப்பட்ட நிலைமையில் தமக்குச் சொந்தமான உரிமைகள் சம்பந்தமாக அனுமதிப்பத்திரங்களை வழங்கும் உரிமை உள்ளது.

மேற்குறித்த வெளியீட்டு உரிமைகள் விடயத்தின் கீழ் உள்ள ஏற்பாடுகள் தொடர்பாக ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்கும் விழிப்புணர்வூட்டுவது இந்த அறிவித்தலின் நோக்கமாகும். மேலதிக தகவல்கள் தேவைப்படின் பின்வரும் மின்னஞ்சல் முகவரி ஊடாக உங்களது விசாரிப்புக்களை புலமைச் சொத்து அலுவலகத்தின் பதிப்புரிமைகள் பிரிவுக்கு அனுப்பிவைக்கவும்.

nipocopyrights.lk@gmail.com

011-2695002, 011-2689368 (224), 011-2669180 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவும் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் www.nipo.gov.lk எனும் இணையத்தளம் ஊடாகவும் தகவல்களைப் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

**கீதாஞ்சலி ஆர் ரணவக்க,**
**புலமைச் சொத்து பணிப்பாளர் மா அதிபதி.**
**தேசிய புலமைச் சொத்து அலுவலகம்**
**வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு**

**தொலைபேசி** - +94 112 669 179
**மின்னஞ்சல் முகவரி** nipos@sltnet.lk

**தேசிய புலமைச் சொத்து அலுவலகம்**
**மூன்றாவது மாடி**
**சமாகம் மெதுர, இலக்கம் 400,**
**டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10.**

# வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| 18 -1XXX | TOYOTA | CARINA AT170 | 1988 |
| 018 -1XXX | NISSAN | B12 SUNNY | 1989 |
| 301 -3XXX | DAEWOO | LEGANZA | 1998 |
| KY -5XXX | TOYOTA | PRIUS ZVW30 | 2012 |
| **வேன்** | | | |
| 061 -7XXX | NISSAN | CARAVAN | 1988 |
| **லொறி** | | | |
| GO -6XXX | NISSAN | ATLAS | 1997 |
| PS -5XXX | TATA | SUPER ACE | 2012 |
| PW -5XXX | LANKA ASHOK LAYLEND | DOST LX | 2013 |
| DAE -3XXX | TATA | ACE HT2 | 2016 |
| DAF -4XXX | MAHINDRA | SUPRO MAXITRUCK T6 | 2016 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| GV -2XXX | BAJAJ | BAJAJ AUTO | 2002 |
| HP -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| HW -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| HY -2XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| JA -6XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| QC -4XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QB -5XXX | BAJAJ | AUTO RE 2 STORKE | 2005 |
| QE -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QH -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QJ -2XXX | BAJAJ | AUTO AR4S | 2007 |
| QJ -8XXX | BAJAJ | AUTO AR4S | 2007 |
| QL -1XXX | BAJAJ | AUTO AR4S | 2007 |
| QM -5XXX | BAJAJ | AUTO AR 4S | 2007 |
| QO -8XXX | BAJAJ | AUTO AR4S | 2008 |
| QP -0XXX | BAJAJ | AUTO AR4S | 2008 |
| QU -8XXX | BAJAJ | BAJAJ 4 S | 2009 |
| QV -8XXX | BAJAJ | BAJAJ 4S | 2009 |
| YB -4XXX | BAJAJ | AR4S-UG | 2010 |
| YC -2XXX | PIAGGIO | APE | 2010 |
| YF -3XXX | BAJAJ | RE 205 | 2010 |
| AAP -2XXX | BAJAJ | RE | 2014 |
| AAY -8XXX | BAJAJ | RE | 2015 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2023 ஏப்ரல் 26ஆம், 27ஆம், 28ஆம் மற்றும் மே 2ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2023 மே 2ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.

மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

Mercantile Investments and Finance PLC

தொடர்பு:
**ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350**

# மத்திய சுற்றாடல் அதிகாரசபை

**பதுளை மாவட்டத்தில் பண்டாரவளை பிரதேச செயலக பிரிவின் அம்பதன்டேகம, அந்துரனகொல்லேபதன பிரதேசத்தில் உத்தேசிக்கப்பட்ட மரம் வெட்டும் திட்ட கருத்திட்டத்திற்கான ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை (ஆ.சு.ப) அறிக்கையின்**

## இறுதி தீர்மானம் தொடர்பான பொது அறிவித்தல்

**தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23 ஆஆ(4) இன் கீழான அறிவித்தல்**

குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், விசேட விதிகளுக்கமைவாக, மேற்கூறப்பட்ட திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான, திருத்தியமைக்கப்பட்ட 1993 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்ட (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான விதிமுறை) ஒழுங்குவிதி 9(i) இற்கு அமைவாக, எல்ல, கிதல்எல்ல, அத்துல்கஸ்ஹின்ன, இலக்கம்202C. 4ம் மாடி எனும் விலாசத்திலமைந்த திரு. K.B.O.P. ஜயசூரியவிற்கு அங்கீகாரத்தினை வழங்க மத்திய சுற்றாடல் அதிகார சபையானது தீர்மானித்துள்ளது என்பதனை பொதுமக்கள் யாவருக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய சுற்றாடல் அதிகார சபை**
**"பரிசரபியச"**
**இல.104,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — திங்கட்கிழமை 2023.04.24 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5096 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,860,012.00 — ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 5 9 0 0 0 2

**கொவிசெத** Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3338 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 98,400,617.04 — ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 03 47 57 62

**ராசி சுப பலன்** Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 405 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,768,193.20 — வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 08 20 46 57 — விசேட இலக்கினம் மேஷம்

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 1551 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,070,239.20 — வெற்றி இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 7 9 7 2 2 9

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1126 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 87,385,309.20 — ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 29 38 65 71

**மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம் 1444 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 316,687,354.00 — ஆங்கில எழுத்து L — சுப்பர் இலக்கம் 08 — வெற்றி இலக்கங்கள் 27 31 41 58 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

The Housewives' companion
Classifieds on
Daily News

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch Acc. No. 000000377
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk

# கல்வியை போன்று உடற்பயிற்சிக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்

## வைத்தியர் சிவசுதன் தெரிவிப்பு

**சாவகச்சேரி விசேட நிருபர்**



கல்விக்கு கொடுக்கும் அதே முக்கியத்துவத்தை உடற்பயிற்சிக்கும் கொடுக்க வேண்டும் என, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் சிவசுதன் தெரிவித்தார்.

சிறிய, சிறிய வீட்டு வேலைகளில் பிள்ளைகளை ஈடுபடுத்துவதுடன், பிள்ளைகளுக்கு அதிக இனிப்புச் சுவை கொண்ட உணவுகள் கொடுப்பதை தவிர்த்து, அவர்களை ஆரோக்கியமாக வாழ வழிகாட்ட வேண்டும் எனவும், அவர் தெரிவித்தார்.

தொற்றாநோய்களுக்கு எதிரான மாதத்தையிட்டு அண்மையில் யாழ்ப்பாணம், சாவகச்சேரி பிரதேசத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நடைபவனியின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவித்த போது,

"நோய்களுக்கு மருந்துகளை வழங்குவதில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றதே தவிர, நோய்கள் வராமல் தடுப்பதற்கான வழிகாட்டலும் ஊக்குவிப்பும் குறைவாகவே காணப்படுகிறது. அடுத்த சந்ததியினருக்கு தொற்றா நோய்கள் வராமல் தடுப்பது தொடர்பாக விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும்.

ஆனால், அதற்கான வளங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படுகின்றன. உலகளாவிய ரீதியாக இதன் பின்பாக பாரிய மாபியாக்கள் இயங்குகின்றன.

நீரிழிவு, குருதி அமுக்க நோயாளர்களின் அளவு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. சிகிச்சைக்கு வருபவர்களுக்கு உணவுக் கட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சியின் முக்கியத்துவம் தொடர்பாக எடுத்துரைப்பதும் குறைவாகவே காணப்படுகிறது.


மருந்துகளை உள் எடுத்தால், தொற்றாநோய்கள் குணமாகி விடும் என்ற எண்ணத்தை மக்கள் மாற்ற வேண்டும் என்பதுடன், உணவு மற்றும் வாழ்க்கை முறைமையால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு மருந்து தீர்வு அல்ல. இந்த நிலைப்பாட்டிலிருந்து சமூகம் மாற வேண்டும்" என்றார்.

# வடக்கின் உதயம்

## செல்வபுரம் பிரதேசத்தில் இ.போ.ச. பஸ் மீது கல் வீச்சு!

### –முன்பக்க கண்ணாடி சேதம்

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**



முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை (25) அதிகாலை பயணித்த இ.போ.ச. பஸ் வண்டி மீது இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட கல் வீச்சுத் தாக்குதலில், அப்பஸ் வண்டியின் முன் கண்ணாடி சேதமாகியுள்ளதுடன், சாரதியும் பாதிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டச் சாலைக்குச் சொந்தமான இப்பஸ் வண்டியானது, செல்வபுரம் பிரதேசம் வழியாக பயணித்த போது, சைக்கிளில் வந்த இருவர், பஸ் வண்டியின் மீது கல் வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினர் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, பொலிஸார் விசாரணையை முன்னெடுத்து வருவதுடன், முல்லைத்தீவு மாவட்டச் சாலைக்குச் சொந்தமான அனைத்து பஸ் வண்டிகளுக்கும் பொலிஸார் பாதுகாப்பு வழங்கியுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அனைத்து வர்த்தக நிர்வாக சேவைகளையும் முடக்கி முழுமையான ஹர்த்தாலுக்கு நேற்று அழைப்பு விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, முல்லைத்தீவில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. எனினும், முல்லைத்தீவிலிருந்து இ.போ.ச. பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## எழுத்தாளர் ஐயாத்துரை சண்முகலிங்கம் காலமானார்

**கரவெட்டி தினகரன் நிருபர்**



ஈழத்தின் புகழ் பூத்த எழுத்தாளர்களில் ஒருவரான குப்பிழான் ஐ.சண்முகன் எனும் புனைப் பெயரில் அறியப்பட்ட ஐயாத்துரை சண்முகலிங்கம் தனது 77 ஆவது வயதில் நேற்று முந்தினம் திங்கட்கிழமை (24) காலமானார்.

பாடசாலை ஆசிரியரான இவர், 'கோடுகளும் கோலங்களும்', 'சாதாரணங்களும் அசாதாரணங்களும்', 'உதிரிகளும்' உட்பட ஐந்து சிறுகதைத் தொகுதிகள், பிரபஞ்ச சுருதி என்ற கவிதை நூல் தொகுதியையும் வெளியிட்டுள்ளார். இவை தவிர ஏராளமான விமர்சனங்களையும் அறிமுகங்களையும் பத்திகளையும் குறிப்புகளையும் எழுதியுள்ளார். தனித்துவமான கதைக்களம், கதை சொல்லும் பாணிக்கு புகழ் பெற்றவரான குப்பிழான் ஐ.சண்முகனாகிய இவர் கலாபூஷணம், ஆளுநர் விருது, பேராதனை பல்கலைக்கழகத்தின் சங்க சான்றோன் விருதுகள் உட்பட பல விருதுகளையும் பெற்றுக்கொண்டார்.

# யாழ் நகரில் ஃபிலிம் சிற்றி ஆரம்பிக்கும் நடிகர் திலகம் சிவாஜியின் புதல்வர்!

யாழ்ப்பாணத்தில் ஃபிலிம் சிற்றியொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக, மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் மகன் ராம்குமார் தெரிவித்தார்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த அவர், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு விஜயம் செய்த பின்னர் ஊடகவியலாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் போதே, இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

ஃபிலிம் சிற்றி ஆரம்பிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டன. கலை, கலாசாரம், பொருளாதார ரீதியான அணுகல் தொடர்பாக யாழ்ப்பாணத்திலுள்ள பல நண்பர்களுடன் கலந்துரையாடப்பட்டன. எனது தந்தையின் வழிமுறைகளை பின்பற்றி, இவ்வாறான பல முன்னேற்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளேன்" என்றார்.



வடக்கு மாகாணத்தில் மிக முக்கியமாக யாழ்ப்பாண மாவட்டம் முன்னேற்றம் அடைய வேண்டிய இடமாகக் காணப்படுவதாகவும் எதிர்வரும் 5 வருடங்களில் அபிவிருத்தி சார்ந்த விடயங்களில் முன்னேற்றத்தை அவதானிக்க முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

# ஹர்த்தாலினால் வடக்கில் மூடப்பட்ட வர்த்தக நிலையங்கள்









**யாழ். விசேட, சாவகச்சேரி விசேட, யாழ். குறூப், தலைமன்னார் விசேட, வவுனியா விசேட நிருபர்கள்**

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பூரண ஹார்த்தாலுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை (25) அழைப்பு விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் பெரும்பாலான வர்த்தக நிலையங்கள், சந்தைகள் மூடப்பட்டுக் காணப்பட்டன.

வடக்கு, கிழக்கில் இராணுவமயமாக்கலை நிறுத்தக் கோரியும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பொது நிர்வாக முடக்கப் போராட்டத்தை நடத்துவதற்கு 7 தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து அழைப்பு விடுத்திருந்தன.

இருந்த போதிலும், இந்த மாவட்டங்களில் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் வழமை போன்று நடைபெற்ற அதேவேளை, தனியார் பஸ் சேவைகள் இடம்பெறவில்லை. அத்துடன், யாழ். நகரில் முச்சக்கரவண்டிச் சேவைகள் நடைபெற்றதுடன், வீதிகளில் ஆங்காங்கே பொதுமக்கள் நடமாடினர்.

மேலும், யாழ்ப்பாணத்தில் சில உணவகங்கள் மற்றும் மருந்தகங்கள் உட்பட அத்தியாவசிய சேவைகள் வழமை போன்று இயங்கிய அதேவேளை, பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகச் செயற்பாடுகள் ஸ்தம்பித்துக் காணப்பட்டன.

## திருநெல்வேலியில் திருட முற்பட்ட சந்தேகநபர் மடக்கிப்பிடிப்பு!

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பிரதேசத்தில் வயோதிபப் பெண் ஒருவரை வீட்டு அறையில் பூட்டி வைத்து விட்டு, திருடுவதற்கு முற்பட்ட சந்தேகநபர் ஒருவரை, அந்தப் பிரதேசவாசிகள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை (25) காலை இடம்பெற்றது.

இந்த வீட்டில் திடீரென அத்து மீறி நுழைந்த சந்தேகநபர், இந்தப் பெண்ணை அறையில் பூட்டி வைத்துவிட்டு, வீட்டில் தேடுதல் நடத்தியுள்ளார். இதன்போது இந்தப் பெண் சத்தமிட, அயலவர்கள் ஓடி வந்த வேளையில், அந்த வீட்டிலிருந்து சந்தேகநபர் தப்பியோடியுள்ளார். இதை அவதானித்த அயலவர்கள், அந்த வீட்டுக்குச் சென்று வயோதிபப் பெண்ணைக் காப்பாற்றியுள்ளனர்.

இதன் பின்னர், சந்தேகநபரை அயலவர்கள் தேடிப் பிடித்து விசாரித்த போது, இவர் 25 ஆயிரம் ரூபாய் பணத்தையும் சில பித்தளை பொருட்களையும் வைத்திருந்தமை தெரியவந்தது.

இது தொடர்பாக கோப்பாய் பொலிஸாருக்கு அயலவர்கள் தகவல் வழங்கியதுடன், பொலிஸாரிடம் சந்தேகநபரை ஒப்படைத்துள்ளனர். இந்நிலையில், சந்தேகநபரிடம் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

யாழ். மாவிட்டபுரம் வீணியவரை

## ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், மாவிட்டபுரம் வீணியவரை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த கொடியேற்றத் திருவிழா இன்று புதன்கிழமை (26) காலை 6.30 மணிக்கு நடைபெறும்.

எதிர்வரும் 2ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் 3ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு பூஜையைத் தொடர்ந்து அன்றையதினம் இரவு 7.00 மணிக்கு சப்பரத் திருவிழாவும் 4ஆம் திகதி அதி காலை 5.00 மணிக்கு அபிஷேகம், மூலஸ்தான பூஜை, தம்ப பூஜை, வசந்த மண்டப பூஜை ஆகியன நடத்தப்பட்டு பின்னர் அம்பாள் ரதத்தில் ஆரோகணம் செய்து வலம் வரவுள்ளார். அன்றையதினம் முற்பகல் 11.00 மணிக்கு பச்சை சாத்தி அவரோகணம் விழா நடைபெறவுள்ளது.

5ஆம் திகதி 7.00 மணிக்கு மூலஸ்தான பூஜை, தம்ப பூஜை, வசந்த மண்டப பூஜை ஆகியன நடத்தப்பட்டு அன்றையதினம் முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. அன்றையதினம் மாலை 5.00 மணிக்கு மூலஸ்தான பூஜையும் 5.30 மணிக்கு ஸ்ரீ சக்கர பூஜையும் வசந்த மண்டப பூஜையும் நடைபெறவுள்ளதுடன், திரு ஊஞ்சல் திருவிழாவும் துவஜாவரோஹணமும் நடைபெறவுள்ளது.

## பனங்காமம் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



**கோப்பாய் நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு, பனங்காமம் பாடசாலை மாணவர்கள் 40 பேருக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள் கடந்த வெள்ளிக்கிழமை (21) வழங்கி வைக்கப்பட்டன.

கனடாவில் வசிக்கும் பிரகாஷ் குடும்பத்தின் நிதிப் பங்களிப்பிலும் யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டிலும் இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மாந்தை கிழக்கு பிரதேசத்தில் அமைந்துள்ள பனங்காமம் பாடசாலையில் கல்வி கற்று வரும் மாணவர்களின் உடனடித் தேவை கருதி இவை வழங்கி வைக்கப்பட்டன. பனங்காமம் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கச் செயலாளர் கருணராசா இன்பரசி விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், இதில் ஆசிரியர்கள், அபிவிருத்திச் சங்க செயலாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## அடம்பனில் 40 வருடங்களின் பின்னர் காத்தவராயன் கூத்து

**தலைமன்னார் விசேட நிருபர்**

மன்னார் மாவட்டத்தின் அடம்பன் பிரதேசத்தில் 40 வருடங்களுக்குப் பின்னர் முதன்முறையாக காத்தவராயன் நாட்டுக்கூத்து

மேடையேற்றப்படவுள்ளதுடன், எதிர்வரும் 28ஆம் 29ஆம் திகதிகளில் இரவுப்பொழுதில் அடம்பன் பிரதேச சபை மைதானத்தில் இக்கூத்து நடைபெறவுள்ளது.

மாளிகைத்திடல் மாணிக்க விநாயகர் ஆலய நலன்விரும்பிகளின் நிதி அனுசரணையுடனும் அடம்பன் துர்க்கை அம்மன் கலாமன்ற அண்ணாவியார் கலைமாமணி பராசக்தி விசுவாசத்தின் நெறியாள்கையுடனும் எழுத்தாளர் பிரேம் தலைமையிலும் காத்தவராயன் கூத்து நடைபெறவுள்ளது .

இக்கூத்தில் இளம் கலைஞர்கள் 60 பேர் பங்கேற்று நடிக்கவுள்ளதாக, அடம்பன் துர்க்கை அம்மன் கலாமன்ற அண்ணாவியார் கலைமாமணி பராசக்தி விசுவாசம் தெரிவித்தார்.

இதில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் டி.சி.அரவிந்தராஜ் பிரதம விருந்தினராகவும் மாந்தை மேற்கு உதவித் திட்டமிடல் பணிப்பாளர் பிரேமரஞ்சினி பவனிதி, மன்னார் மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன், அடம்பன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லக்ஸ்மன் றன்வலராட்சி, அடம்பன் மத்திய மகா வித்தியாலய அதிபர் மிக்கேல் கிறிஸ்ரியான், முன்னாள் உப தவிசாளர் எம்.எச்.தௌபீக், மாந்தை மேற்கு கலாசார அபிவிருத்தி அலுவலர் றஞ்சனா ரவீந்திரராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் அடம்பன் பண்ணை முகாமையாளர் நாகேஸ் உருத்திரமூர்த்தி, சமூக செயற்பாட்டாளர்களான ம.சூரியபுத்திரன் ம.கௌரிபாலன் க.கோவிந்தசாமி லட்சுமி, கரங்கள் அமைப்பைச் சேர்ந்த செ.குலதாயகம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## மீசாலையில் மோட்டார் சைக்கிளை திருட முற்பட்டவர் மீது தாக்குதல்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

யாழ். சாவகச்சேரி, மீசாலையிலுள்ள கோயிலொன்றில் மோட்டார் சைக்கிளை திருட முற்பட்ட சந்தேகநபர் மீது அப்பிரதேச இளைஞர்கள் சிலர் தாக்கியுள்ளனர். கடந்த ஞாயிறு (23) இடம்பெற்ற இச்சம்பவத்தில் படுகாயமடைந்த சந்தேகநபர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாரிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து, பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

# கிழக்கின் குரல்



# காத்தான்குடியில் டெங்கு தீவிரம் கட்டுப்படுத்த துரித நடவடிக்கை

## சிலருக்கு சிவப்பு எச்சரிக்கை

**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**



காத்தான்குடியில் தீவிரமாக பரவும் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் பொருட்டு டெங்கு சோதனை நடவடிக்கை மற்றும் டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கை பாரியளவில் நேற்று (25) செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்டதுடன், வீடு வீடாக டெங்கு சோதனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

காத்தான்குடியில் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் 24.04.2023 வரை 105 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து காத்தான்குடி சுகாதார வைத்திய அலுவலகம், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார அலுவலகம், காத்தான்குடி பிரதேச செயலகம் என்பன இணைந்து டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை தீவிரப்படுத்தியுள்ளது.

காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யு.எல். நசிர்தீன், காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதய சிறீதர் ஆகியோரின் வழிகாட்டலில் இந்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதில் பொதுச் சுகாதர பரிசோதகர்கள், சுகாதார அதிகாரிகள், காத்தான்குடி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் வீடு வீடாகச் சென்று வீட்டின் சூழல், சுற்றுப்புறச் சூழல் என்பவற்றை அவதானித்ததுடன், டெங்கு நுளம்பு பெருகக் கூடிய வீடுகள் கட்டிடங்கள் மற்றும் வெற்றுக் காணிகளை வைத்திருந்தவர்களுக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், அவைகளை உடனடியாக துப்புரவு செய்யுமாறும் அறிவித்தல் விடுத்தனர்.

புதிய காத்தான்குடி ஆறாம் குறிச்சிப் பகுதியிலுள்ள வீடுகளுக்கு மேல் சென்று இந்த டெங்கு சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

காத்தான்குடி சுகாதார அலுவலகப் பிரிவில் புதிய காத்தான்குடி அன்வர் மற்றும் பதுறியா பொதுச் சுகாதார பரிசோதர் பிரிவிலேயே அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் நசிர்தீன் தெரிவித்தார்.

# அக்கரைப்பற்றில் கடையடைப்பு போராட்டம் வெற்றியளிக்கவில்லை



**(வாச்சிக்குடா விஷேட நிருபர்)**

தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஏற்பாட்டில் செவ்வாய்க்கிழமை (25) முன்னெடுக்கப்பட்ட கதவடைப்பு போராட்டம் அக்கரைப்பற்றில் வெற்றியளிக்கவில்லை.

சிலவியாபார நிலையங்கள் மூடப்பட்ட போதும் அதிகளவான வியாபார நிலையங்கள் திறந்திருந்ததையும், அரச திணைக்களங்கள் மற்றும் பாடசாலைகள் வழமை போன்று செயற்பட்டதையும் அவதானிக்க முடிந்தது.

அக்கரைப்பற்று பஸ் தரிப்பிடத்திலிருந்து அரச, தனியார் பஸ்கள் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளதையும் மக்கள் பயணங்களை மேற்கொள்வதையும் காண முடிந்தது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கைவிட வேண்டும், வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் சிங்கள பௌத்த மயமாக்கலை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்னும் கோரிக்கைகளை முன்னிறுத்தி நேற்று கதவடைப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஏற்பாட்டில வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படவுள்ள பொது முடக்கம் ஊடான எதிர்ப்புப் போராட்டத்திற்கு தமிழ் மக்களும், சிவில் சமூக அமைப்புக்களும், மக்கள் பிரதிநிதிகளும் தமது முழுமையான ஆதரவை வழங்க முன்வர வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

ஆயினும் அம்பாறை மாவட்டத்தில் அதிகளவான பிரதேசங்களில் இப்போராட்டத்திற்கு மக்கள் ஆதரவு முறையாக வழங்கப்படாமையினை அவதானிக்க முடிந்தது.

# மடத்தடி மீனாட்சி அம்மனின் அலங்கார உற்சவம் ஆரம்பம்

**(காரைதீவு குறூப் நிருபர்)**



வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் முதலாவது வருடாந்த அலங்கார உற்சவம் இன்று (26) புதன்கிழமை ஆரம்பமாகிறது .

உற்சவகால பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் ஆலய குரு சிவஸ்ரீ ச.கோவர்த்தன சர்மா சமுகத்தில் வருஷாபிஷேக கிரியைகள் ஆரம்பமாகின்றன.

தொடர்ச்சியாக ஒன்பது தினங்கள் பகல் அலங்கார உற்சவ திருவிழாக்கள் இடம் பெற்று எதிர்வரும் மே மாதம் ஐந்தாம் திகதி சித்ரா பௌர்ணமி அன்று தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைய இருக்கின்றது .

30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாற்குட பவனி இடம் பெற ஏற்பாடாகி உள்ளது. இந்த பத்து நாள் அலங்கார உற்சவ திருவிழாக்காலங்களில் காலை 10 மணிக்கு கும்ப பூஜையுடன் ஆரம்பமாகி பகல் ஒரு மணிக்கு அலங்கார உற்சவ பிரதான பூஜை, அம்பாளின் வீதியுலா இடம் பெறும். அதனை தொடர்ந்து பக்தர்களுக்கு தினமும் அன்னதானம் வழங்கப்படும்.

பத்து தினங்களுக்கான உற்சவகால திருவிழாக்களையும் அன்னதானத்தையும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பிரதேசங்கள் பொறுப்பேற்று நடாத்துகின்றன.

### தக்வா ஜும்ஆ பள்ளிவாசல் நிருவாகத்தினரால்

# லகுகல பகுதியில் வாழ்வாதார உதவி

**(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)**

அக்கரைப்பற்று தக்வா ஜும்ஆ பள்ளிவாசல் நிருவாகத்தினரால் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த லகுகல பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பாணமை கிராம சமுதாய அடிப்படை அமைப்பு அங்கத்தவர்களுக்கு அரிய இன கருங்கோழிகள் அண்மையில் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட சமுதாய அடிப்படை அமைப்புக்களின் பொறுப்பு முகாமையாளர் ரன்ஜனி விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கமைவாக பண்டைய கால அரிய இன கருங்கோழிகள் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன. அக்கரைப்பற்று பிரதேச செயலக சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளரும், இப்பள்ளிவாசல் நிருவாகியுமான என்.ரீ.மசூரின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந் நிகழ்வில் பள்ளிவாசல் நிர்வாக சபையினர், சமுதாய அடிப்படை அமைப்புக்களின் அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இன மதங்களுக்கு அப்பால் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் மூவின மக்களின் துயர்துடைக்க இவ்வாறான வாழ்வாதார உதவிகளை இப்பள்ளிவாசல் நிர்வாகம் செய்து வருகின்றது என சமுர்த்தி கருத்திட்ட என்.ரீ.மசூர் தெரிவித்தார்.



வடக்கு, கிழக்கில் செவ்வாய்கிழமை (25) முன்னெடுக்கப்பட்ட ஹர்த்தால் காரணமாக களுவாஞ்சிகுடி நகரம் முற்றாக முடங்கியுள்ளதை படத்தில் காணலாம்.
(படம்: பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

# மட்டக்களப்பில் கடும் உஷ்ணம்

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது நிலவும் கடுமையான வெப்பநிலை மேலும் அதிகரிக்கக் கூடும். தற்போது 37 பாகையில் உள்ள வெப்பநிலை 40 பாகைவரை செல்லும். இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜீ.சுகுணன் தெரிவித்தார்.

வெப்பமான காலநிலை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

65 வயதிற்கு மேற்பட்டோர், கர்ப்பிணித் தாய்மார், சிறுகுழந்தைகள் மிக அதிக அவதானத்துடன் இருக்க வேண்டும். காலை 11 மணிமுதல் மாலை 3 மணிவரை வெளியில் நடமாடுவதை முற்றாகத் தவிர்க்க வேண்டும் என்றார்.

அதிகமாக நீர்அருந்தி வீடுகளில் இருந்து வெப்பத்திலிருந்து பாதுகாப்புத் தேட முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

# பொத்துவில் பிரதேசத்தில் மீண்டும் டெங்கு அபாயம்

## சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.யூ. அப்துல் சமட்

**(ஒலுவில் விசேட நிருபர்)**

பொத்துவில் பிரதேசத்தில் மீண்டும் டெங்கு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் டெங்கு நுளம்பு பரவக் கூடிய வெற்றுக் காணிகளை வைத்திருப்போர் ஒரு வார காலத்திற்குள் காணிகளை துப்புரவு செய்யுமாறு, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.யூ. அப்துல் சமட் தெரிவித்தார்.

பொது மக்கள் ஒன்று கூடும் இடங்கள், பாடசாலைகள், மதஸ்தலங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றில் சிரமதான பணிகளை முன்னெடுக்குமாறு கேட்டுள்ளார்.

டெங்கு நுளம்பு பரவாமல் தடுக்கும் பொருட்டு பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்கொழிப்பு செயலணி மற்றும் பொலிஸார் ஆகியோர் வீடு வீடாகச் சென்று டெங்கு நோய் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டல், டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை துப்புரவு செய்தல் போன்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

டெங்கு நுளம்பு உருவாகாமல் தடுப்பதற்கு சுற்றுப் புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்தல், அவற்றின் வதிவிடத்தை முற்று முழுதாக அழித்தல், வதிவிடத்தில் நுளம்பின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தல் என்பன முக்கியமானதாகும். இது தொடர்பாக மக்களுக்கு துண்டுப்பிரசுரம் மூலமும், ஒலிபெருக்கி ஊடாகவும் அறிவித்தல் விடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

டெங்கு கட்டுப்பாட்டு பிரிவினர் வீடுகளுக்கு வரும் போது உரிமையாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் கேட்டுள்ளார். சுற்றுப்புறத்தில் தேங்கும் நீர் நிலைகளைக் கண்டறிந்து அவற்றை வெறுமைப் படுத்துதல் அல்லது நீர் தேங்கி உள்ள அத்தகைய இடங்களில் பூச்சி கொல்லி மருந்துகளைத் தெளித்தல், உயிரியற் கட்டுப்பாட்டுக் காரணிகளை இடல் போன்றன நுளம்புகளின் பெருக்கத்தைத் தடுக்கின்றது.

தென்னம் குரும்பை, யோகட் கப், வெற்று போத்தல்கள், வெற்று டயர்கள், பொலிதீன் கழிவுகள் போன்ற கழிவுகளை முறையாக அகற்ற வேண்டுமெனவும், கேட்டுள்ளார்.



பயங்கரவாத எதிர்ப்பு சட்டம், சிங்கள மயமாக்கலை எதிர்த்து வடக்கு, கிழக்கில் செவ்வாய்க்கிழமை (25) பூரண ஹர்த்தால் இடம் பெற்றது. திருகோணமலையில் தமிழ், முஸ்லிம் மக்களின் வர்த்தக நிலையங்கள், கடைகள் பூட்டப்பட்டு இருந்தன, பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகைதரவில்லை இதனால் பாடசாலைகள் இயங்கவில்லை.
(படம்: அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)



பயங்கர வாத எதிர்ப்பு சட்டத்திற்கு எதிராக கடையடைப்பு ஹர்த்தால் போராட்டத்திற்கு நேற்று செவ்வாய்க்கிழமை (25) தமிழ்க் கட்சிகள் அழைப்பு விடுத்திருந்தபோதிலும், கல்முனை பிரதேசத்தில் கல்முனை பொதுச் சந்தை உட்பட பொதுப் போக்குவரத்து, அரச நிறுவனங்கள் ஆகியன வழமை போன்று இயங்கியதை காணக்கூடியதாக இருந்தது.
(படம்: பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

# இன நல்லிணக்க ஒன்றுகூடலும் விருந்துபசாரமும்

**(கிண்ணியா தினகரன் நிருபர்)**

அகில இலங்கை ஜம்இயத்துல் உலமா கிண்ணியா கிளையின் ஏற்பாட்டில் அதன் தலைவர் கலாநிதி அஷ்ஷெய்ஹ் ஏ.ஆர். நஸாரின் தலைமையில் நல்லிணக்க ஒன்றுகூடலும் விருந்துபசாரமும் பெருநாள் தினத்தன்று சனிக்கிழமை (22) நடைபெற்றது. இந்நிகழ்வில், திருகோணமலை மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ், கிண்ணியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பெர்னாண்டோ, சீனக்குடா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி என பலர் கலந்துகொண்டனர்.



கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பேரமடுவ மற்றும் பேராறு 2 ஆகிய கிராமங்களில் தோட்டச் செய்கை மேற்கொள்ளும் 9 பயனாளிகளுக்கு தலா 50000 ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. அகம் மனிதாபிமான வள நிலையத்தினால் ஞாயிற்றுக்கிழமை (23) நடைபெற்ற இந் நிகழ்வில் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் மற்றும் உதவி கணக்காளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.
(படம்: கந்தளாய் தினகரன் நிருபர்)



பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்கு எதிராக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஹர்த்தால் காரணமாக நேற்று (25) செவ்வாய்க்கிழமை கடைகள் அடைக்கப்பட்டு வெறிச்சோடிக்கிடப்பதை படத்தில் காணலாம்.
(படம்: மட்டக்களப்பு குறூப், துறைநீலாவணை, பெரியபோரதீவு தினகரன் நிருபர்கள்)

# நீர் வழங்கல் அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

# விலைக்கோரல் அறிவித்தல் - 2023-04-26

பின்வரும் வேலைகள் / வழங்கல்கலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலை மனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **சிவில் கேள்விகள்** | | | | | | |
| 01 | ஆணமடுவ ஒன்றிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டத்தில் உள்ளீர்ப்பு வேலைத்தள மிகுதி வேலைகள்<br>ஒப்பந்த இல: P&D/CIVIL/UBE/RE-AIWSP/2023/02 | 20,000/-+ VAT ** | ரூபா 850,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C4 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 70.7 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328 Fax: 011-2635885 | 17/05/2023 மு.ப. 10.00 மணி |
| 02 | பதியதலாவ நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதியின் வடிவட்டி ஊடகத்தை வழங்குதல் மற்றும் பிரதியீடு செய்தல்<br>ஒப்பந்த இல : RSC(E)/AGM(ES)/C/FM/ PAD/RH/ AMP/2022/39R | 2,000/-+ VAT | ரூபா 20,000/- | கட்டிட நிர்மாணம் / நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C8 மற்றும் C9 தரத்தில் CIDA பதிவு | 1.34 மில்லியன் | பி.ஓ.நி. (கிழக்கு தெற்கு) அலுவலகம், தேநீவவச, ஸ்ரீ தர்மாராம மாவத்தை, அம்பாறை.<br>Tele: 063-2223926 Fax : 063-2224975 | 11/05/2023 பி.ப. 13.30 மணி |
| 03 | மாத்தறை, நூபேயிலுள்ள வேலைத்தள கட்டிடத்தின் புதுப்பித்தல் வேலைகள்<br>ஒப்பந்த இல : RSC(S)/P&C/C/RENOV /WORKSHOP/ MATARA/RH/2023-21 | 6,000/-+ VAT ** | ரூபா 69,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C6 அல்லது C7 வரையான தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 6.88 மில்லியன் | பி.ஓ.நி. (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105 Fax 0412221329 | 10/05/2023 பி.ப. 2.00 மணி |
| 04 | மாத்தளை நீர் வழங்கல் திட்டம் - மாத்தளை பிரதேசத்தில் புதிய சேவை இணைப்புகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல : RSC-C/CN/CIVIL/NC/MATALE/ 2023/96 | 12,500/-+ VAT ** | ரூபா 220,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C6 அல்லது C5 வரையான தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | பி.ஓ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068 Fax: 081-2388027<br>கட்டுகஸ்தோட்ட மத்திய வடக்கு அலுவலகத்தில் 2023-05-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னேடிக் கூட்டம் இடம்பெறும்.<br>(T:P- 081 2492311) | 17/05/2023 பி.ப. 2.00 மணி |
| 05 | அம்பன்கங்க நீர் வழங்கல் திட்டத்தில் வருமானமற்ற நீரைக் குறைத்தல்<br>ஒப்பந்த இல :<br>RSC-C/CN/CIVIL/O&M/ AMBANGANGA/2023/47 | 12,500/-+ VAT ** | ரூபா 110,000/- | சிவில் / நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C6 மற்றும் C5 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 10.7 மில்லியன் | பி.ஓ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068 Fax: 081-2388027<br>கட்டுகஸ்தோட்ட மத்திய வடக்கு அலுவலகத்தில் 2023-05-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னேடிக் கூட்டம் இடம்பெறும்.<br>(T:P- 081 2492311) | 17/05/2023 பி.ப. 2.00 மணி |
| 06 | அம்பன்கங்க நீர் வழங்கல் திட்டம் - அம்பன்கங்கயில் புதிய சேவை இணைப்புகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல :<br>RSC-C/CN/CIVIL/NC/ AMBANGANGA/2023/58 | 12,500/-+ VAT ** | ரூபா 167,500/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C6 அல்லது C5 வரையான தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | பி.ஓ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068 Fax: 081-2388027<br>கட்டுகஸ்தோட்ட மத்திய வடக்கு அலுவலகத்தில் 2023-05-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னேடிக் கூட்டம் இடம்பெறும்.<br>(T:P- 081 2492311) | 17/05/2023 பி.ப. 2.00 மணி |
| 07 | இப்பாகமுவ நீர் வழங்கல் திட்டத்தில் பரிமாற்ற குழாய் வழிகளை இடமாற்றுவதற்கு HDPE குழாய்கள், விசேடங்கள் மற்றும் பொருத்தல்களைப் பதித்தல்<br>ஒப்பந்த இல:RSC(NW)/M-KURU/PL/US/IBBA/2023/33 | 6,000/-+ VAT ** | ரூபா 74,900/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C6 அல்லது C7 வரையான தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 7.5 மில்லியன் | பி.ஓ.நி. (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல்.<br>Tele: 037-2223158 Fax : 037-2230086 | 17/05/2023 பி.ப. 2.00 மணி |
| 08 | புத்தளம் நீர் வழங்கல் திட்டத்தின் வால்வு அறைகளைப் புதுப்பித்தல்<br>ஒப்பந்த இல: RSC(NW)/M-PUT/C/NRW/PUT/2023/08 | 2,000/-+ VAT | ரூபா 18,000/- | கட்டிட நிர்மாணம் / நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C7 மற்றும் C8 வரையான தரத்தில் CIDA பதிவு | 1.77 மில்லியன் | பிஓநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல்.<br>Tele: 037-2223158 Fax : 037-2230086 | 17/05/2023 பி.ப. 2.00 மணி |
| 09 | வவுனியா நீர் வழங்கல் திட்டம் - வவுனியா பிராந்தியத்திலுள்ள அரபாநகரில் விநியோக வழிகளை நிரப்புவதற்காக HDPE/DI குழாய்கள், பொருத்தல்கள், வால்வுகள், விசேடங்கள் மற்றும் துணைப்பாகங்களைப் பதித்தல் - படிநிலை-I<br>ஒப்பந்த இல: RSC/N/DGM/GOSL(CEDE-RH)/LAYING OF HDPE/DI PIPE-ARAFANAGER/PHASE-I/2023/009 | 12,500/-+ VAT ** | ரூபா 212,700/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C6 அல்லது C5 வரையான தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 21.27 மில்லியன் | பிஓநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341 | 10/05/2023 பி.ப. 2.00 மணி |
| 10 | வவுனியா நீர் வழங்கல் திட்டம் - வவுனியாவிலுள்ள மகாரம்பைக்குளத்தில் விநியோக வழிகளை நிரப்புவதற்காக HDPE/DI குழாய்கள், பொருத்தல்கள், வால்வுகள், விசேடங்கள் மற்றும் துணைப்பாகங்களைப் பதித்தல் - படிநிலை-II<br>ஒப்பந்த இல:<br>RSC/N/DGM/GOSL(CEDE-RH)/LAYING OF HDPE/DI PIPE-MAHARAMBAIKULAM-PH-II/2023/011 | 12,500/-+ VAT ** | ரூபா 212,700/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C6 அல்லது C5 வரையான தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 21.27 மில்லியன் | பிஓநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341 | 10/05/2023 பி.ப. 2.00 மணி |
| | **வழங்கல் கேள்விகள்** | | | | | | |
| 11 | 15mm (1/2'') Magnetic Type Brass Lockable Ball வால்வுகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: DGM/M&E/Magnetic Type Brass Lockable Ball Valves/15/2022/04 | 35,000/-+ VAT ** | ரூபா 2,524,000/-<br>151,567.50 ரூபாவை மாதிரிப் பரீட்சித்தல் கட்டணமாக தேநீவவ சபைக்கு செலுத்திய பற்றுச்சீட்டு | 15mm Magnetic Type Brass Lockable Ball வால்வுகளை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328 Fax: 011-2635885 | 17/05/2023 மு.ப. 10.00 மணி |
| 12 | சாகமம் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு மர அடிப்படையிலான தூளாக்கப்பட்ட உயிர்ப்புள்ள கார்பனை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: RSC(E)/AGM(ES)/S&D/PAC/SAGA-WTP/ O&M/AKP/2023/16 | 12,500/-+ VAT ** | ரூபா 170,000/- | 5 தொன் மர அடிப்படையிலான தூளாக்கப்பட்ட உயிர்ப்புள்ள கார்பனை வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | பி.ஓ.நி. (கிழக்கு தெற்கு) அலுவலகம், தேநீவவச, ஸ்ரீ தர்மாராம மாவத்தை, அம்பாறை.<br>Tele: 063-2223926 Fax : 063-2224975 | 11/05/2023 பி.ப. 1.30 மணி |
| 13 | கோட்டே பிராந்திய முகாமையாளருக்கு Stainless Steel Repair Clamps வழங்குதல் மற்றும் விநியோகித்தல் - 2023ஆம் ஆண்டின் 01ஆம் அரையாண்டு தேவைப்பாடுகள்<br>ஒப்பந்த இல:<br>WC/SS/M(KOTTE)/REPAIRCLAMP/2023/37-O&M | 6,000/-+ VAT ** | ரூபா 105,000/- | Stainless Steel Repair Clamps களுக்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பி.ஓ.நி. (மேற்கு - மத்திய) தேநீவவச, இல. 175A, கலுதொட்ட கட்டிடம், நாவல வீதி, நுகேகொட.<br>Tele:/Fax: 011- 2856421/ 0112856420-2 | 10/05/2023 மு.ப. 10.00 மணி |
| | **M & E கேள்விகள்** | | | | | | |
| 14 | பத்தரமுல்லையிலுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு (செத்சிறிபாய) மின்சாரத்தில் இயங்கும் Driven Dry Well Type Submersible சாக்கடை பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல: GCWR / SUPPLY/SEWERAGE PUMPS(DRY WELL-UDA ) /2023/02 | 12,500/-+ VAT ** | ரூபா 195,350/- | சாக்கடை பம்பித் தொகுதிகளை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 18.63 மில்லியன் | பிபொமு (GCWRD), தேநீவவச, இல. 26/2, அத்திடிய வீதி, இரத்மலானை.<br>Tele: 011 2623681 Fax:011 2636205<br>மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் 1994381 எனும் பிரதான நடைமுறைக் கணக்கிலக்கத்திற்கு செலுத்துதல் வேண்டும். பெயரை "Tender Fees-DGM Tender Board" எனக் குறிப்பிடுதல் வேண்டும். | 17/05/2023 மு.ப. 10.00 மணி |
| 15 | தெஹிவளை சாக்கடை பம்பி இல்லத்திற்கு (MLP 01) Variable Frequency Drive வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல: GCWR/ SUP&INS/DM/VSD PANEL/2023/05 | 4,000/-+ VAT | ரூபா 37,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் Variable Frequency Drive (VFD) வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் | 4.0 மில்லியன் | பிபொமு (GCWRD), தேநீவவச, இல. 26/2, அத்திடிய வீதி, இரத்மலானை.<br>Tele: 011 2623681 Fax:011 2636205<br>மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் 1994381 எனும் பிரதான நடைமுறைக் கணக்கிலக்கத்திற்கு செலுத்துதல் வேண்டும். பெயரை "Tender Fees-DGM Tender Board" எனக் குறிப்பிடுதல் வேண்டும். | 17/05/2023 மு.ப. 10.00 மணி |
| | **சேவைக் கேள்விகள்** | | | | | | |
| 16 | அங்கும்புர மற்றும் கல்ஹின்ன நீர் வழங்கல் திட்டத்தில் விநியோக குழாய் வழிகள், மணல் வடிகட்டி மற்றும் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகளின் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பிற்கான சேவை ஒப்பந்தங்கள்<br>ஒப்பந்த இல:<br>ප්‍රාසේම/මැ/සේවා/ක්‍රියාත/අංකුඹුර ගල්හින්න/ **2023/16** | 4,000/-+ VAT | ரூபா 75,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பி.ஓ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068 Fax: 081-2388027<br>கட்டுகஸ்தோட்ட மத்திய வடக்கு அலுவலகத்தில் 2023-05-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னேடிக் கூட்டம் இடம்பெறும்.<br>(T:P- 081 2492311) | 17/05/2023 பி.ப. 2.00 மணி |
| 17 | கம்பஹா பிராந்தியத்திலுள்ள பொறுப்பதிகாரி (நீர்கொழும்பு) அலுவலகத்தின் வாடிக்கையாளர்களுக்கு மானி வாசித்தல், நீர்க் கட்டண பற்றுச்சீட்டுகளைத் தயாரித்தல் மற்றும் நீர்க் கட்டண பற்றுச்சீட்டுகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல:<br>RSC(W/N)/SS/SERVICE/ MR/GAM(O&M)/2023/16 | 12,500/-+ VAT ** | ரூபா 108,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | 10.8 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele:0112922129 Fax:0112922146 | 17/05/2023 மு.ப. 10.00 மணி |
| 18 | களனி பிராந்தியத்திலுள்ள வாடிக்கையாளர்களுக்கு மானி வாசித்தல், நீர்க் கட்டண பற்றுச்சீட்டுகளைத் தயாரித்தல் மற்றும் நீர்க் கட்டண பற்றுச்சீட்டுகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல:<br>RSC(W/N)/SS/SERVICE /MR/KEL(O&M)/2023/10 | 12,500/-+ VAT ** | ரூபா 170,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | 17.0 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele:0112922129 Fax:0112922146 | 17/05/2023 மு.ப. 10.00 மணி |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 19 | கம்பஹா பிராந்தியத்திலுள்ள பிரதேச பொறியியலாளர் (நீர்கொழும்பு) அலுவலகத்திற்கு வாடிக்கையாளர்களுக்கான மானி வாசித்தல், நீர்க் கட்டண பற்றுச்சீட்டுகளைத் தயாரித்தல் மற்றும் நீர்க் கட்டண பற்றுச்சீட்டுகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல:<br>RSC(W/N)/SS/SERVICE/ MR/GAM(O&M)/2023/17 | 12,500/-+ VAT ** | ரூபா 108,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | 10.8 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele:0112922129 Fax:0112922146 | 17/05/2023 மு.ப. 10.00 மணி |
| 20 | அம்பத்தலை நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் தற்போதுள்ள வடிகட்டி ஊடகத்தின் வடிகட்டிகளை அப்புறப்படுத்துதல் மற்றும் புதிய வடிகட்டி ஊடகத்தை மீள் நிரப்புதல்<br>ஒப்பந்த இல : RPC/WP/W/AMB/CIVIL/O&M/2022/13R-1 | 6,000/-+ VAT ** | ரூபா 63,500/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | 6.33 மில்லியன் | பிரதிப் பொது முகாமையாளர், (மேற்கு உற்பத்தி), தேநீவவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம்.<br>Tele:0112418532 Fax:0112549199 | 17/05/2023 பி.ப. 2.00 மணி |
| 21 | கட்டுவன்கொடயிலுள்ள நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மற்றும் உள்ளீர்ப்புக்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல : RSC/P&C/ J/KATUWANGODA/ WTP/ O&M/2023-87 | 4,000 /-+ VAT | ரூபா 46,500/- | ஜெனிட்டோரியல் சேவைகள் வழங்கும் துறையில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட கால அனுபவத்தைக் கொண்ட வியாபார பதிவு ஒழுங்குவிதி முறையின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் | 4.60 மில்லியன் | பிஔநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105 Fax 0412221329 | 10/05/2023 பி.ப. 2.00 மணி |
| **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | | |
| 22 | அம்பன்கங்கையிலுள்ள நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு சிங்கள் கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துவதற்கான ஒப்பந்தம்<br>ஒப்பந்த இல: RSC-C/M&E/HIRING/O&M/CN/2023/97 | 4,000/-+ VAT | ரூபா 15,000/- | இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | பி.ஔ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 17/05/2023 பி.ப. 2.00 மணி |
| 23 | களனி பிராந்தியத்திற்கு டிப்பர் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSC(W/N)/SS/HIRING/ KEL(O&M)/2023/22 | 6,000/-+ VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele:0112922129 Fax:011292214 | 17/05/2023 மு.ப. 10.00 மணி |
| 24 | களனி பிராந்தியத்திற்கு 02 எண்ணிக்கையான க்றூ கெப்பறை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSC(W/N)/SS/HIRING/ KEL(O&M)/2023/12 | 4,000/-+ VAT | ஒரு வாகனத்திற்கு ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele:0112922129 Fax:0112922146 | 17/05/2023 மு.ப. 10.00 மணி |
| 25 | பொறுப்பதிகாரி (தெஹிவளை) அலுவலகத்திற்கு க்றூ கெப் ஒற்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: W-S/P&C/H(06)/DEHI/O&M/2022/50R-01 | 4,000/-+ VAT | ரூபா 15,000/- | இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | பி.ஔ.நி. (மேற்று-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888<br>Fax : 011-2637945/ 011-2637946/ 0112637947 | 11/05/2023 மு.ப. 10.00 மணி |
| 26 | தெஹிவளை அலுவலகத்திலுள்ள வர்த்தகம், வழங்கல், நிதி மற்றும் கணக்காய்வுப் பிரிவிற்கு வேன் ஒன்றை (Dual A/C) வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல : W-S/P&C/H(05)/DEHI/O&M/2022/49 | 4,000/-+ VAT | ரூபா 15,000/- | இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | பி.ஔ.நி. (மேற்று-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888 Fax : 011-2637945/ 011-2637946/ 0112637947 | 11/05/2023 மு.ப. 10.00 மணி |
| 27 | பொறுப்பதிகாரிக்கு (அலுத்கம) க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல : W-S/P&C/H(11)/KAL/O&M/2022/55 | 4,000/-+ VAT | ரூபா 15,000/- | இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | பி.ஔ.நி. (மேற்று-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888 Fax : 011-2637945/ 011-2637946/ 0112637947 | 11/05/2023 மு.ப. 10.00 மணி |
| 28 | பொறுப்பதிகாரிக்கு (களுத்துறை) க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல : W-S/P&C/H(12)/KAL/O&M/2022/56 | 4,000/-+ VAT | ரூபா 15,000/- | இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | பி.ஔ.நி. (மேற்று-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888 Fax : 011-2637945/ 011-2637946/ 0112637947 | 11/05/2023 மு.ப. 10.00 மணி |
| 29 | பொறுப்பதிகாரிக்கு (கும்புக்க) க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல : W-S/P&C/H(18)/P-H/O&M/2022/63 | 4,000/-+ VAT | ரூபா 15,000/- | இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | பி.ஔ.நி. (மேற்று-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888 Fax : 011-2637945/ 011-2637946/ 0112637947 | 11/05/2023 மு.ப. 10.00 மணி |
| 30 | பிரதேச பொறியியலாளருக்கு (பண்டாரகம) வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல : W-S/P&C/H(19)/P-H/O&M/2022/64 | 4,000/-+ VAT | ரூபா 15,000/- | இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | பி.ஔ.நி. (மேற்று-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888 Fax : 011-2637945/ 011-2637946/ 0112637947 | 11/05/2023 மு.ப. 10.00 மணி |
| 31 | பொறுப்பதிகாரிக்கு (பேருவளை) க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல : W-S/P&C/H(02)/KAL/O&M/2023/29 | 4,000/-+ VAT | ரூபா 15,000/- | இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | பி.ஔ.நி. (மேற்று-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888 Fax : 011-2637945/ 011-2637946/ 0112637947 | 11/05/2023 மு.ப. 10.00 மணி |
| 32 | பிரதேச பொறியியலாளருக்கு (பாணந்துறை) வேன் ஒன்றை (Dual A/C) வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல : W-S/P&C/H(03)/P-H/O&M/2023/30 | 4,000/-+ VAT | ரூபா 15,000/- | இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | பி.ஔ.நி. (மேற்று-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888 Fax : 011-2637945/ 011-2637946/ 0112637947 | 11/05/2023 மு.ப. 10.00 மணி |
| 33 | வவுனியா, பிராந்திய ஆய்வுகூடத்திற்கு வாகனமொன்றை (வேன்) வாடகைக்கமர்த்துதல் - வடக்கு பிராந்திய ஒத்துழைப்பு நிலையம்<br>ஒப்பந்த இல: RSC/N/DGM/O&M/HIRING OF VEHICLE FOR REGIONAL LABORATORY/2023/031 | 6,000/-+ VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | | பி.ஔ.நி. (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341 | 10/05/2023 பி.ப. 2.00 மணி |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**



கடவத்தை யோர்க் சர்வதேச பாடசாலையின் சித்திரை புத்தாண்டு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. அதன்போது, யோர்க் பாடசாலை வலையமைப்பின் தலைவர் ரொஹான் பெரேரா வரவேற்கப்படுவதையும் பாடசாலை அதிபர் திருமதி காஞ்சனா தசநாயக்கவும் நிகழ்வில் கலந்துகொண்டார். படம் ரஞ்சித் அசங்க

# அன்டனா பொருத்த சென்றவர் மின்சாரம் தாக்கி மரணம்

கந்தகெடிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனுவவன்வ பிரதேசத்தில் வசிக்கும் நபர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (23) மாலை கேபிள் அன்டனா பொருத்தச் சென்ற போது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக கந்தகெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை கன்வன்வ மஹியங்கன வீதியில் 16 கட்டையில் வசிக்கும் 56 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார். மரத்தின் மீதேறி அன்டனா வயரை தூக்கி எறிந்தபோது உயர் அழுத்த மின்கம்பியில் அந்த வயர் விழுந்ததில் மின்சாரம் பாய்ந்தது என தெரியவருகின்றது.

சடலம், பதுளை பொது வைத்திய சாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# எம்பிலிப்பிட்டியவில் ஐஸ் மழை

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

எம்பிலிப்பிட்டிய கெம்பனே பிரதேசத்தில் நேற்று (25) இடிமின்னலுடன் கடும் மழை பெய்துள்ளது

அத்துடன் தொடராகப் பெய்த மழையுடன் ஐஸ் கட்டிகளும் பிரதேசம் எங்கும் விழுந்ததாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.சிறிய பெரிய அளவுகளில் ஐஸ்கட்டிகள் மழையுடன் விழுந்ததை கண்டதாக பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.



# பலஸ்தீனர்களின் எதிர்பார்ப்பு



உலக முஸ்லிம்களின் மூன்றாவது புனித தலமாக விளங்கும் குத்ஸ் பிரதேசம் (பைத்துல் முக்கதிஸ்) அடங்கலான பலஸ்தீன் ஆசீர்வதிக்கப்பட்ட பூமியாகவும், சரி, தவறுகளுக்கு இடையிலான போராட்டக் களமாகவும் இஸ்லாமிய உலகினால் கருதப்படுகிறது.

இந்நிலம் கடந்த ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக இத்தேசத்தின் பலவீனம், இயலாமை மற்றும் அதன் பின்தங்கிய தன்மை என்பன வெளிப்பட்டு நிற்கின்றன. இவை கருத்து வேறுபாடுகள் மற்றும் பிளவுகளின் சான்றாதாரங்களாகும்.

அதனால் பலஸ்தீன மக்களின் நியாயமான உரிமைகளுக்கும் கோரிக்கைகளுக்கும் ஆதரவளிக்கும் வகையில் மறைந்த இமாம் கொமெய்னி (ரஹ்) சர்வதேச குத்ஸ் தினத்தைப் பிரகடனப்படுத்தினார். இத்தினம் வருடாவருடம் நோன்பின் இறுதி வெள்ளிக்கிழமை உலகெங்கிலும் அனுஷ்மிக்கப்படுகிறது. இதன் ஊடாக பலஸ்தீன மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கும் உரிமைகளுக்கும் ஆதரவாக முஸ்லிம்களின் ஒற்றுமை சர்வதேச ரீதியில் எடுத்துக்காட்டப்படுகிறது. இச்சர்வதேச தினம் பல இலக்குகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

அவைகளாவன:

பலஸ்தீனியர்களுக்கு எதிராக சியோனிஸ்ட்டுகள் முன்னெடுக்கும் குற்றவியல் நடத்தையுடனான அடக்குமுறைக்கு எதிராகவும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாகவும் உலக சமூகத்தின் கவனத்தை ஈர்த்தல். பலஸ்தீன மக்களின் சட்டம் மற்றும் மனித உரிமைகளுக்கு ஆதரவு நல்குவதற்காக முஸ்லிம்களுக்கும் உலகின் சுதந்திர நாடுகளுக்கும் இடையில் ஒற்றுமையின் அடித்தளத்தை நிறுவுதல். ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பலஸ்தீன நிலங்கள் முழுமையாக விடுவிக்கப்பட்டு பலஸ்தீன தேசத்தின் உரிமைகள் திரும்பக் கிடைக்கும் வரை பலஸ்தீனின் பக்கம் இஸ்லாமிய உலகம் நிற்கிறது என்று அறிவித்தல்.

சியோனிஸத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து பலஸ்தீனப் பிரச்சினையைக் கையாளவென தற்போதுள்ள மூன்று கொள்கைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அவற்றில் சியோனிசக் கொள்கை முதலிடத்தில் உள்ளது. இக்கொள்கை முடிந்தவரை ஆக்கிரமிப்பதை நோக்கமாகக் கொண்டதாகும். சியோனிச ஆட்சி ஆரம்பமானது முதல் அவர்கள் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள் இதனைத் தெளிவாக எடுத்துக்காட்டக் கூடியனவாக உள்ளன. அல் அக்ஸா மற்றும் குத்ஸை ஆக்கிரமிக்கும் தாக்குதல்களும் படையெடுப்புகளும் தொடர்ந்த வண்ணமுள்ளன. ஆக்கிரமிப்பையும் அடக்குமுறையையும் தொடர்வதே சியோனிஸ்டுகளின் வலியுறுத்தலாக உள்ளது.

இதனை அடிப்படையாகக் கொண்டு குத்ஸின் சுற்றுப்புறங்களை யூதமயமாக்கல், குடியிருப்புகளின் விரிவாக்கம், தடுப்புச் சுவர் அமைத்தல், குத்ஸில் வசிக்கும் பலஸ்தீனியர்களின் உரிமைகளை மறுத்தல், அவர்களது வீடுகளை இடித்து பலவந்தமாக வெளியேற்றல், இஸ்லாமிய, கிறிஸ்தவ புனித ஸ்தலங்களையும் அறக்கட்டளைகளையும் ஆக்கிரமித்தல் என்றபடி சியோனிஸ நிகழ்ச்சி நிரல் தொடர்கிறது. அண்மையில் கூட பலஸ்தீனில் குத்ஸ் பிரதேசத்திற்கு தேர்தல் நடாத்தப்பட அனுமதிக்கப்படாமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்க விடயமாகும்.

அடுத்தது, பேரம் பேசுதல் மற்றும் சமரசம் செய்யும் கொள்கை உள்ளது. அதாவது பேச்சுவார்த்தை மூலம் பலஸ்தீனியர்களின் உரிமைகளை மீட்டெடுக்க முடியும் என்று நம்பும் பலஸ்தீனியர்களதும் அரேபியர்களதும் கொள்கையாக இது உள்ளது. இதனடிப்படையில் பேச்சுவார்த்தைகள் மற்றும் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன. அதன் வெளிப்பாடாக ஒஸ்லோகேம்ப் டேவிட் ஒப்பந்தம், வாடி அரபா ஒப்பந்தம் உள்ளிட்ட பல புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கையெழுத்திடப்பட்டுள்ளன. அவற்றின் ஊடாக சியோனிஸ்டுகளுக்கு தான் அதிக நன்மைகளும் சலுமைகளும் கிடைக்கப் பெற்றனவே அன்றி பலஸ்தீனர்களுக்கு அல்ல. மூன்றாவதாக, எதிர்ப்பின் கொள்கை உள்ளது. இது அதன் செயற்திறனை நிரூபித்துள்ள கொள்கையாக விளங்குகிறது. இக்கொள்கை பலஸ்தீன ஆக்கிரமிப்புக்கு எதிரான ஆயுத நடவடிக்கையாக ஆரம்பித்தது. அது சில காலம் செல்கையில் பலஸ்தீன ஆக்கிரமிப்புக்கு எதிரான இரண்டு பகுதிகளிலான எதிர்ப்பு கொள்கையாக மாறியது. அதன் விளைவுகளை 2000 இல் லெபனானில் அவதானிக்க முடிந்தது.

பலஸ்தீனில் முன்னெடுக்கப்படும் அடக்குமுறைகளும் ஆக்கிரமிப்புகளும் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும். அதற்காக சர்வதேச சமூகம் குரல் கொடுக்க வேண்டும். குடிமக்களும் குழந்தைகளும் படுகொலை செய்யப்படுவதைக் கண்டிப்பதோடு அவற்றை நிறுத்தவும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். காசாவின் முற்றுகையை முற்றாக முடிவுக்கு கொண்டு வரவும் வெளியேற்றப்பட்டுள்ள பலஸ்தீனியர்கள் தாயகம் திரும்பவும் வழிவகை செய்ய வேண்டும். அப்போது பலஸ்தீனில் அமைதி, சமாதானம் உதயமாகும். அதுவே பலஸ்தீனியர்களின் எதிர்பார்ப்பு.

— முஹம்மத் ரெஸ்வின் கரீம்


சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

SG JT-3529 Bajaj, 2004, SP QO-3969 Bajaj, 2008, Threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 024918

வேலைவாய்ப்பு

312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

எமது நிறுவனத்திற்கு டின்கர் பெயின்டர் தேவை. தங்குமிட வசதிகளுடன். நுகேகொடை. 0777252876. 023627

Repeat Your ad For Better Offers

# வைரவிழாக் காணும் மாத்தளை ஆமினா மகளிர் தேசியப் பாடசாலை



## அதிபரின் ஆசிச் செய்தி



வரலாற்றுப் புகழ்மிக்க மாத்தளை நகரின் ஒளி விளக்காய் திகழும் ஆமினா மகளிர் தேசிய பாடசாலையின் வைரவிழா நிகழ்வுகள் சிறப்பாக ஆரம்பித்து இனிதே நிறைவேற வல்ல அல்லாஹ்வின் ஆசியை முதலில் வேண்டி நிற்கின்றேன்.

1962 ஆம் ஆண்டில் விதைக்கப்பட்ட சிறு விதை இன்று அறுபது ஆண்டுகள் கடந்த நிலையில் பெரு விருட்சமாய் வளர்ந்து ஆழ வேர்விட்டு அகலக் கிளை பரப்பி பூத்துக் குழுங்கி நறுமணம் வீசிக் கொண்டிருக்கிறது.

ஆயிரக்கணக்காண மாணவிகளை தன்னகத்தே கொண்ட இப் பாடசாலை, சமூகம் வேண்டி நிற்கும் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கணக்காளர்கள், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள், பட்டதாரிகள், பல்துறைசார் நிபுணர்களை உருவாக்கி வருகிறது. இச் சாதனையையிட்டு மாத்தளை வாழ் சமூகம் பெருமையடைவதை நான் நன்கறிவேன்.

இத் தருணத்தில் இதுவரைக்கும் இப்பாடசாலையில் வளர்ச்சிக்கு அரும் பங்காற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவிகள், நலன்விரும்பிகள் அனைவரையும் நன்றியுணர்வோடு நினைவு கூறுகின்றேன்.

சமூகத்தின் அரைவாசி பங்கினர் பெண்களாவர். அவர்களின் கல்விக்கு மதிப்பளிப்போம். எம்மிடமுள்ள பிளவுகளை மறந்து பாடசாலையின் நிருவாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.

"ஒற்றுமை எனும் அல்லாஹ்வின கயிற்றை பலமாக பிடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் பிரிந்து விடாதீர்கள்" எனும் குர்ஆன் வசனத்தை மனதில் நினைவு வைத்து ஒற்றுமையாய் ஓரணியாக செயற்படுவோம்.

அதிபர்
**எச். எல். சிராஜுத்தீன்**
*H.L. Sirajudeen – SLPS I*
*DSM (Merit), BA, PGDE, PGDIT, MSc Com. Sci.*

## வைரவிழா ஊடகப் பிரிவுத்துறை பொறுப்பாசிரியரின் வாழ்த்துச் செய்தி



வைரவிழா காணும் மாத்தளை மகளிர் தேசிய பாடசாலையின் வைர விழா ஊடகப் பிரிவு பொறுப்பாசிரியராய் இவ் வாழ்த்துச் செய்தியை அளிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். தனக்கென ஒரு தனித்துவமான பாணியில் நடைபயிலும் எமது பாடசாலையின் சாதனைகள் பற்றி நாடறியும். கல்வியும் இணைப்பாட விதான செயற்பாடுகளும் ஒரு சீராய் பயணிக்க வைப்பதற்கான ஓர் அரிய முயற்சியின் அடையாளமே இவ்வைர விழா கொண்டாட்டம். பொருளாதார நெருக்கடி எமது இக்கொண்டாட்ட நிகழ்வுக்கு பெரிய சவாலாக இருப்பினும் இறையருளால் அனைத்தும் இனிதே நடந்தேறின. இவை அனைத்துக்கும் அடிப்படையாய் இருந்த நிர்வாகத்தினர். கல்வி சார், கல்வி சாரா ஆளணியினர் இப் பாடசாலை சமூகம் அனைவரையும் இவ்வேளை நன்றியுடன் நினைவு கூறுகிறேன்.

***Mrs. Nashebah Fazlullah***
*B.A (Hons) PGDE, N.*
*Dip. in teach., MT (OUSL)*

## முன்னாள் அதிபரின் ஆசிச்செய்தி



வைரவிழாக் காணும் மாத்தளை ஆமினா, தேசியப் பாடசாலைக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமிதம் அடைகின்றேன்.

ஒரு கல்வி நிறுவனம் அறுபது ஆண்டுகள் என்னும் மைல் கல்லையும் தாண்டி, அரும் பெரும் சாதனைகளுடன் வீறு நடை போடுவது என்பது எளிதான காரியம் அல்ல.

இப்பாடசாலையை உயிரோட்டமான கல்வி நிறுவனமாக மாற்றுவதற்காக அரும் பாடுபட்ட, தற்போது சேவையில் உள்ள, ஓய்வு பெற்ற, எம்மிடம் இருந்து மறைந்து விட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவிகள், கொடைவள்ளல்கள், கல்வி அதிகாரிகள், அமைச்சர்கள் அனைவரையும் அன்புடனும் நன்றியுடனும் நினைவு கூறும் தருணம் இது.

அறிவும், திறனும், ஆளுமையும், மார்க்கப்பற்றும் உள்ள சிறந்த பெண்மணிகளைத் தொடர்ந்தும் இப்பாடசாலை உருவாக்க எல்லாம் வல்ல இறைவன் உதவி புரிவானாக!

***Dr Mrs Faudina Zameek***
*B.A(English)..Ph.D in political science.*
*Former principal*

## வைர விழாவை அடையாளப்படுத்திய நிகழ்வுகள்

16.08.2022 – வைர விழா பதாகை திறப்பும் வைர விழா கீதம் வெளியீடும்
25.08.2022 – ஆமினா பசுமை தினம்
05.10.2022 – சிறுவர் தினம்
25.01.2023 – கனிஷ்ட மாணவத் தலைவியர் தினம்
22.02.2023 – சொற்கணை (மாத்தளை மாவட்ட தமிழ் மொழி மூல தேசிய பாடசாலைகளுக்கு இடையிலான விவாதப் போட்டி)
02.03.2023 – சிரேஷ்ட மாணவத் தலைவியர் தினம்
04.03.2023 – பரிசளிப்பு தினம்
07.03.2023 – வர்ண இரவு (வர்ண விருது தினம்)
26.04.2023 – கட்டிடங்களுக்கான பெயர் சூட்டும் நிகழ்வும் திறப்பு விழாவும், சஞ்சிகை வெளியீடு
26.04.2023 – இன்று பாடசாலை வரலாறு அனுபந்தம் வெளியீடும், அதிபர், ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வும்

தயாரிப்பு
**எம். சதுர்தீன் (JP)**
மாத்தளை சுழற்சி நிருபர்







## அதிபர் பட்டியல்

| | |
|---|---|
| **திருமதி. லைலா மொஹிடீன்** (16.01.1962 – 24.01.1963) | **திருமதி. எச்.யூ. ஹனீபா** (1974 – 1975) |
| **திருமதி. சீதா நவநீதகுரு** (05.03.1963 – 16.12.1963) (25.02.1964 – 09.04.1964) | **திருமதி. அப்துல் காதர்** (1975 – 1978) |
| **திருமதி. டிலானி பக்மன்** (24.12.1963 – 24.02.1964) | **திருமதி. ஜி.என். பக்கீர் அலி** (1978 – 1989) |
| **திருமதி. ஏ.வை. சகூர்** (1964 – 1973) | **திருமதி. பரூஜா ஆப்தீன்** (1989 – 2011) |
| **திருமதி. ஹனியா (ஸாலி) கப்பார்** (1973 – 1974) | **திருமதி. பௌடினா ஸமீக்** (01.10.2011 – 25.08.2020) |
| | **எச்.எல். சிராஜுதீன்** (26.08.2020 – 2023.04.27) |

மாத்தளை ஆமினா மகளிர் தேசியப் பாடசாலை வைர விழா கொண்டாடும் இவ்வேளையில் ஆமினா கடந்து வந்த பாதையை நோக்கும் போது ஆரம்ப காலங்களில் மாத்தளையில் முஸ்லிம் கழகம் எனும் ஒரு அமைப்பு காணப்பட்டது. மாத்தளையில் வாழ்ந்த தனவந்தர்களாலும் கல்வி பற்றிய சிந்தனை கொண்டவர்களாலும் இது உருவாக்கப்பட்டது. இவர்களின் முயற்சியால் முதன்முதலில் கொங்காவளை கடைவீதியில் அரபு தமிழ் பாடசாலை எனும் பெயரில் ஒரு கல்விக் கூடம் ஆரம்பிக்கப்பட்டது

இது 08.08.1942 முதல் ஆங்கில பாடசாலையாக இயங்கியது. இதனையடுத்து மர்ஹூம் T.B. ஜாயாவின் முயற்சியால் 1944 இல் கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் கிளையாக இது மாற்றம் பெற்றது.

1946 தொடக்கம் இப்பாடசாலை சுதந்திரமாக இயங்கியது, பின்பு இப் பாடசாலை சாஹிரா என நாமம் சூட்டப்பட்டது. இவ்வாறு இயங்கிக் கொண்டிருக்கும் வேளையில் 1953 ஆம் ஆண்டில் ஆண் மாணவர்கள் படிப்படியாக தாரளந்த பகுதிக்கு மாற்றப் பெற்றனர். பெண் மாணவிகள் மாத்திரம் இப்பாடசாலையில் கற்றனர். இக்காலத்தில் இப்பாடசாலையில் SSC வகுப்புகள் ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் நடைபெற்றன. 12.03.1962 இல் இப்பெண்கள் பிரிவு மொலந்தபிடிய வீதியில் இன்று எமது ஆமினா பாடசாலை அமைந்திருந்த இடத்திற்கு இடம் மாற்றம் பெற்றதோடு ஆமினாவின் தோற்றம் ஆரம்பமாகிறது. அவ்வாண்டு முதல் பெண்களுக்கான தனியான ஒரு பாடசாலையாக இது ஆரம்பமானது. எனினும் அது ஸாஹிரா பெண்கள் பாடசாலை என்றே அழைக்கப்பட்டது. பல்வகை ஆடைகளிலும் பாடசாலைக்கு வருகை தந்த மாணவியர் 1962 ஆம் ஆண்டு முதல் இஸ்லாமிய கலாசாரத்துக்கு உகந்ததான சீருடை அணியும் பழக்கத்திற்கு மாறினர்.

சுமார் ஒரு ஏக்கர் இரண்டு ரூட் விஸ்திரமுள்ள நிலப்பரப்பில் (டி) வடிவத்தில் ஒரு பாடசாலை கட்டடமும் ஒரு சிறிய அதிபர் விடுதியும் காணப்பட்ட நிலையில் 1964.06.11 அன்று ஒரு புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டதுடன் மனையியற் கூடம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டது.

1966 இல் இருந்து எமது பாடசாலையிலேயே பயின்ற மாணவியர் எமது பாடசாலைக்கு நியமனம் பெற்று வந்தமை ஆமினா வின் வளர்ச்சியில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. 1972 தொடக்கம் மாத்தளை மாவட்ட பாடசாலைகளோடு ஒப்பிடுகையில் ஆமினா இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் முன்னிலை வகிக்க துவங்கியது. 1970களில் எமது பாடசாலையில் SSC க்கான விஞ்ஞான பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. ஆய்வுகூட வசதிகள் இல்லாமையினால் சாஹிரா ஆண்கள் பாடசாலை கை கொடுத்து உதவியது.

இக்காலப்பகுதியில் மாணவியர் இருவர் 1966 இல் பேராதனை பல்கலைக்கழகத்திற்கும் 1968 இல் நால்வர் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கும் உள்வாங்கப்பட்டமையை குறிப்பிடலாம்.

இதுவரை காலமும் சாஹிரா மகளிர் கல்லூரி என நாமம் பெற்ற எமது பாடசாலை 1973 மார்ச் மாதம் 23ம் திகதி முதல் ஆமினா மகா வித்தியாலயம் என பெயர் மாற்றம் பெற்றது.

1977 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் இருமாடிக் கட்டடம் ஒன்று நிர்மாணிப்பதற்கான ஏற்பாடுகள் ஆரம்பமாகின, அத்தோடு 1978 இல் உத்தேசவாசிகசாலை கட்டடம் ஒன்றுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நடைபெற்றது.

இக்காலகட்டத்தில் முதலாம் வகுப்பிற்கு 108 மாணவர்களும் பாலர் வகுப்புக்கு 48 மாணவர்களும் உள்வாங்கப்பட்டதோடு மொத்தமாக 806 பேர் கல்வி பயின்றுள்ளனர். 43 ஆசிரியர்கள் கல்வி போதித்தனர். 1979 இல் H.N.C.E வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு பரீட்சைக்கு தோற்றிய 14 மாணவியருள் எட்டு பேர் பல்கலைக்கழக வரம் பெற்றனர்.

நீண்ட நாள் குறையாக இருந்த விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கான நிர்மாண பணிகள் 1991இல் ஆரம்பிக்கப்பட்டது. அதேவேளை 1994.01.21 மத்திய மாகாண கல்வி அமைச்சு உயர்தர விஞ்ஞான பிரிவுகளை ஆரம்பம் செய்ய அனுமதி வழங்கியது. மேற்கண்டவாறு பாரிய வளர்ச்சி அடைந்து வந்த ஆமினாவை கண்ணுற்ற அரச, தனியார் நிறுவனங்களும் கல்வி மேல் ஈடுபாடு கொண்ட தனவந்தர்களும் கட்டடங்கள், ஏனைய வசதிகள் அனைத்தையும் நிர்மாணிப்பதற்கான ஒத்துழைப்பை வழங்கினர்

1995 ஆம் ஆண்டு பத்தாம் மாதம் 12ஆம் நாள் மர்ஹூம் H.M. Ashraf (அமைச்சர்) ஜனாதிபதிக்கு வழங்கிய மகஜரினால் பாடசாலைக்கு முன்னால் இருந்த அரசுக்கு சொந்தமான காணி ஒரு ஏக்கர் அக்காலத்தில் இருந்த அதிபரின் பெரும் முயற்சியால் பாடசாலை வளாகத்துடன் இணைக்கப்பட்டது. இக்காலப் பகுதியில் 1245 மாணவிகளும் 52 ஆசிரியர்களும் கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டதனால் இம்முயற்சி பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரிதும் துணை புரிந்தது.

மேற்படி இரண்டு காணிகளையும் மாணவிகளின் பாதுகாப்பு, ஒழுக்கம் கருதி இணைக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டதாலும் இடையே மொலந்தபிட்டிய வீதி இடையறுப்பதாலும் 16.08.2007 ஆம் ஆண்டு மேம்பாலம் ஒன்றை அமைத்து இணைத்ததன் மூலம் பாடசாலை வளாகம் அழகும் கம்பீரமும் கொண்டதாக மாறியது. மேலும் 22.01.2010 அன்று 52 பேர்ச்சஸ் காணி பாடசாலை வளாகத்தோடு இணைத்துக் கொள்ளப்பட்டதனால் தேவையான கட்டடங்களை அமைத்துக் கொள்ளவும் கேட்போர் கூடம் ஒன்றை அமைக்கவும் உறுதுணையாக அமைந்தது. இவ்வாறு பௌதிக மனித வளத்தில் அபிவிருத்தி அடைந்து வந்த பாடசாலை 8.12.1998 முதல் தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டது.

2012 ஆம் ஆண்டு ஐம்பதாவது அகவையை அடைந்த போது பொன்விழா கொண்டாட்டங்கள் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டன.

பாடசாலையின் கல்விசார் உட்கட்டமைப்பு அபிவிருத்தி 2012இன் மேலும் விருத்தி அடைந்தது. இருமாடிக் கட்டட பணி நிறைவேறியதோடு பாடசாலையில் CCTV Camera முறையால் நிர்வாக முறைமை மேலும் வலுவாக்கப்பட்டது.

எமது பாடசாலையில் நீண்ட காலமாக காணப்பட்ட ஒரு குறைபாடாக கேட்போர் கூடம்,1800 பேருக்கு மேற்பட்டோர் அமரக்கூடிய வகையில் அமைக்கப்பட்டது.தொழில் நுட்ப ஆய்வுக்கூடம், நிர்வாகக் கட்டடத் தொகுதி wellwishers building எனும் இரண்டு மாடி கட்டடத் தொகுதி, ஆசிரியர் விடுதி, மாணவர் தலைவிகளுக்கான அறை முதலியன அமைக்கப்பட்டன.

மாத்தளையின் நகர மையப் பகுதியில் எமது பாடசாலை அமைந்திருப்பதால் மாணவிகள் மாத்திரம் கற்கும் பாடசாலை ஆதலால் அவர்களின் பாதுகாப்பு தொடர்பாக மிகுந்த கவனம் செலுத்தப்பட்டு கிட்டத்தட்ட ஆறு ஏக்கர் நிலம் கொண்ட ஆமினா பரப்பில் பெரும்பாலான பகுதி கருங்கல் மதிலால் உயரக்கட்டப்பட்டது. மேலும் vocational training unit எனும் தொழிற்சார் பயிற்சி வழங்கும் வகுப்புகளும் waiting hall,room to read கட்டடமும் பாடசாலை வளாகத்தினுள் அமையப்பெற்றன. மாணவிகளின் சுகாதாரம் தொடர்பில் அதீத கவனம் செலுத்தப்பட்டு 2012/2018/2019 ஆகிய ஆண்டுகளில் கழிப்பறை தொகுதிகள் (toilet complex) ஏற்பாடு செய்யப்பட்டன. மேலும் உட்கட்டமைப்பு விருத்தி பற்றி சொல்லும்போது கல்லூரியின் கம்பீரத்தை மேலும் உயர்த்திக் காட்ட கம்பீரமான நுழைவாயில் அமைக்கப்பட்டது.

இவ்வாறான பௌதீக வள மேம்பாட்டுடன் பெறுபேறுகளும் அதிக வளர்ச்சி கொள்ளத் தொடங்கியது. 2002 ஆம் வருடம் முதன் முதலில் ஒரு மாணவி மருத்துவ பீடத்திற்கு தெரிவானார். அத்தோடு 2015இல் ஆறு மாணவிகள் 9A's சித்திகளைப் பெற்ற அதே வேலை 2018 ஆம் ஆண்டு 12 மாணவிகள் 9A's சித்திகளைப் பெற்றனர். 2019 ஆம் ஆண்டு 13 மாணவிகள் 9A's சித்தி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்தார்கள்.

2019 ஆம் ஆண்டு அறுபது மாணவிகள் பல்கலைக்கழக வரம் பெற்றார்கள்.

அத்தோடு இணைப்பாடவிதான செயற்பாடுகளை எடுத்துக் கொண்டால் 2016 பாடசாலைகளுக்கு இடையிலான போட்டியில் அகில இலங்கையில் முதலாம் இடத்தை தனதாக்கியது.

2017 ஆம் ஆண்டில் மத்திய மாகாணத்தில் டெங்கு ஆட்கொல்லி நோய் ஒரு பெரும் பரபரப்பை ஏற்படுத்திய காலம் அவ்வாண்டில் மாத்தளை நகராட்சி மன்றத்தால் டெங்கு ஒழிப்பு போட்டி ஒன்று பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட போது எமது பாடசாலையே முதலிடம் பெற்றது.

இவ்வாண்டிலிருந்து எமது மாணவிகள் அகில இலங்கை ரீதியான வலையமட்ட விளையாட்டுப் போட்டியிலும் பங்கு பற்றத்தகுதி பெறத் துவங்கினர். 2018ம் ஆண்டில் எமது அர்ப்பணிப்பு சிந்தனையுள்ள ஆளணியினர் Guru Abimani எனும் கௌரவ விருதும் பெற்றார்கள்.

2020 ஆம் ஆண்டு எச். எல். சிராஜுதீன் இப்பாடசாலையின் அதிபரானார். இவர் காலத்தில் வைர விழா கொண்டாட்டங்கள் வெகு விமர்சையாக நடைபெற்றன. 27.04.2023 அன்று ஓய்வு பெறும் எமது அதிபரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.


























Non acadamic staff


OGA


வைரவிழாக் குழு உறுப்பினர்கள்


Development Officers













SDEC

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்

## விலை மனுக்கோரல் (IFB)

### தேசிய அடையாள அட்டை வழங்குவதற்காக முன் அச்சிடப்பட்ட ஒரு மில்லியன் பொலிகார்பனேட் அட்டைகளை கொள்முதல் செய்தல்

**IFB No: PS/03/PB/PR/05/14/23**

1. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் 14 **ஆம் மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்லை, இலங்கையில்** அமைந்துள்ள வழங்கல் குழுவின் தலைவரினால் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்காக முன் அச்சிடப்பட்ட **ஒரு மில்லியன்** (1,000,000) பொலிகார்பனேட் அட்டைகளை கொள்முதல் செய்வதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.
2. மனுக்கோரலானது **தேசிய மனு கோரல் போட்டி** முறைக்கமைய நடைபெறும்.(NCB)
3. ஆர்வமுள்ள மற்றும் தகுதியான மனுதாரர்கள் **மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி** வரையான காலப்பகுதியினுள் வேலை நாட்களில் 011-2887697 (ca@pubsec.gov.lk) மூலம் **பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் தலைமை கணக்காளரிடம்** மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் மேலும் மனு ஆவணங்களை **நிதிப் பிரிவு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, 14 ஆம் மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்லை, இலங்கை எனும் முகவரியில்** அல்லது (www.pubsec.gov.lk) எனும் முகவரியில் **2023.04.27** முதல் **2023.05.29 ஆம் திகதி மு.ப.9.00 மணிவரை பி.ப.3.00** வரையான காலப்பகுதியினுள் இலவசமாக பரிசீலனை செய்யலாம்.
4. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2023.04.27** ஆம் திகதியிலிருந்து **2023.05.29** ஆம் திகதி வரை வேலை நாட்களில **மு.ப.09.00** மணியிலிருந்து **பி.ப.03.00** மணி வரையான காலப்பகுதியினுள் எழுத்து மூல விண்ணப்பத்தை **கணக்காளர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, 14ஆம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்லையில்** மீள் செலுத்தப்படாத கட்டணமாக **ரூ.47,000.00 (நாற்பத்தி ஏழாயிரம் ரூபாய்)** மனுக் கட்டணத்தைப் பணமாகச் செலுத்துவதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
5. மனு தொடர்பான கூட்டம் **2023.05.12 ஆம் திகதி 14.00** மணிக்கு **கேட்போர் கூடம், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, 14 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லையில்** இடம்பெறும்.
6. மனு **2023.08.29** வரை செல்லுபடியாகும். இலங்கையில் செயல்படும் **ஏதேனும் உரிமம் பெற்ற வணிக வங்கியினால்** வழங்கப்பட்ட **ஐந்து மில்லியன் ஒரு இலட்சத்து** நாற்பத்தைந்தாயிரம் ரூபாய் **(ரூ.5,145,000.00)** மனுப் பாதுகாப்பு பிணையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அனைத்து மனுக்களும் **2023.09.26** ஆம் திகதி வரை செல்லுபடியாகும். விலைமனுக்களை **நிதிப் பிரிவு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, 14 ஆம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்லை இலங்கை** எனும் முகவரிக்கு **2023.05.30** ஆம் திகதி **14.00 மணிக்கு** அல்லது அதற்கு முன்னதாக வழங்கப்பட வேண்டும். காலதாமதமாக கிடைக்கும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் அதே முகவரியில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழு,**
**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு**
**14 ஆம் மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபுத்திபுர வீதி,**
**பத்தரமுல்லை, இலங்கை.**
**2023.04.26**

சுற்றுலாத்துறை அமைச்சு

இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA)

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

**PROVIDING WEB SUPPORT FOR SLTDA**
**CONTRACT No.: SLTDA/ICT/NC/NCB /Web Sup/2022/07R2**

1. இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபைக்கு **Web Support** சேவையை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட முன்மொழிவுகளை அழைக்கின்றார்.
2. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் உரித்தான துறையில் வியாபார பதிவைக் கொண்டிருத்தலும் வேண்டும்.
3. 2023 மே 10 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு ஒன்லையின் மூலமாக (Zoom meeting) விலைமனுக்கூட்டம் நடைபெறுமென்பதுடன் ஆர்வமுள்ள விலைமனுதாரர் விலைமனுக் கூட்டத்தில் பங்கு பெறுவதற்காக விண்ணப்பமொன்றை sltdaproc@srilanka.travel, amilam@srilanka.travel என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு மதியுரை வழங்கப்படுகின்றனர்.
4. 2023 ஏப்ரல் 26 ஆம் திகதியிலிருந்து 2023 மே 16 ஆம் திகதியன்று வரையும் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று sltdaproc@srilanka.travel/amilam@srilanka.travel SLTDA இன் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணமான 7,500 ரூபாவானது இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பெயரில் இலங்கை வங்கியின் கோப்பரேட் கிளையிலுள்ள 7119413 என்ற கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும். (குறிப்பு: ''மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்'' என பணவைப்புத் துண்டில் பணவைப்பாளரின் விபரங்கள் மற்றும் பணவைப்பிற்கான நோக்கம் ஆகியன தயவு செய்து பூர்த்தி செய்யப்படல் வேண்டுமென்பதுடன் மேற்குறிப்பிட்டுள்ள ரொக்கப் பணவைப்புத் துண்டானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பது கட்டாயமானதாகும். பணவைப்பானது ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டுமென்பதுடன் ஏனைய பணவைப்பு முறைமைகள் அனுமதிக்கப்படமாட்டாது)
6. 2023 மே 17 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக முத்திரையிடப்பட்ட தொழில்நுட்ப மற்றும் நிதியிடல் விலைமனுக்கள் இரு பிரதிகளில் ஒன்றில் பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, பெறுகைப் பிரிவு (4 ஆம் மாடி), இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, இல. 80, காலி வீதி, கொழும்பு-03 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேற்குறிப்பிட்டுள்ள முகவரியில் நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Providing Web Support Service for SLTDA" என எழுதப்படல் வேண்டும்.
7. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், கொழும்பு-03, காலி வீதி, 80 ஆம் இலக்கத்திலுள்ள SLTDA இன் 4 ஆம் மாடியிலுள்ள பெறுகைப் பிரிவில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்கள் அவைகளின் செல்லுபடியாகும் திகதிக்கப்பால் இருபத்தெட்டு நாட்களுக்கு (28) குறையாத தன்மையிலமைந்த செல்லுபடியாகும் தன்மையிலுள்ள இரண்டு இலட்சத்து அறுபத்தையாயிரம் இலங்கை ரூபா (265,000 இலங்கை ரூபா) பெறுமதியான விலைமனு உத்தரவாதமொன்றுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனு பிணையானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படுவதுமானதுமான வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.
10. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக்கான உதவி பணிப்பாளரிடமிருந்து 0112426800 (நீடிப்பு: 305,277,303) என்ற தொலைபேசி தொடர்பு இலக்கத்திலிருந்தும் amilam@srilanka.travel என்ற இலத்திரனியல் அஞ்சல் முகவரியிலிருந்தும் பெற்று SLTDA இன் பெறுகைப் பிரிவில் இணையதளத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
11. இலங்கை அரசாங்கத்தின் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டம் மற்றும் அதன் பின்னரான வர்த்தமானி அறிவித்தல்களுக்கமைவாகவும் (பிசிஏ-3 படிவம்) இலங்கையின் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட விலைமனுதாரருக்கான பதிவுச் சான்றிதழானது அனைத்து விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
12. சுற்றுலாத்துறை அமைச்சு, இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அமைச்சின் கட்டுப்பாட்டிலுள்ள வேறேதாவது நிறுவனங்களின் ஊழியரொருவருடன் நெருங்கிய குடும்ப உறவை வைத்திருக்கும் ஊழியரொருவர் அல்லது நிறுவனமொன்று மற்றும்/அல்லது தனிநபரொருவர் இந்த ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதியை இழந்து விடுவார்.

12. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும். மேலும், SLTDA எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளதுடன், விலைமனுக்களின் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக வளமுள்ள விலைமனுதாரர்களுக்கு ஏற்படும் ஆகுசெலவுகள் அல்லது எந்தவொரு செலவினங்களுக்கும் SLTDA ஆனது பொறுப்பேற்கமாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல.: 80, காலி வீதி,**
**கொழும்பு-03.**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

விசேட அதிரடிப்படை

(இலங்கை பொலிஸ்)

## விலைமனுக்கோரல் (IFB)

### ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் போலீஸ் அணிதிரட்டல் கடமைகளுக்காக தோட்டாக்களை கொள்வனவு செய்தல்

**PS/03/PB/PR/08/19/2023**

01. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, 14வது மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்ல, இலங்கை அமைச்சின் பெறுகை குழு, தலைவரினால் பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுகின்றது.

| தொடர் இல. | விபரம் | அளவு |
|---|---|---|
| 1 | Rounds 7.62x39mm Ammunition | 250,000 |
| 2 | Rounds 9 x19mm Ammunition | 28,000 |
| 3 | Rounds 12.7 x 108mm Ammunition | 10,000 |
| 4 | Rounds 7.62 x 54mm Ammunition | 10,000 |
| 5 | Rounds 7.62 x 51mm Ammunition | 2,500 |
| 6 | 38mm (Signal ammunitions colored – Red, Yellow, Green) | 500 |
| 7 | Tear gas canisters | 6,500 |
| 8 | Tear gas – hand grenades | 700 |
| 9 | Smoke grenades (colored – Red, Yellow, Green) | 150 |
| 10 | Flash – bang grenade / Thunder – flashes | 150 |
| 11 | Illumination flares | 50 |
| 12 | Soft Kinetic Projectiles (SKPs) – (UN specifications) | 7,000 |

02. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

03. இதற்காக ஆர்வம் காட்டும் தகுதியான மனுதாரர்கள் மேலதிக தகவல்களை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, 14வது மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்ல, கணக்காளர் (பெறுகை) அவர்களிடம் பெற்றுக்கொள்ளவதுடன், **2023.04.27 ஆம் திகதி முதல் 2023.05.29 ஆம் திகதி வரை** பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்கள் தவிர்ந்த வார நாட்களில் **மு.ப. 09.00** மணி முதல் **பி.ப. 03.00** மணி நேரம் வரை அதே முகவரியில் அல்லது எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில (**www.pubsec.gov.lk**) மனு ஆவணங்களை இலவசமாக பரிசீலனை செய்ய முடியும்.

04. தகுதியான அனைத்து மனுதாரர்களும் பொருட்களை வழங்குவதற்கான சட்டப்பூர்வ உரிமையைப் பெற்றிருக்க வேண்டும். மனுதாரர் தனது நிறுவனத்தை வணிகமாக பதிவு செய்திருக்க வேண்டும், மேலும் உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவின் பெருமதி **ரூ.05 மில்லியனுக்கும்** அதிகமாயின் 1987 இலக்கம் 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் **(Public Contract Act)** பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட மனுவுடன் இந்த பதிவுச்சான்றிதழின் நகல் பிரதிகள் இணைக்கப்படாதவிடத்து மனுக்கள் தகுதி நீக்கம் செய்யப்படும். மனுதாரரின் பெயர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது. மேலதிக விபரங்கள் மனு ஆவணத்துடன்

05. பின்வரும் முகவரியில் எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை **2023.04.27** ஆம் திகதியிலிருந்து **2023.05.29** ஆம் திகதி வரை பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்களைத் தவிர வார நாட்களில் **மு.ப.09.00** முதல் **பி.ப.03.00** மணிவரை சமர்ப்பித்து இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்களால் மீளச்செலுத்தப்படாத **ரூ.40,000.00 (நாற்பதாயிரம் ரூபாய்)** ஆவணக்கட்டணத்தைச் செலுத்தி அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். ஒரு நிறுவனத்திற்கு மனுகோரல் விண்ணப்ப படிவம் ஒன்று மட்டுமே வழங்கப்படும்.

06. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை பிரதிகளுடன் **2023.05.30** ஆம் திகதி **பி.ப.02.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் 14வது மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்ல, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடுதல் அல்லது மனுக்கள் திறக்கப்படும் நேரத்திற்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். மனுக்கள் இடப்பட்டுள்ள உறையின் இடது பக்கமேல் மூலையில் ஒப்பந்த இலக்கத்தினை தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கால தாமதமாக கிடைக்கப்படும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மேலும் தனிப்பட்ட முறையில் சமூகமளிக்கும் மனுதாரர் அல்லது அவரது உரிமம் பெற்ற பிரதிநிதிக்கு முன்னிலையில் **2023.05.30** ஆம் திகதி **பி.ப.02.00** மணிக்கு மனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற பின்னர் மனுக்கள் திறக்கப்படும் வேளையில் பங்கேற்கும் மனுதாரரின் பிரதிநிதிகள் மனுதாரரிடமிருந்து எழுத்துப்பூர்வ அனுமதியை கட்டயாம் பெற்றுத்தல் வேண்டும். மனுதாரரின் எழுத்துப்பூர்வ அனுமதியை வழங்கத் தவறிய எந்த முகவரும் அச்சந்தர்ப்பத்தில் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

07. சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களின் செல்லுபடியாகும் காலம் **91 நாட்கள்** வரையாகும்.

08. அனைத்து மனுக்களும், ரூ.3,400.000.00 பெறுமதியான மனுப் பிணையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும், மேலும் சமர்ப்பிக்கப்பட்ட மனுப் பிணையானது பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

    i. ஒரு நிதி நிறுவனமாக மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட உத்தரவாதமாக இருத்தல் வேண்டும்.

    ii. மனுப் பாதுகாப்புப் படிவம் மனு ஆவண தொகுப்பின் IV ஆம் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள ஆவணத்தின்படி இருத்தல் வேண்டும்.

    iii. மனு பிணையானது செயளாலர்,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு **"Secretary / Ministry of Public Security"** எனும் பெயரில் இருத்தல் வேண்டும்.

    iv. மனுப்பிணை **2023.05.30** ஆம் திகதி முதல் **2023.09.26** வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். (மனுக்கள் திறக்கப்படும் கால எல்லை **119 நாட்கள் வரை**)

09. **2023.05.10 ஆம் திகதி பி.ப.2.00** மணிக்கு **பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு,** 14வது மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்ல, விசேட அதிரடிப்படையின் கேட்போர்கூடத்தில் முன்மனுக் கூட்டம் நடைபெறும்.

10. வழங்கப்படும் நிதி ஒழுங்குமுறைகள் மற்றும் திறைசேரி சுற்றறிக்கைகளில் ஏதேனும் திருத்தங்களைச் செய்வதற்கான உரிமையை கொள்முதல் குழுவினருக்கு உண்டு. கொள்முதல் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதி தீர்மானமாக காணப்படும்.

11. மனுதாரர்களின் விசேட கவனத்திற்கு:

    மனு ஆவணங்களை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்ள **caminlofinance@gmail.com** மின்னஞ்சல் முகவரியைத் தொடர்பு கொள்ளவும் அல்லது **0112887916** என்ற தொலைநகல் இலக்கத்திற்கு தேவையான மனு ஆவணங்கள் பற்றிய தகவலை அனுப்பவும் மற்றும் முன் அறிவிப்பை வழங்கவும் வாடிக்கையாளருக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

12. மேலதிக விபரங்களை பின்வரும் முகவரியில் அல்லது தொலைபேசி எண்களினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

**விலாசம் :-**
தலைமை கணக்காளர்
14வது மாடி, "சுஹுருபாய",
ஸ்ரீ சுபூதிபுர வீதி,
பத்தரமுல்ல.

**தொலைப்பேசி இலக்கம :-**
பிரதான - 011-2887697
பொது - 011-2886067
பெக்ஸ், - 011- 2887784/2887916

**தலைவர்,**
**அமைச்சின் பெறுகை குழு,**
**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு,**
**14வது மாடி, "சுஹுருபாய",**
**ஸ்ரீ சுபூதிபுர வீதி,**
**பத்தரமுல்ல.**



## சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி பகிரங்க ஏல விற்பனை

சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி மூலம் பெற்றுக்கொண்ட தங்கக் கடனில் ஈடு வைக்கப்பட்ட கால எல்லைக்குள் பணத்தை செலுத்தத் தவறியதால், அந்தத் தங்கக் கடன் வசதிக்காக பத்திரங்களாக அடமானம் வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்ட திகதிகளில் மு.ப. 10.00 க்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

திகதி மற்றும் ஏல விற்பனை இடம்

திகதி : **09/05/2023**

இல.343, மாத்தளை வீதி, தம்புள்ளை.
இல.328, ரஜின சந்தி, தம்புத்தேகம.
இல.05, மைத்திறிபால சேனநாயக்க மாவத்தை, அநுராதபுரம்.
இல.80, யாழ்ப்பாணம் வீதி, மதவாச்சி.
இல.28, 30, இரண்டாம் குறுக்குத் தெரு, வவுனியா.
இல.86, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
A 9 வீதி, கரடிபோக்கு சந்திக்கு அருகில், கிளிநொச்சி.
இல.34, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
இல.498, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
இல.163C/1/1, கொழும்பு வீதி, நீர்கொழும்பு.
விக்டோரி கட்டிடம், சிலாபம் வீதி, வென்னப்புவ.
இல.179/1/1, ஹெட்டிபொல வீதி, குளியாப்பிட்டி.
இல.65, மாஹவ வீதி, நிக்கவரட்டி
இல.42, மிஹிந்து மாவத்தை, குருணாகல்
இல.140/B, கொழும்பு வீதி, குருணாகல்.
இல.311/J, ரன்வல சந்தி, கேகாலை.
இல.103/C, நீர்கொழும்பு வீதி, கிரியுள்ள.

திகதி : **10/05/2023**

இல.14, மங்கல வீதி, கம்பஹா.
இல.837E, தலங்கம வடக்கு, மாலபே.
இல.579, காலி வீதி, வெள்ளவத்தை.
இல.348, காலி வீதி, பாணந்துறை.
இல.362, கோட்டை வீதி, ராஜகிரிய.
இல.34, ஹொரன வீதி, பிலியந்தல.
இல.188, பிலியந்தல வீதி, மஹரகம.
இல.173, இரத்தினபுரி வீதி, ஹொரன.
இல.16, ஹைலெவல் வீதி, ஹோமாகம.
இல.546, காலி வீதி, தெற்கு களுத்துறை, களுத்துறை.
இல.29, ஸ்டேசன் வீதி, தெஹிவளை.
இல.30A, நாவல வீதி, நுகேகொட.
இல.106/1, துட்டுகெமுனு வீதி, கொஹுவளை.

திகதி : **11/05/2023**

இல.64, மாகொல வீதி, கிரிபத்கொடை.
இல.493, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
இல.120, நீர்கொழும்பு வீதி, ஜாஎல
இல.143 J, கண்டி வீதி, கடவத்த.
இல.310/2A, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 13.
இல.49, சைமன்ட்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10.
இல.115/1, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய.
முத்துகுமாரண கட்டிடம், கீழ் வீதி, திஸ்ஸமகாராம.
இல.46/1/1, கொழும்பு வீதி, கலுவெல்ல, காலி.
இல.01, அநகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை.

திகதி : **12/05/2023**

இல.103, டி.எஸ் சேனநாயக்க மாவத்தை, அம்பாறை.
இல.131, நுவரெலிய வீதி, கம்பளை.
இல.271/1, 1ஆவது மாடி, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி.
இல.186. டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, கண்டி.
இல.18/2, பதியதலாவ வீதி, மஹியங்கனை.
இல.80, கண்டி வீதி, நுவரெலியா.

எந்த ஒரு முன் அறிவித்தலும் இன்றி ஏல விற்பனையை இரத்துச் செய்வது அல்லது ஒத்திவைக்கும் உரிமை சிங்கர் பினான்ஸ் (லங்கா) நிறுவனத்தின் வசமானதாகும்.

தங்கக் கடன் முகாமையாளர்
**SINGER FINANCE**
இல. 498, ஆர்.ஏ.டி மேல் மாவத்தை, கொழும்பு 03.


Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer


# பெறுகை அறிவித்தல்

## போதனா வைத்தியசாலை-மஹமோதர, காலி

2023/ 2024 ஆண்டிற்காக காலி, மஹமோதர போதனா வைத்தியசாலைக்கு வளிச்சீராக்கல் இயந்திர சேவையாற்றல் மற்றும் பராமரிப்பு வேலை ஆகியவற்றை வழங்குவதற்காக அரச மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து 2023.05.16 ஆம் திகதி வரையும் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்கள் அழைக்கப்படுகின்றன. 2023.05.15 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் உரித்தான மாதிரி படிவங்கள் 3,5000 ரூபா கட்டணத்தை செலுத்திய பின்னர் இந்த வைத்தியசாலையின் தலைமையலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்கோரலை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Quotation for Air-Conditioner Servicing and Maintenance" என குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் தலைவர், உள்ளூர் பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, மஹமோதர காலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம். மேலதிக விபரங்கள் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளப்படலாம்.

**தலைவர்,**
**உள்ளூர். பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**மஹமோதர,**
**காலி.**
**091-2222261.**

### புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம்

### சுற்றாடல் அமைச்சு

# வெற்றிடம் - பணிப்பாளர் (சட்டம்) HM 1-2

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகமானது 1992ஆம் ஆண்டில் 32ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருள் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட நியதிகள் சட்டச் சபையாகும். மேற்குறிப்பிடப்பட்ட பதவிக்காக பணியகத்தில் நிலவும் வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வெளிவாரி அபேட்சகர்கள்**

**கல்வி மற்றும் தொழில்சார் அனுபவம் (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்ட இளமாணிப் பட்டத்தைப் (LLB) பெற்றிருத்தல் மற்றும் சட்டத்தரணியொருவராகவிருத்தல்

**அத்துடன்**

இயைபுடைய சட்டத்துறையில் பட்டப் பின்படிப்பு பட்டமொன்றை (Masters) பெற்றிருத்தல்

**மற்றும்**

சட்டத்துறை வேலைகளில் ஆகக் குறைந்தது பதின்மூன்று (13) வருட கால அனுபவம் அல்லது இயைபுடைய பதவியில் கூட்டுத்தாபனம்/ நியதிகள் சபை / நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனமொன்றில் செயல்முறை பயிற்சி

**அல்லது**

2. இயைபுடைய சட்டத்துறையில் சட்டப் பின்படிப்புத் தகைமையுடன் (Masters) சட்டத்தரணியொருவராகவிருத்தல்

**மற்றும்**

சட்டத்துறை வேலைகளில் ஆகக் குறைந்தது பதின்மூன்று (13) வருட கால அனுபவம் அல்லது இயைபுடைய பதவியில் கூட்டுத்தாபனம்/ நியதிகள் சபை / நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனமொன்றில் செயல்முறை பயிற்சி

**உள்ளக அபேட்சகர்கள்**

2. மேற்படி வெளிவாரி அபேட்சகர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்

**அல்லது**

இயைபுடைய பதவிக்குரித்தான சட்டத்துறை வேலைகளில் ''முகாமைத்துவ வகுதியில்'' (MM 1-1) தரம் 1 ஆகக் குறைந்தது ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் ஒரு சட்டத்தரணியாக பதிவு செய்திருத்தல்.

02/2016ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருத்தின் பிரகாரம் சம்பள அளவு MM 1-2 ரூபா **81,670 -15X2,270-115,720** + வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் ஏனைய ஒப்புதல் அளிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

(தொழில்சார் கொடுப்பனவு (5/2017ஆம் இலக்க MSD சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

**வயதெல்லை:**

35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்கள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**பதவிக்குரித்தான பொதுவான நிபந்தனைகள்**

- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் தமது அடிப்படைச் சம்பளத்தின் 10% ஊழியர் சேமலாப நிதிக்கு வழங்குதல் வேண்டும். பணியகத்தினால் 12% மற்றும் ஊ.ந.பொ.நிதியத்திற்கு 3% மும் பங்களிப்புச் செய்யப்படும்.
- 1/2015ஆம் இலக்க பொது தொழில்முயற்சி சுற்றுநிருபத்தில் வழங்கப்பட்டுள்ள விதிகளின் பிரகாரம் எரிபொருள் கொடுப்பனவு அங்கீகாரத்துடன் ஒரு வாகனம் அல்லது போக்குவரத்துக் கொடுப்பனவு
- வைத்தியசாலை மருத்துவ காப்புறுதி திட்ட வசதிகள் உரித்துடையதாகும்.
- வெளி நோயாளர் மருத்துவ பற்றுச்சீட்டு கட்டணங்களை மீளப்பெறும் வசதிகள் உரித்துடையதாகும்.
- அரசாங்க சேவை / நியதிகள் சட்டச் சபை விண்ணப்பதாரர்கள் தமது நிறுவனத்தின் தலைமையின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் தொடர்பான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினரல்லாத இருவரின் முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்தை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
- கல்வி மற்றும் ஏனைய இயைபுடைய சான்றிதழ்களின் புகைப்படப் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு தமது விண்ணப்பப் படிவத்தை பின்வரும் முகவரிக்கு **2022 மே 10ஆம்** திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குறும் பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

**தலைவர்,**
**புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம்,**
**இல. 569, எப்பிட்டமுல்ல வீதி,**
**பிட்டகோட்டே.**

## மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

### மக்கள் வங்கி - மாத்தளை பிராந்திய தலைமைக் காரியாலயம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் வங்கி மாத்தளை பிராந்திய தலைமைக் காரியாலயத்தின் கிளைகள்/சேவை மையங்களில் 31.12.2021 வரை அடகு வைக்கப்பட்டுள்ள 12.05.2023 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டுப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடக்கம் ஏலத்தில் விற்கப்படும்.

| | | |
|---|---|---|
| ஏல விற்பனை நிகழும் திகதி | 13.05.2023 மற்றும் 14.05.2023 | 13.05.2023 மற்றும் 14.05.2023 |
| ஏல விற்பனை நிகழும் இடம் | மாத்தளை கிளை வளாகம் | தம்புள்ளை கிளை வாளாகம் |
| அடகு வைக்கப்பட்டுள்ள கிளைகள் | மாத்தளை, உக்குவெல, ரத்தோட்ட, பல்லேபொல | தம்புள்ளை, நாவுல, கலேவெல, வில்கமுவ |
| அடகு வைக்கப்பட்டுள்ள சேவை மையங்கள் | திருகோணமலை வீதி, கொங்காவெல, லங்கா பீங்கான் பிரிவு, வறகாமுறை, கைகாவல, யடவத்த | இனாமலுவ, மடாட்டுகம, மடவல உல்பொத்த, தெவஹுவ லக்கல பல்லேகம |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச் செயற்பாட்டை ஒத்தி வைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்,**
**மங்கள் வங்கி,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம் - மாத்தளை,**
**தொலைபேசி இல. 066-2234212, 066-2222032**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk

## 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (460ஆம் அத்தியாயம்) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**காணி அமைச்சின் இலக்கம் - 4-3/10/2019-MV/465-F**
**எனது குறிப்பு இல - D/VH/LAND/LA/ACQUI/3-2/351/2**

காணி எடுத்தல் சட்டத்தின் கீழ் அரசு எடுத்துக் கொண்டுள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் விபரங்கள் சம்பந்தமாக அச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் உரிமை மற்றும் நஷ்ட ஈட்டு பரீட்சைகள் 2023.05.04ஆந் திகதி பொல்பித்திகம பிரதேச சபை அலுவலகத்தில் என்னால் நடைபெறவுள்ளது என்பதை பொது மக்கள் அறிந்து கொள்வதற்கு இவ்வாறு அறிவிக்கப்படுகின்றது. இக் காணிகளுக்கான உரித்துடையவர்கள் சமுகமளிக்கவும் மேலதிக விபரங்களுக்கு 2022.10.12ஆம் திகதி G 2301/36 மற்றும் 2022.09.15ஆம் திகதி G 2297/55 இலக்க அதிவிசேட வர்த்தமானியை பார்க்கவும்.

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்** | **குருநாகல்** | | |
| **பிரதேச செயலாளர் பிரிவு** | **பொல்பித்திகம** | | |
| **கிராம சேவகர் பிரிவு** | **348 கிரிபமுனேகம** | | |
| **வரைபட இல.** | **கிராமத்தின் பெயர்** | **துண்டு இல.** | **முழு காணியின் விஸ்தீரணம்** |
| இ.கி.வ. இலக்கம் 7இல் உள்வரைபட இல. 7 தாள் இலக்கம் 9இல் | தம்பேயாய | 302-304,306-312 வரை | ஹெக்டயார் 0.7335 |
| கடத்திரல் வ. இலக்கம் 421477 இல் தொகுதி இல. 1 தாள் இலக்கம் 2 | தம்பேயாய | 153,155,156,158,159, 162,163,165,167,168, 169 வரை | ஹெக்டயார் 0.0979 |

**டி.எம்.எஸ். தஸநாயக்க,**
**பிரதேச செயலாளர்,**
**பொல்பித்திகம.**

**பிரதேச செயலாளர் காரியாலயம் பொல்பித்திகம.**
திகதி: 2023.04.24

# பெறுகை அறிவித்தல்

## ஹோமாகம பிரதேச சபை

## கேள்வி அழைப்பு (NCB)

## ஹியூம் பைப் வழங்குதல்

2023ஆம் ஆண்டிற்காக இப் பிரதேச சபைக்கு தேவையான பல்வேறு அளவிலான ஹியூம் பைப் வழங்குவதற்காக உள் நாட்டில் செயற்படும் தகமையுள்ள வழங்கநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. சகல ஹியூம் பைப்களும் SLS 452:1979 NP 2 தரத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டிருப்பதுடன் விலைமனுக்கள் 2023.12.31ம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
02. பெறுகையுடன் சம்பந்தப்பட்ட விவரமான மாதிரிகள், நிபந்தனைகள் மற்றும் அறிவுருத்தல்கள் உள்ளடங்கிய பெறுகை ஆவணங்களை 2023.04.26 முதல் பி.ப. 9.00 முதல் 2023.05.04 பி.ப. 3.00 வரையான அலுவலக வேலை நாட்களில் மீளளிக்கப்படாத ரூ. 2500.00 கேள்வி ஆவணக் கட்டணத்தை ஹோமாகம பிரதேச சபை தலைமையகத்தின் கணக்குப் பிரிவிற்கு செலுத்தி கேள்வி தாரரின் எழுத்து மூல வேண்டுதலின் பேரில் கேள்விதாரர்களுக்கு அல்லது பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதிகளுக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
03. விலைமனுக் பத்திரங்கள் 02 பிரதிகளுடன் பூர்த்தி செய்து வேறு வேறு உறைகளில் இட்டு பொறியிட்டு (மூலப்பிரதி/ நகல் பிரதியென பெயர் குறிப்பிடப்பட்டு) ஒரு உறையில் இட்டு பொறியிட்டு அனுப்புதல் வேண்டும்.
04. உறையின் இடது பக்க மேல் மூலையில் 'ஹியூம் பைப் வழங்குதலுக்கான விலைமனுக்கள்' என்று குறிப்பிட்டு 2023.05.08 பி.ப. 2.00 இற்கு முன் கிடைக்குமாறு செயலாளர் மற்றும் சபையின் அதிகார செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி ஹோமாகம பிரதேச சபை, நீதிமன்ற வீதி, ஹோமாகம என்ற பெயரில் பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். கையோடு ஒப்படைக்கும் கேள்விப் பத்திரங்கள் சபை செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
05. கேள்வி ஆவணங்களை சமர்ப்பிக்கு் போது மீளளிக்கப்படும் கேள்வி பிணைத் தொகையாக ரூ. 15000.00 தொகையை பிரதேச சபை தலைமையக காசாளரிடம் காசாகச் செலுத்திய பற்றுச் சீட்டை அல்லது இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த வங்கியொன்றின் மூலம் 2023.05.29 வரை செல்லுபடியாகுமாறு தலைவர், ஹோமாகம பிரதேச சபை பெயரில் பெற்றுக் கொண்ட ரூ. 30,000.00 நிபந்தனையற்ற வங்கிப் பிணை குறியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
06. முறையான மதிப்பீட்டு முறைமையூடாக தேர்ந்தெடுக்கப்படும் வழங்குநரால் செயற்பாட்டு பிணையாக ரூ. 150000.00 தொகையை 2023.12.31 வரை சபையில் வைத்திருத்தல் வேண்டும்.
07. விலைமனுக்களை திறத்தல் 2023.05.08 பி.ப. 2.00 இற்கு பிரதேச சபை தலைமையகத்தில் இடம்பெறுவதுடன் அதற்காக கேள்விதாரருக்கு அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு சமுமகளிக்கலாம். விலை மனுக்களை வழங்குதல் அல்லது நிராகரிக்கும் உரிமை முழுமையாக ஹோமாகம பிரதேச சபைக்கு உரியது.
08. கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்தல் 2023.04.26 மு.ப. 9.00 முதல் 2023.05.04 பி.ப. 3.00 வரை பிரதேச சபை தலைமையக கணக்குப் பிரிவில் மேற்கொள்ளலாம்.
09. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் தொலைபேசி இல. 011-5633991 மூலம் சபையின் வேலை அதிகாரியை அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**ஹோமாகம பிரதேச சபை.**
திகதி: 2023.04.24

## மத்திய சுற்றாடல் அதிகாரசபை

**பதுளை மாவட்டத்தில் எல்ல பிரதேச செயலக பிரிவின் எல்ல, கும்பல்வெல கோரளை, நாவலகம, கலபீடகந்த மற்றும் எல்ல தோட்ட பிரதேசத்தில் உத்தேசிக்கப்பட்ட ஹோட்டல் திட்ட கருத்திட்டத்திற்கான ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை (ஆ.சு.ப) அறிக்கையின்**

### இறுதி தீர்மானம் தொடர்பான பொது அறிவித்தல்

**தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23 ஆஆ(4) இன் கீழான அறிவித்தல்**

குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், விசேட விதிகளுக்கமைவாக, மேற்கூறப்பட்ட திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான, திருத்தியமைக்கப்பட்ட 1993 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்ட (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான விதிமுறை) ஒழுங்குவிதி 9(i) இற்கு அமைவாக, பண்டரவளை வெலிமடை வீதி 'தியபிபில சந்தபாய' எனும் விலாசத்திலமைந்த திரு. ரோய் டிக்சன் என்பவருக்கு அங்கீகாரத்தினை வழங்க மத்திய சுற்றாடல் அதிகார சபையானது தீர்மானித்துள்ளது என்பதனை பொதுமக்கள் யாவருக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய சுற்றாடல் அதிகார சபை**
**"பரிசரபியச"**
**இல.104,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

## மத்திய சுற்றாடல் அதிகாரசபை

**பதுளை மாவட்டத்தில் எல்ல பிரதேச செயலக பிரிவின் எல்ல பசறை வீதி, பட்டியகும்புரகம, சதர்லேன்ட் தோட்ட பிரதேசத்தில் உத்தேசிக்கப்பட்ட நிலம் அமைக்கும் திட்ட கருத்திட்டத்திற்கான ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை (ஆ.சு.ப) அறிக்கையின்**

### இறுதி தீர்மானம் தொடர்பான பொது அறிவித்தல்

**தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23 ஆஆ(4) இன் கீழான அறிவித்தல்**

குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், விசேட விதிகளுக்கமைவாக, மேற்கூறப்பட்ட திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான, திருத்தியமைக்கப்பட்ட 1993 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்ட (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான விதிமுறை) ஒழுங்குவிதி 9(i) இற்கு அமைவாக, பண்டாரவளை ஹல்பே, பதுளை வீதி, ஊவா ஹல்பேவத்தை தேயிலை தொழிற்சாலை எனும் விலாசத்திலமைந்த, "98" Holdings (Pvt) Ltd இன் பணிப்பாளருக்கு அங்கீகாரத்தினை வழங்க மத்திய சுற்றாடல் அதிகார சபையானது தீர்மானித்துள்ளது என்பதனை பொதுமக்கள் யாவருக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய சுற்றாடல் அதிகார சபை**
**"பரிசரபியச"**
**இல.104,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல**


The Housewives' companion
Classifieds on
Daily News

# அயர்லாந்தின் சவாலான ஓட்டங்களுக்கு இலங்கை அணி வலுவான பதிலாட்டம்





இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் அயர்லாந்து தனது குறுகிய டெஸ்ட் வரலாற்றில் இன்னிங்ஸ் ஒன்றில் அதிக ஓட்டங்களை பெற்று இலங்கை அணிக்கு சவால் கொடுத்துள்ளது.

காலியில் நடைபெற்றுவரும் இந்த டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று (25) தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த அயர்லாந்து அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 492 ஓட்டங்களை பெற்றது.

இது அந்த அணி டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் பெற்ற அதிகபட்ச ஓட்டங்களாகும். முன்னதாக 2018 ஆம் ஆண்டு டுப்லினில் நடந்த பாகிஸ்தான் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸ் ஒன்றில் பெற்ற 339 ஓட்டங்களுமே அதிகமாக இருந்தது.

இந்நிலையில் நேற்று தேநீர் இடைவேளைக்குப் பின்னர் தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி ஆட்ட நேர முடிவின்போது விக்கெட் இழப்பின்றி 81 ஓட்டங்களை பெற்றுள்ளது. நிஷான் மதுஷ்க 41 ஓட்டங்களுடனும் அணித்தலைவர் திமுத் கருணாரத்ன 39 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

அயர்லாந்து அணி முதல் இன்னிங்ஸில் அதிக ஓட்டங்களை பெற்றிருக்கும் நிலையில் அதனை சமாளிக்க ஆட்டத்தின் மூன்றாவது நாளான இன்றைய தினத்தில் இலங்கை அணி ஓட்டங்களை அதிகரிக்க வேண்டி உள்ளது.

அயர்லாந்து அணி 319 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்த நிலையிலேயே நேற்று தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்தது. எனினும் நேற்றைய நாளின் நான்காவது பந்திலேயே 80 ஓட்டங்களை பெற்ற லோர்கன் டியுகர் ஆட்டமிழந்தார். இந்நிலையில் முதல்நாளில் காயம் காரணமாக பாதியிலேயே வெளியேறிய போல் ஸ்டர்லிங் தனது கன்னி சதத்தை பெற்றார். 181 பந்துகளுக்கு 103 ஓட்டங்களை பெற்ற அவர் அசித்த பெர்னாண்டோவின் பந்துக்கு ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் ஏழாவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த கேர்டிஸ் கெம்ப்பர் மற்றும் அன்டி மக்பிரின் 89 ஓட்டங்களை பகிர்ந்துகொண்ட அயர்லாந்து அணியின் மொத்த ஓட்டங்கள் 470ஐ தாண்டியது. இதன்போது தனது கன்னி டெஸ்ட் சதத்தை பெற்ற கெம்ப்பர் 229 பந்துகளில் 15 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் 111 ஓட்டங்களை பெற்றார். மக்பிரின் 35 ஓட்டங்களை குவித்தார்.

துடுப்பாட்டத்திற்கு சாதகமான ஆடுகளத்தை அயர்லாந்து வீரர்கள் சிறந்த முறையில் பயன்படுத்தியதால் இலங்கை பந்துவீச்சாளர்கள் விக்கெட்டுகளை விழ்த்த முடியாமல் களைப்படைந்தனர்.

எனினும் சுழற்பந்து வீச்சாளர் பிரபாத் ஜயசூரிய 58.3 ஓவர்கள் பந்துவீசி 174 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தினார். வேகப்பந்து வீச்சாளர்களான விஷ்வ பெர்னாண்டோ மற்றும் அசித்த பெர்னாண்டோ இருவரும் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

ஆட்டத்தின் மூன்றாவது நாள் இன்றாகும்.

## இலங்கைக்கு வரும் தென்னாபிரிக்க ஏ குழாம் அறிவிப்பு



மூன்று ஒருநாள் மற்றும் இரண்டு நான்கு நாள் போட்டிகளில் ஆடுவதற்காக இலங்கை வரும் தென்னாபிரிக்க ஏ குழாம் நேற்று (25) அறிவிக்கப்பட்டது.

டோனி டி சோர்சி அணித் தலைவராகச் செயற்படவிருப்பதோடு சுக்ரி கன்ராட் பயிற்சியாளராக செயற்படவுள்ளார்.

இந்தக் குழாத்தில் பல அனுபவ வீரர்கள் சேர்க்கப்பட்டிருப்பதோடு அதில் கீகன் பீட்டர்சன், கைல் வரினே, கெரால்ட் கோட்ஸீ மற்றும் டுரிஸ்தான் ஸ்டப்ஸ் ஆகிய வீரர்கள் அடங்குகின்றனர்.

இலங்கை சுற்றுப்பயணம் பற்றி கருத்து வெளியிட்ட பயிற்சியாளர் கன்ராட் கூறியதாவது, 'இந்தக் குழாம் எமது கிரிக்கெட் ஆட்டத்தின் வளர்ந்து வரும் வீரர்கள் யார் என்பதை வெளிக்காட்டும் அணியாகும். குழாத்தில் இளம் வீரர்கள் உட்பட அனைத்து வீரர்களுக்கும் இந்த சுற்றுப்பயணம் அவர்களின் திறமையை வெளிப்படுத்துவதற்கான சிறந்த சந்தர்ப்பமாக அமையும்' என்று குறிப்பிட்டார்.

15 பேர் கொண்ட இந்தக் குழாம் எதிர்வரும் மே மாதம் 31ஆம் திகதி இலங்கையை நோக்கி சுற்றுப்பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது. இதில் வரும் ஜூன் 4,6 மற்றும் 8ஆம் திகதிகளில் ஒருநாள் போட்டிகள் நடைபெறவுள்ளதோடு தொடர்ந்து இரண்டு நான்கு நாள் போட்டிகள் முறையே ஜூன் 12 மற்றும் ஜூன் 19அம் திகதிகளில் ஆரம்பமாகவுள்ளன.

தென்னாபிரிக்க ஏ குழாம்: டோனி டி சோர்சி (தலைவர்), கோர்பின் பொஸ்ச், மத்தியு பிரிட்ஸ்கே, டெவால்ட் பிரேவிஸ், கெரால்ட் கோட்சீ, சுபைர் ஹம்சா, ஜோர்டன்ஹெர்மன், ட்செபோ மோர்கி, செனுரன் முத்துசாமி, கீகன் பீட்டர்சன், சினெதம்பா கசிலே, லுதோ சிபம்லா, ட்ரிஸ்தான் ஸ்டப்ஸ், கைல் வரினே, லிசாட் வில்லியம்ஸ்.

## டெஸ்ட் சம்பியன்சிப்புக்கு இந்திய குழாம் அறிவிப்பு



உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாடும் இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியில் ரஹானேவுக்கு மீண்டும் வாய்ப்பு கிடைத்துள்ளது. ரஞ்சி கிண்ணத் தொடரில் சிறப்பாக செயல்பட்ட வேகப்பந்துவீச்சாளர் ஜெய்தேவ் உனட் கட்டிற்கும் அணியில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் இந்தியா – அவுஸ்திரேலிய அணிகள் மோதுகின்றன. ஜூன் 7ஆம் திகதி இங்கிலாந்தின் தலைநகரான லண்டனில் உள்ள ஓவல் மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெறவுள்ளது.

17 பேர் கொண்ட அவுஸ்திரேலிய அணி கடந்த வாரம் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**இந்திய டெஸ்ட் குழாம்:**

ரோஹிட் சர்மா (தலைவர்), சுப்மான் கில், செட்டேஸ்வர் புஜாரா, விராட் கொஹ்லி, அஜிங்கியாரஹானே, கே.எல். ராகுல், கே. எஸ். பாரத், ரவிச்சந்திரன் அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, அக்ஷார் பட்டேல், மொஹமட் சமி, மொஹமட் சிராஜ், உமேஷ் யாதவ், குல்தீப் யாதவ், ஜெய்தேவ் உனட் கட்.

## பாக். வெடிப்புகளில் 12 பேர் உயிரிழப்பு



வட மேற்குப் பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத எதிர்ப்பு அலுவலகம் ஒன்றில் இடம்பெற்ற இரட்டை வெடிப்புகளில் குறைந்தது 12 பேர் கொல்லப்பட்டுள்ளனர். எனினும் தாக்குதல் ஒன்றுக்கான எந்த ஆதாரமும் இல்லை என்று குறிப்பிட்டிருக்கும் பொலிஸார் மின்சார கோளாரினால் இந்த வெடிப்புகள் நிகழ்ந்திருக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளனர். உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் பொலிஸாராவர்.

ஸ்வாத் பள்ளத்தாக்கு பகுதியிலேயே இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது. இந்தப் பகுதி முன்னர் இஸ்லாமியவாத போராட்டக் குழுக்கள் கைவசம் இருந்த நிலையில் அந்தக் குழுக்கள் 2009இல் இங்கிருந்து துரத்தப்பட்டன. வெடிப்புகளால் 40க்கும் அதிகமானவர்கள் காயமடைந்திருப்பதோடு கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.

பிரதமர் ஷெஹ்பாஸ் ஷரீப் ஆரம்பத்தில் இந்த வெடிப்புகளை தற்கொலைத் தாக்குதல் என்று குறிப்பிட்டபோதும், பின்னர், வெடிப்பு எவ்வாறு நேர்ந்தது என்பது பற்றி விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். போராட்டக் குழுக்கள் கடுமையாக இயங்கி வரும் இந்தப் பள்ளத்தாக்கில் பாகிஸ்தான் பயங்கரவாத எதிர்ப்புப் படை வலுவாக நிலைகொண்டுள்ளது.

2012இல் நோபல் பரிசு வென்ற மலாலா யுசுபாசி மீது இந்தப் பள்ளத்தாக்கிலேயே தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச செய்திகள்

## வெளிநாட்டினரின் வெளியேற்றத்திற்கு மத்தியிலும் சூடானில் 'போர் நிறுத்தம்'



மேற்கு, அரபு மற்றும் ஆசிய நாடுகள் தமது பிரஜைகளை வெளியேற்றும் நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்து வரும் நிலையில் சூடானில் 72 மணி நேர போர் நிறுத்தம் ஒன்றுக்கு போர் புரியும் தரப்புகளுக்கு இடையே இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் சவூதி அரேபியாவின் மத்தியஸ்தத்திலான போர் நிறுத்தம் ஒன்று திங்கட்கிழமை (24) நள்ளிரவுடன் ஆரம்பிக்கப்பட்டதாக சூடான் இராணுவம் தெரிவித்தது.

இரண்டு நாட்களாக இடம்பெற்ற தீவிர பேச்சுவார்த்தைக்குப் பின்னர் கடந்த திங்கட்கிழமை போர் நிறுத்த உடன்படிக்கை எட்டப்பட்டதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனியோ பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

எனினும் கடந்த வாரத்தில் எட்டப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கைகளை சூடான் இராணுவம் மற்றும் துணை இராணுவப் படை கடைப்பிடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சூடான் இராணுவம் மற்றும் துணைப் படைக்கு இடையே கடந்த ஏப்ரல் 15ஆம் திகதி வெடித்த மோதலில் இதுவரை குறைந்தது 427 பேர் கொல்லப்பட்டனர். மருத்துவமனைகள் மற்றும் ஏனைய சேவைகள் செயலிழந்து குடியிருப்புப் பகுதிகள் போர் வலயங்களாக மாறியுள்ளன.

தலைநகர் கார்டூமில் மில்லியன் கணக்கான மக்கள் வீடுகளில் சிக்கித் தவிப்பதோடு உணவு மற்றும் குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இந்தியா மற்றும் பல நாடுகளும் தமது பிரஜைகளை சூடானில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன. எனினும் மக்கள் செறிவாக வாழும் பகுதிகளிலும் மோதல் நீடிப்பதால் இந்த வெளியேற்ற நடவடிக்கைகளில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

நோன்புப் பெருநாளின்போதும் சூடானில் சண்டை நிறுத்தம் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது முறையான வெற்றியைத் தரவில்லை. அதுபோன்ற சூழல் தற்போதும் தொடருமா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

சூடானில் மனிதநேயப் பணிகளைத் தொடர்வதற்கும் அங்கிருந்து வெளியேற முயல்வோருக்கு வழியமைத்துக் கொடுப்பதற்கும் சண்டை நிறுத்தம் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## உலக மக்கள் தொகையில் இந்த வாரம் சீனாவை பின்தள்ளி இந்தியா முதலிடம்

ஐ.நா புதிய தகவல்



இந்த வார இறுதியில் உலக மக்கள் தொகையில் சீனாவை பின்தள்ளி இந்தியா முதலிடத்திற்கு முன்னேறும் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஏப்ரல் முடிவில் இந்தியாவின் மக்கள்தொகை 1,425,775,850 ஐ எட்டும் என்று புதிய தரவு காட்டுகிறது. இந்த ஆண்டு நடுப்பகுதியிலேயே சீனாவை முந்தி இந்தியா உலக மக்கள்தொகையில் முதலிடத்தைப் பிடிக்கும் என்று ஐ.நாவின் மற்றொரு அமைப்பு குறிப்பிட்டிருந்தது.

கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒன்றுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையினர் இந்த ஆசிய நாடுகளில் உள்ளனர்.

'சீனா மிக விரைவில் உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடு என்ற தனது அந்தஸ்த்தை இழக்கும்' என்று ஐ.நாவின் பொருளாதார மற்றும் சமூக விவகார திணைக்களம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.நா மக்கள்தொகை நிதியம் கடந்த வாரம் வெளியிட்ட அறிவிப்பில், 2023 நடுப்பகுதியில் சீனாவை விடவும் இந்தியாவில் 2.9 மில்லியன் மக்கள் அதிகமாக இருப்பார்கள் என்று குறிப்பிட்டது.

சீனாவில் பிறப்பு வீதம் அண்மையில் வீழ்ச்சி கண்டதோடு, 1961க்குப் பின்னர் முதல் முறையாக கடந்த ஆண்டு அதன் மக்கள்தொகை சுருங்கியது.

இந்த நூற்றாண்டின் இறுதிக்கு முன்னர் சீன மக்கள்தொகை 1 பில்லியனுக்குக் கீழ் வீழ்ச்சி அடையும் என்று ஐ.நா குறிப்பிட்டுள்ளது. 'இதற்கு மாறாக இந்திய மக்கள்தொகை பல தசாப்தங்களுக்கு தொடர்ச்சியாக வளர்ச்சி அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது' என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் 1950 இல் ஒரு பெண் சராசரியாக 5.7 பிள்ளைகளைப் பெற்ற நிலையில் தற்போது அது 2.2 ஆக இந்தியாவிலும் கூட கருவுறுதல் விகிதம் வீழ்ச்சி கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் நவம்பரில் உலக மக்கள்தொகை 8 பில்லியனைத் தாண்டவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்தோனேசியாவில் சக்திவாய்ந்த பூகம்பம்



இந்தோனேசியாவின் சுமத்ராவுக்கு மேற்கே உள்ள தீவுகளை 7.1 ரிச்டர் அளவில் சுனாமி உலுக்கியதை அடுத்து அங்குள்ள குடியிருப்பாளர்கள் சுனாமி அச்சம் காரணமாக மேட்டுப் பகுதிகளை நோக்கி ஓட்டம்பிடித்தனர். சில மணி நேரங்களின் பின்னர் சுனாமி எச்சரிக்கை அகற்றப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை அதிகாலை 3 மணி அளவில் மென்டாவாய் தீவுகளுக்கு அருகில் 15.5 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த பூகம்பம் பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உயிரிழப்புகளோ அல்லது மோசமான சேதங்களோ பதிவாகவில்லை.

'நாம் நிற்பதற்கோ அல்லது வெளியே வருவதற்கோ முடியாத அளவுக்கு பூகம்பம் சக்தி வாய்ந்ததாக இருந்தது. நாம் வீட்டை விட்டு வெளியே வர தடுமாறியதோடு சுவர்களை பிடித்து நின்றோம்' என்று உள்ளூர் குடியிருப்பாளரான 34 வயது பட்ரிஸ் சனெனே தெரிவித்தார். இந்தோனேசிய புவியியல் மையம் சுனாமி எச்சரிக்கையை விடுத்த நிலையில் இரண்டு மணி நேரத்தின் பின்னர் அது அகற்றிக்கொள்ளப்பட்டது.

2004 ஆம் ஆண்டு சுமத்ரா தீவின் அச்சே மாகாணத்தை தாக்கிய 9.1 அளவில் தாக்கிய பூம்பம் காரணமாக ஏற்பட்ட சுனாமியால் இந்தோனேசியாவில் மாத்திரம் 170,000க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஏப்ரல் மாதம் 26ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.